வரலாறு

தேவர் மலைச் சண்டேசுவரர்

JL
V211m N93
N94
192797

192797

With Best Compliments From :

Grams : 'SHIVAUTO'

Phone : 43138 & 41900
Telex : 0455 - 355

SHIVA
AUTOMOBILES (P) LTD.,

Post Box No. 999,
7, Bye Pass Road,
5, Tollgate, Subramaniapuram,
Jamal Mohamed College Post,
TIRUCHIRAPALLI - 620020.

Authorised Dealer for :

"MAHINDRA & MAHINDRA LIMITED"

FOR THEIR RANGE OF VEHICLES : CJ, MM, NC,
COMMANDER, ARMADA AND FJ SERIES,
SPARE PARTS AND ACCESSORIES
FOR THE DISTRICTS OF
TIRUCHIRAPALLI, THANJAVUR, PUDUKKOTTAI,
NAGAI QUIDE MILLETH AND SOUTH ARCOT.

வரலாறு

இதழ் 3

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
24 அக் 1994
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

அரையாண்டு
ஆய்விதழ்

ஆகஸ்ட் 1994

வெளியிடுவோர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்''

இதழ் உருவாக்கம்

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

இரா. கண்ணையன்
மேலாளர்

192797
சென்னை-600 008
V211 m N93
N94

''செய்வது துணிந்து செய்''

எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

வரலாறு இரண்டாம் இதழ் பெற்றிருக்கும் பரவலான வரவேற்பு மகிழ்வளிக்கிறது. ஒரு முயற்சியாகத் தொடங்கிய பணி நல்லோரின் வாழ்த்துடன் இன்று தவமாகியுள்ளது. அறிஞர்களும் ஆர்வலர்களும் வரலாற்றுக்கு அஞ்சல் வழி காட்டியிருக்கும் அன்பான அரவணைப்பு மேன்மேலும் சிறக்கச் செயற்படும் உறுதியைத் தந்துள்ளது. அந்த உறுதியின் வெளிப்பாடாய் வரலாறு மூன்றாம் இதழ் உங்கள் கைகளில்.

பலமுறை கள ஆய்வுகள் மேற்கொண்டு பெறப்பட்ட தரவுகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. பல சிக்கல்களையும் புதிர்களையும் விடுவித்துத் தீர்வு காணச் செய்த இந்த ஆய்வு புதிய கல்வெட்டுகள் சிலவற்றைப் பெற்றுத் தந்ததுடன் புதிய அணுகுமுறைகளையும் கற்றுத் தந்தது. எந்தத் தரவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிறகே கொள்ளப்படவேண்டுமென்ற உண்மையை இக்கட்டுரை வழி உணரலாம். இதழ் குறித்த கருத்தோட்டங்கள் அன்புள்ள உங்களுக்காய் மலர்ந்துள்ளது.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு இந்த இதழில் தொடங்கு கிறது. இந்த ஆய்வுத் தொடரைப் படிக்கத் தொடங்கும் அன்பர்கள் குறைகளைச் சுட்டிக்காட்டுவதுடன், விட்டுப்போன பகுதிகளாக எதை யேனும் உணர்ந்தால் அருள்கூர்ந்து எழுதியனுப்புங்கள். வரலாறு அவற்றை வெளியிட்டு மகிழும். இந்தத் தொடர் முழுமையானதொரு ஆய்வாக அமைய இத்துறை சார்ந்த, சாராத அனைத்து அறிஞர்களின் ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெரிதும் வேண்டுகிறோம். இத்தொடருக்கான இலக்கிய முயற்சிகள் பல்துறை சார்ந்த புதிய தரவுகளைப் பலவாய்த் தந்துள்ளன. அவற்றை வாய்ப்பமையும் போதெல்லாம் வரலாறு வெளியிட்டு மகிழும்.

உழைப்பு குன்றிவரும் இந்த நாளில் வரலாறு இதழின் உதவி ஆசிரியர் செல்வி மு. நளினி தம்முடைய கடின உழைப்பிற்காகக் குன்றக்குடி திருமடத்தின் பாராட்டைப் பெற்றிருக்கிறார். மணமேற் குடியில் நடந்த குலச்சிறையார் விழாவில் தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் செல்வி மு. நளினி திருக்கோளக்குடியில் மேற் கொண்ட ஆய்வுப் பணிகளைப் பாராட்டிக் கல்வெட்டுக் கலைச்செல்வி என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

இந்த மகிழ்வை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வரலாறு, செல்வி மு. நளினி மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற வாழ்த்துகிறது.

அன்புடன்,
இரா. கலைக்கோவன்.

இந்த இதழில் ...

1. புதிய கல்வெட்டுகள் பக்கம்

1. மேலப்பழுவூர் சுந்தரேசுவரர் கோயிற் கல்வெட்டுகள் 1
2. கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயிற் கல்வெட்டுகள் 4
3. சோழபுரம் கல்வெட்டு 9
4. அழுந்தூர்க் கல்வெட்டுகள் 11
5. நாலாட்டின் புதூர்க் கல்வெட்டு 15
6. முடுக்கு மீண்டான் பட்டி கண்மாய்க் கல்வெட்டு 15
7. அல்லித்துறைக் கல்வெட்டு 16
8. புங்கவர் நத்தம் கல்வெட்டு 21
9. புள்ளமங்கைக் கல்வெட்டுகள் 22
10. தூசி மாமண்டூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிற் கல்வெட்டுகள் 25
11. பாவூர் சத்திரம் கல்வெட்டு 26
12. திருவிசலூர்க் கல்வெட்டுகள் 26
13. திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் 32
14. பாஞ்சாலங்குறிச்சிக் கல்வெட்டு 36
15. நரசமங்கலம் சிவன் கோயிற் கல்வெட்டு 36
16. செங்கற்பட்டு மாமண்டூர் மாரியம்மன் கோயில் பலகைக் கல்வெட்டு 37
17. செங்கற்பட்டு மாமண்டூர் மண்டுகநாதரான பிச்சீசுவரர் கோயிற் தூண் கல்வெட்டுகள் 39

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. நரசமங்கலம் கல்வெட்டுகள் 40

3. செப்பேடுகள்

1. கூத்தூர் செப்பேடு 47

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. தேவர் மலைக் குடைவரை 57
2. தென்னிந்திய வரலாற்றில் காலப்பகுப்பு 67
3. மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள் 74

5. ஆய்வுத் தொடர்கள்

1. தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு 113

6. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் 121
2. நூல் மதிப்புரை 126
3. யாவரும் கேளிர் 128
4. அன்புள்ள உங்களுக்கு 131
5. கட்டுரையாளர்கள் 133

புதிய கல்வெட்டுகள்

1. மேலப்பழுவூர் சுந்தரேசுவரர் (பகைவிடை ஈசுவரம்) கோயிற் கல்வெட்டுகள்

அர. அகிலா, அ. அப்துல் மஜீது

மேலப்பழுவூர் பழுவேட்டரையர்களின் ஆட்சிக் காலத்தில் மன்னு பெரும் பழுவூர் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதியில் பழுவேட்டரையர்களின் காலத்தில் இரண்டு கோயில்கள் இருந்தன. ஒன்று பகைவிடை ஈசுவரம். மற்றொன்று கண்டன் மறவனால் கட்டப்பட்டு முதற் குலோத்துங்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்ட திருத்தோற்றமுடையார் கோயில். இப்போது பகைவிடை ஈசுவரம் மட்டுமே உள்ளது. திருத்தோற்றமுடையார் கோயில் காலப்போக்கில் அழிந்து போய் அதன் கற்கள் பகைவிடை ஈசுவரத்திலுள்ள அம்மன் கோயிலைக் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன.[1] இக்கோயில் வளாகத்திலிருந்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் ஏற்கனவே படியெடுத்த பல புதிய கல்வெட்டுகளுள் சில இங்கு இடம் பெற்றுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி: பழுவேட்டரையர் கண்டன் மறவனாரின் போகியார் அழியாநிலை பகைவிடை ஈசுவரத்துக் கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்கப் பத்துக் கழஞ்சு பொன் கொடையளித்தார். மேலப்பழுவூர் அந்நாளில் மன்னு பெரும் பழுவூர் என்று சிறப்புடன் அழைக்கப் பட்டது.

காலம்: முதலாம் இராசராசரின் ஆறாம் ஆட்சியாண்டு, கி. பி. 991.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜராஜகேச₀ரிபந்மற்க்கு யாண்டு ஆற[ா*]வ

2 து குன்ற கூற்றத்து மன்னுப் பெரும் பழுவூர்ப் பகைவிடை

3 ஈச்₀வரத்து மஹ[ா*]தே₃வர்க்கு அடிகள் பழுவேட்டரையன் கண்டன்

1. இரா. கலைக்கோவன், பழுவூர்ப்புதையல்கள், கழக வெளியீடு, சென்னை, 1989, பக். 96–122.

4 [ம]றவ நார் பே[ர*]கியார் அழியா நிலை . . லி பாதிரியேன் இரவும் பக

5 [லு]ம் எரிய சந்திரா[தி]த்தவல் எரிய ஒரு ெ[நா]ந்தா விளக்குக்கு வைத்த பொன்

6 பத்து இப்பொன் பதி[ன் க]ழஞ்சுங் கொண்டு நொந்தா

7 — —

8 [பன்மாகே]ஹச்ுவர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் கருவறை மேற்குப் பட்டிகை.

செய்தி: கோயிலில் நந்தா விளக்கெரிக்க வீர நானி என்பார் நிலக்கொடை. இக்கொடை அளிக்கப்பட்ட காலத்தில் மேலப்பழுவூரை ஆண்ட மன்னர் பழுவேட்டரையர் கண்டன் மறவனார். கோயிலில் ஸ்ரீகார்யமாக இருந்தவர் கோனடிகள். கல்வெட்டில் விழா வீதியும், திருவெளி பட்டாலகன் தோட்டமும் குறிக்கப்பெறுகின்றன. இவ்வீர நானியின் மற்றொரு கல்வெட்டு அவனி கந்தர்ப்ப ஈசுவர கிரகத்தின் வடவாயில் ஸ்ரீகோயில் மேற்குச் சுவரில் காணப்படுகிறது. இது ஏற்கனவே படியெடுக்கப்பட்ட கல்வெட்டாகும்.[1]

காலம்: முதலாம் இராசராசர், கி. பி. 985–1014.

1 [ஸ்வ]ஸ்திஸ்ரீ சாலை கலமறுத்த கோராஜராஜகேசரிபந்ம[ற்*]க்கு யாண்டு — — அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவநார்க்காய் ஸ்ரீகார்ய்ய(ம்)மாரா[ய்*]கிந்ற கோயில் கோனடிகள் மே

2 [நா]யகத்து சந்த்ராதித்தவல் பகல் இரவும் எரிய வைத்த நொந்தா — — ஹத்து மேற்கும் விழா வீதி தெருவுக்கு வடக்கும் திருவெளி பட்டாலகன் தோ

3 [ட்ட]த்துக்கு தெற்கு பங்கு அரையும் இதிநால் தேவதானங்களில் வந் — — வத்தேந்[2] நக்கன் வீரநானியேந்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் உள்மண்டபத் தூண், கீழிருந்து இரண்டாவது சதுரம்.

செய்தி: தூணை எடுப்பித்தவரின் பெயராக இருக்கவேண்டும்.

காலம்: கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

---

1. ARE 384 of 1924.
2. வைத்தேன் என்று படிக்கவும்.

1 காசி விச்ச	4 நாட்டு ே
2 ாதிர நா	5 வளான்
3 ன அம்ப	

நான்காம் கல்வெட்டு

இடம்: மீனாட்சியம்மன் கோயில் உள்மண்டப மேற்குக் குமுதம்.

செய்தி: திருத்தோட்டமுடைய மகாதேவர் கோயிலில் மூன்று நந்தா விளக்குகள் எரிப்பதற்காகப் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் முப்பது கழஞ்சு பொன் கொடையளித்தார். இக்கொடைப் பொருளை ஏற்றுக் கொண்ட மேலை நகரத்து சங்கரபாடியார் நாள் தோறும் உரி நெய் கொண்டு விளக்கெரிக்க ஒப்புதலளித்தனர். இந்த நெய் கோயிலில் பயன்படுத்தப்பட்ட தேவர் நாழி என்னும் முகத்தலளவையால் அளக்கப்பட்டு வழங்கப்பட்டது. இக்கொடை நிகழ்ந்த போது கோயிலில் ஸ்ரீகார்யமாக இருந்தவர் மங்கலத்தைச் சேர்ந்த நக்கன் மாறபிரான்.

காலம்: உத்தம சோழரின் பதினாறாம் ஆட்சியாண்டு, கி.பி. 984.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபன்ம[ற்*]க்கு யாண்டு உத்தம சோழ[ர்க்*]கு யாண்டு பதி[ன்*] ஆறாவது குன்ற கூற்றத்து மன்றுப் பெரும் பழுவூர் திரு[த்*]தோட்டம் உடைய மஹ[ா*] தேவ

2 ற்க்கு அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவ(ன்)நார் வைத்த நொந்தா விளக்கு இரடு[1] 3க்கு நிசதி தேவர் நாழியால் உரி நெய் அ[ட்*]டுவதாக

3 வைத்த பொன் 30-ம் இ[ப்*]பொன் முப்பதின் கழஞ்சும் மங்கலத்து கௌசிகந் நக்கன் மாறபிரான் ஆராச்சியில் இப் பொன் கொண்டு நிச

4 தம் உரி[ய்] நெய் எண்ணெ[ய்*] அட்டுவிதாக ஆநோம் [மே*]மலை நகரத்து சங்கரபாடியோம் இவை பந்மாஹேச்வர ரக்ஷை

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: சுந்தரேசுவரர் கோயிலுக்கு எதிரிலுள்ள பிள்ளையார் திருமுன் முகப்புச் சுவரின் மேற்பகுதி.

செய்தி: கோயிலை நிறுவிய பெருமகனார் மேலப்பழுவூர் நாட்டாரான நாராயண ரெட்டியார்.

---

1 மூன்று என்று இருக்க வேண்டும்.

காலம் : கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டாகலாம்.

1	சன்னதிப் பி	6	நாறாயண ரெ
2	ள்ளையார்	7	ட்டியார் திருப்[ப*]
3	கோவில்	8	ணி உபை
4	மேலப் பழுவூர்	9	யம் சிவம
5	நாட்டார்	10	யம்

---

2. கீழப்பழுவூர் திருஆலந்துறையார் கோயிற் கல்வெட்டுகள்

மு. நளினி, அர. அகிலா

பழுவேட்டரையர்களின் ஆட்சிக் காலத்தில் சிறு பழுவூர் என்னும் பெயரில் வழங்கிய ஊர்ப் பகுதியே இப்போது கீழப்பழுவூராகி யுள்ளது. இங்குப் பழுவேட்டரையர்கள் காலக் கோயில்கள் இரண்டு உள்ளன. ஒன்று ஆலந்துறையார் கோயில். மற்றொன்று இதனருகில் முற்றிலுமாய்ப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அழிந்து போய் நிற்கும் மறவனீசுவரம். ஆலந்துறையார் திருக்கோயிலில் இருந்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் ஏற்கனவே பல புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளது. அண்மைக் கால ஆய்வுகள் மேலும் பல புதிய கல்வெட்டுகளை வெளிப்படுத்தி யுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம் : மையக்கோயில் உள்மண்டபத் தரையில் பதிக்கப் பட்டுள்ள கற்பலகை.

செய்தி : பாப்பு ரெட்டியார் செய்தளித்த புண்ணியாவசனக் கல்.

காலம் : கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

உ புண்ணியாவசன கல்லு மினுக்க பாப்பு ரெட்டி புண்ணியம் உ

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மகாமண்டபத்தின் கிழக்குத் தாங்குதளக் கபோதம்.

செய்தி: திருவாலந்துறைத் திருக்கோயிலுக்குச் சிறுபழுவூரைச் சேர்ந்த சாவாந்தி நாராயண நாராயணன் மனைவியார் ஊரன் சுவரி

என்பார் நிலமொன்றை விற்றுத் தந்தார். இதற்கு விலையாகப் பழுவூர் நகரக் கல்லால் அளந்து ஏழு கழஞ்சு பொன் தரப்பட்டது. இப்பெருமாட்டிக்கு முதுகண்ணாய் இருந்து விற்பனையை முடித்துத் தந்தவர் நாராயண நாராயணன். இந்த விற்பனையின்போது இக் கோயிலில் ஸ்ரீகார்யமாய் இருந்தவர் கௌசிகன் நக்கன் மாறபிரான். பத்தாம் நூற்றாண்டு அந்தணப் பெண்கள் நில உரிமை பெற்றிருந்த சமுதாய நிலைக்கு இக்கல்வெட்டு மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

காலம்: முதலாம் இராசராசரின் பத்தாம் ஆட்சியாண்டு, கி. பி. 995.

1 [ஸ்வ]ஸ்திஸ்ரீ காந்தளூர்ச் சாலை கலமறுத்த கோவிராஜராஜ கேஸரிபந்ம[ற்*]க்கு யாண்டு 10ஆவது குன்ற கூ[ற்*]றத்து ப்₃ரஹ்மதே₃யம் சிறுபழுவூர் சாவாந்தி நாராயண நாராய ண[ன்*] ப்₃ரஹ்மணி ஊரன் சுவரி — — — வூர் திருவாலந் துறை[ற] — — — து இவூர் செங்குளத்து தூம்பின் கீழ் மேல் கழநி புறவாக்கான் கரை நான் விற்று குடுத்த நிலத்துக்கு கீழ்பார் கெல்லை உள் சிறுவாக்காலுக்கும் நாராயண பசுவதி நிலத்து

2 [க்]கு மேக்கும் தென்பார்(ற்) கெல்லை இதேவர் நிலத்துக்கு வடக்கும் மே[ல்*]பார் கெல்லை உள் சிறுவாக்காலுக்கு கிழக் கும் வடபார் கெல்லை புறவாய்க்கா(ல்)லுக்கு தெ[ற்*]க்கும் இவன் சத்த — — — சிங்கொ — — மாவு[ம்] இ வாக்கால் — — — வர் நிலத்துக்கு மேற்கும் தென்பார் கெல்லை பா(ல்)லாஸ்ரீயன் நாராய[ணி]ரவி நிலத்துக்கு வடக்கும் மீபா[ர்*] கெல்லை[யி]ல் திரு[வி]க்ரமன் நாராயணச் சோமாசி யார் ப்₃ரஹ்மணி

3 நிலத்துக்கு கிழ[க்கு*]ம் வடபாற் கெல்லை வார்க்கியன் இரவி வடுகன் அநுப₄விக்கின்ற நிலத்துக்கும் இவ்விசைத்த பெருநான் கெல்லையுள்ளகப்பட்ட நிலம் மிகுதிக் குறைமை உள்ளடங்க நிலம் — — — மாகாணி — — — ஆகத் தடி இரண்டினால் — — — லைப் பொன் தி(ய்)ப்பொக்கு செம் பொன் கழைஞ்சில் போத்ததுப் பழுவூர் நகரக் கல்லால் கொண்ட பொன் எழு கழஞ்சரையும் ஆவணக்களியே கைச் செல கொண்டு விலைக்கற வி

4 ற்று வி(ல்)லை ஆவணஞ் செய்து குடுத்தேன் திருவாலன்(த்) துறை சண்டேச்₂வர[ற்*]க்கு ஊரன் சுவரியேன் இ நிலத்துக்கு இதுவேய் விலை ஆவணமும் பொருள் மாவறுதி பொருள்

சிலவோலை — — — சிலவே[ா] — — — து பொருள் மாவறுதி — — — க்கற விற்றுப் பொருள் அற கொண்டு விற்று விலை ஆவணஞ் செ[ய்*]து குடுத்தேன் திருவாலந் துறை சண்டேச்ₒவர[ற்*]க்கு ஊரன் சுவரியேன் இவ(ள்) ளுக்கு முதுகண்ணாய் இன் நிலம்

5 கு[டு*]த்து இப்பொன் கொண்டுக் குடுத்தேன் இவன் . . . ணனே நாராயண நாராயணநேந் விற்றுக் குடுத்தேன் இக்கோயில் ஸ்ரீகாரியம் ஆராய்கிற கௌசி — — —

மூன்றாம் கல்வெட்டு

இடம் : மேலது, குமுதம்.

செய்தி : முழையூர் நாட்டு பிரமதேயமான சாத்தமங்கலத்தைச் சேர்ந்த பாலாசிரியன் கீரன் கேசுவன் என்பார் திருவாலந்துறை மகாதேவர் கோயிலுக்கு இரண்டு மா நிலம் விற்றுக் கொடுத்தார். இதற்கு விலைப் பொருளாகப் பழுவூர் நகரக் கல்லால் அளக்கப்பட்ட திப்பொக்குச் செம்பொன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

காலம் : முதலாம் இராசராசரின் பத்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 995.

1 — — — — [காந்த*]ளூர்ச் சாலை கலமறுத்த கோவிராஜ ராஜகேசரிபந்மற்கி யாண்டு 10 ஆவது முழையூர் நாட்டு ப்₃ரஹ்மதே₃யம் சாத்தமங்கலத்துப் பாலாஸ்ரீ(ரி)யன் கீரன் கேசு — — — [ப்ர₃]ஹ்மதே₃யஞ் சிறு பழுவூர்த் திருவாலந் துறை சண்டே₃ச்ₒவரர்க்கு நான் விற்றுக் குடுத்த நில(ம்) மாவது சிறு பழுவூர் மேலைக் கருங்குளத்துத் தென்வாய் மடைக் கீழ் நாக₃ாவற்றுக்கு

2 — — — —[பா]ற் கெல்லை கீரன் மாதேவந் நிலத்துக்கு மேற்கும் தெந்பாற்க் கெல்லை பாலாசிரியந் நாராயணந் இரவி — — — — இசைத்[த*]ப் பெருநாந் கெல்லையுள்ளகப் பட்ட நிலம் . . . ஒரு மாவரையும் இவ்வாய்க்காலிந் கீழை நான் விற்கின்ற அரை மாவுக்கு கீழ்பாற் கெல்லை நாராய

3 — — — — [தெ]ன்பாற் கெ[ல்*]லை வாக்கா(ல்)லுக்கு வடக் கும் மீபாற் கெல்லை பா(ல்)லாஸ்ரீயன் இராமன் தமைய — — — இரண்டு இரண்டின் நீர் [நிலம்] இரு மா இ[ந்*] நிலம் இரண்டு மாவும் விற்றுக் குடுத்து கொண்ட விலை பொருள் திப்பொக்கு செம்பொன் பழுவூர் நகர கல்லா[ல்*] கொண்டப் பொன் அறு

4 — — — — ஆவணக்களியே கைச் செ(ல்)லக் கொண்டு இவிரண்டு மாச் செ[ய்*]யும் விற்றுக் குடுத்தேந் திருவாலந் துறை சண்டேச்ஃவர[ற்*]க்கு கீரன் கேசுவந் — — — வோலைக் காட்ட கடவர் அன்றி விலைக்கற விற்றுப் பொன் . . கொண்[டு] விலை ஆவணஞ் செய்துக் குடுத்தேன் திருவாலந்துறை சண்டேச்ஃவர[ற்*]க்கு பாலாஸ்ரீயன் கீரன் கேசுவன்

நான்காம் கல்வெட்டு

இடம் : விக்கிரம சோழன் திருவாசலில் தரையில் பாவப்பட்டுள்ள கல்.

செய்தி: கோயில் முதல் கறுப்பழகியார் மகன் சின்னத்தம்பியும் மற்றொருவர் மகன் சீரங்கராயரும் இக்கோயிலில் என்றும் வழிபட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அண்ண பிள்ளை, ராசாக் கள் நயினான் என்பன விருதுகளாகலாம்.

காலம்: கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 அண்ண பிள்ளை நம்பிய்
2 ராசாக்கள் நயினான் நம்பிய்
3 கோயில் முதல் கறுப்பழகி
4 யார் மகன் சின்னத்தம்பி சத
5 ா சேர்வை . . . [யார்] மகன் சீர
6 ங்கராயர் சதா சேர்வை உ

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபத் தரை, கங்காளர் கோட்டத்திற்கு முன்.

செய்தி: சின்னத்தம்பி கோயில் முதலாக இருந்த செய்தி கிடைக்கிறது.

காலம்: கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 கோயில் முதல்
2 சின்னத் தம்பி
3 சதா சேர்வை

ஆறாம் கல்வெட்டு

இடம்: திருச்சுற்று மாளிகையின் தென்மேற்கு மூலையில் உள்ள தனிக்கல்.

செய்தி: இருங்கோளப்பாடி திருவாலந்துறை நெல்வால்வான் மாதேவன் பரமேசுவரன் திருவாலந்துறைத் திருக்கோயிலில் கொல்லி பெரியான் என்னும் பெயரில் திருச்சுற்றாலை எடுப்பித்து இறைவனுக்குப் பூப்பலகை ஒன்றையும் கொடையாகத் தந்தார். கல்வெட்டில் இவர், பிள்ளை சேரமானாரின் கைக்கோமாணி என்று குறிக்கப்படுகிறார்.

காலம்: கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரிபன்ம[ற்*]க்கு யாண்டு நாலாவ
2 து குன்ற[க்] கூற்[ற*]த்து ப்₃ரஹ்மதே₃யம் சிறுபழூவூ[ர்*] திருவாலத்துறை மஹ[ா*]
3 தே₃வர் கொல்லி பெரியா[ன்*] திருச்சுற்றா(ல்)லை எடுப்பித் தரு(ள்)ளி(ன்)
4 ந பிள்ளை சேரமா(ன்)நார் கைக்கோமாணி இருங்கோளப் ப[ா*]டி திருவா[ல*]த்
5 துறை நெல்வால்வான் மாதேவன் பரமேச்₂வ[ரன்] இட்ட பூப்பலகை

ஏழாம் கல்வெட்டு :

இடம் : நடராசர் திருமுன்னின் மேற்குச் சுவர்.

செய்தி : பழுவூர் குலோத்துங்க சோழ அக்கசாலை ஈசுவர முடையார் தேவதானமான இரைக்குடியின் ஒரு பகுதி பூலோக புரந்தர நல்லூர் என்று பெயரிடப்பட்டு இரைக்குடையான் உலகளந் தான் அரிகண்ட தேவனான இடைதுறை நாடாழ்வானுக்குக் காணி யாக வழங்கப்பட்டிருந்தது. அவர் மறைவுக்குப் பின் அவரது மகன்கள் மூவரால் அனுபவிக்கப்பட்டு வந்த இந்நிலப்பகுதியின் இறை விகிதங் கள் வரையறுக்கப்பட்டுள்ளதோடு மீண்டும் நிகழ்ந்த ஊரின் பெயர் மாற்றமும் இக்கல்வெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது கோயிலார்க்கு மன்னன் அனுப்பிய நேரடி ஆணையாகும்.

காலம் : கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ — — [யாண்]டு மூன்றாவது
2 — — கூற்றமான உத்து[ங்க துங்க வ]ளநாட்டு ப்₃ரஹ்ம
3 [தேயம் சி]று பழூவூர் திருவாலன்துறையுடையார் கோயில் தேவ[க]ன்மிக்கும் ஸ்ரீமாஹேச்₂வர
4 க் கண்காணி செய்வார்களுக்கும் சிகாரியம் செய்வாநுக்கும் ப்ரஸாத₃ம் செ[ய்*]தருளிந திருமுகப்படி இன்நாட்டு இ

5 ரைக்குடையான் உலகளன்தான் அரிகண்ட தேவநாந இட துறை நாடாழ்வான் முன்நுடையா

6 ரைத் தவி[ர்*]ன்து காணியாகப் பெற்று இவன் அபாவத்து இவன் மகன் அரிகண்ட தேவன் சொக்கநாந இட

7 துறை நாடாழ்வாநுக்கும் அரிகண்டன் தோன்றியாந ராஜ ராஜ இடதுறை நாடாழ்வாநுக்கும் அரிகண்

8 ட தேவன் அதிகை நாயகநாந வாநவன் பல்லவரையநுக்கும் காணியாய் இவ[ர்*]கள் அநுபவித்து வருகிற பழுவூ

9 ர் குலோத்துங்க சோழ அக்கசாலை ஈச்ᵒவரமுடையார் தேவ தானம் இன்நாட்டு இரைக்குடி இவ்வூர் நிலத்து

10 ப் பி[ரி]ன்த பூலோக புரன்தர நல்லூர் பழம் பேர் தவின்து இன் நிலம் உள்பட மாடை மூன்றரைக்கு குலோத்து

11 ங்க சோழ தேவற்கு பதிந் ஒன்றாவது இறை கட்டிந நிலத் தால் நெல்லு முந்நூற்றுக் கலமும் இ

12 றைக் கட்டாத நிலத்தால் மாடையும் பழம் படியே இரைக்குடி யெந்து பேரால் மூன்றாவது முதல் இவர்

13 களுக் — — நிற்கவும்[1]

---

3. சோழபுரம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம் : வ. உ. சிதம்பரனார் மாவட்டம், விளாத்திகுளம் வட்டத் திலுள்ள சோழபுரத்தில், அணைந்தான் கோயில் என வழங்கப்படும் சுடலை மாடசாமி கோயிலின் முன்னர்த் தனியாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ள கல்லில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

செய்தி : கல்வெட்டின் தொடக்க எழுத்துக்கள் சிதைந்துள்ளன. அரசர் பெயர், ஆண்டு ஆகியன இடம் பெறவில்லை. உத்தம சோழ புரத்துப் பரிக்கிரகத்தைச் (சபையை) சேர்ந்த அங்கக்காரர்களில் (களரி பயிற்றுவிக்கும் வீரர்களில்) ஒருவர், இறந்து போன தம் மகனுக்குச் சமாதிக் கோயில் எழுப்பி, அதற்கு இறையிலி தேவதானமாக நிலமளித் துள்ளார். (இச்சமாதிக் கோயில், அணைந்தான் கோயில் எனப்படும் சுடலை மாடசாமி கோயிலே போலும். சைவ அல்லது வைணவ சமயச் சார்பு குறிப்பிடாதிருப்பது கவனித்தற்குரியது.) கருஞ்செய் நிலம் (கரிசல் நிலம்), பதினாறு சாண் கோல் ஆகிய வழக்குகள் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன.

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

காலம் : கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி.

1 . . . . ல்லன்
2 குடியான உ[த்த]ம சோழபு
3 ரத்து நகரத்தார் பக்கல் இவ்
4 வூர்ப் பரிக்கிரகத்துத் தேடே
5 வந்திர வல்லனங்கக்க
6 ாறரில் கொற்றன் குடியனா
7 ன கலங்காத கண்டப் பேரைய
8 னேன் என் மகன் குறுமன் இர
9 ட்டை இ [ஜன்ம] மொழிய இவனுக்
10 கு ஸமாப்தியாக[1] இவனை நோ
11 க்கி சிலை ஏத்தினப்படி சந்
12 திராதித்தவரை பூசை செல்
13 லக் கொண்டிட்ட கருஞ்செய் நில
14 மாவது இந்நகரத்துக் கீழ் கா
15 னத்துக் கருஞ்செய்யில் விலை
16 கொண்டி[ட்]ட நிலம் ந[2] நாலுமா
17 வுக்குச் சூழெல்லைக்குக் கீடு
18 முல்லை தேவனுடையான் ப
19 ற்றுக்கு மேற்கும் தென்னெ
20 ல்லை விராடராயனும் பட்டி
21 ன சுவாமிகளும் பற்றுக்கு வட
22 க்கும் மேலெல்லை அவனி மண்ட
23 லராயன் முழக்கு கிழக்கும் வ
24 டவெல்லை பெருங்குளத்து எல்லைக்
25 குத் தெற்கும் இந்நான் கெல்லை
26 க்குள் பதின் அறு சான் கோலால் நி
27 லம் நாலுமாவும் இறையிலி தே
28 தவதானமாக குடுத்தமைக்கு யிவை
29 வ அரியான் வேளானான பட்டின சு
30 வாமிகள் எழுத்து இவை . . .
31 வீரனான குணம் வேண்டி நல்லூர்
32 மூவேந்த வேளான் எழுத்து இவை
33 வ தேவன் தனியனான வானவதர
34 யன் எழுத்து இவை அரங்கன்
35 இராகனான வில்லவன் விழுப்ப

---

1. சமாப்தி (முடிவு) என்ற சொல் சமாதி என்ற பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளதெனலாம்.
2. நான்கு மா என்பதற்கான குறியீடு.

36 ரயன் எழுத்து இவை [த]னியன்
37 சங்கனான திருச்சிற்றம்பல மூவே
38 ந்த வேளான் எழுத்து இவை மிப்
39 பன் நாசகனான . . . ராயன் எ
40 ழுத்து இவை . . . . .
41 . . . கனான உத்தம சோழ மூவேந்த வேளான் எழுத்து
42 இவை சீலான் சங்கனான சம்பந்தப் பெருமாள் எழுத்து
43 . . . ஆசாரியன் எழுத்து உதிதிது இவ்வனைவருஞ் சொல்ல இவ் எழுத்து வெட்டினேன் ஆத
44 னூரான உதைய மாத்தாண்ட நல்லூர் தச்சாசாரியன் தேவன் கொற்றன் குளத்தூரா . . . .

---

4. அழுந்தூர்க் கல்வெட்டுகள்

அ. அப்துல் மஜீது, ஆ. பானுமதி, மு. நளினி, அர. அகிலா

திருச்சிராப்பள்ளி மேலூர் சாலையில் திருச்சிராப்பள்ளியிலிருந்து பதினேழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது அழுந்தூர். பெருவழியிலிருந்து வலப்புறம் பிரியும் சாலையில் இரண்டு கிலோ மீட்டர் உள்நோக்கிச் சென்றால் ஆல, அரச மரங்களின் நிழலில் வர குணீசுவரர் திருக்கோயில், பறவைகளின் கீச்சொலிகளே துணையாய்ப் பழுதடைந்து, சுவர்கள் விரிசல் விட்டு பரிதாபக் கோலத்தில் நிற்பதைப் பார்க்கலாம். இக்கோயிலை முதன் முதலாக வரலாற்றுலகின் பார்வைக் குக் கொணர்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் அப்போதிருந்த மாவட்ட ஆட்சியர் திருமிகு. வ. விசுவநாதன் அவர்களின் உதவியோடு கோயிலுக்குச் செல்லப் பாதை அமைத்ததுடன் பல்லாண்டுகளாக நின்று போயிருந்த வழிபாட்டையும் தொடக்கி வைத் தது. சோழ நாட்டில் முற்காலப் பாண்டிய மன்னரான வரகுணரின் பெயரிலமைந்து இன்று பார்வைக்குக் கிடைக்கும் ஒரே திருக்கோயில் இதுதான். இங்கிருந்த கல்வெட்டுகளைப் படியெடுத்த மையம், கோயி லைச் சுற்றிச் சிதறிக் கிடந்த சோழர் காலத்துச் சிற்பங்களை ஆட்சியர் உதவியுடன் திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் சேர்த்தது. பின் னாள் திருப்பணிக்காளான இத்திருக்கோயிலின் கல்வெட்டுகளுள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம் : மையக்கோயில் மகாமண்டபக் கிழக்குத் தாங்குதளம்.

செய்தி : திருவானைக்கா கோயிலைச் சேர்ந்த தேவகன்மி, ஸ்ரீமாகேசுவர கண்காணி செய்வார், ஸ்ரீகார்யம் செய்வார் ஆகியோர்க்கு

மன்னனின் நேரடி ஆணையாக விளங்கும் இக்கல்வெட்டு அழுந்தூர்க் கோயில் தொடர்பான நிலக்கொடை பற்றிப் பேசுகிறது. முற்றுப் பெறாத இக்கல்வெட்டில் அழுந்தூர்க் கோயில் இறைவர்க்கான வழிபாடு மற்றும் படையல்களுக்காக வரி நீக்கிய நிலம் முப்பது வேலி முதலில் தரப்பட்ட செய்தியும் பிறகு சித்திரைத் திங்களில் சந்திர கிரகணத்தின் போது மேற்கொண்டு இருபது வேலி நிலம் தரப்பட்ட தகவலும் கிடைக்கின்றன.

காலம்: கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்ரவத்தி கோனேரின்மை கொண்டான் பாண்டி குலாசினி வள நாட்டு உடையார் திருவானைக்கா உடையார் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீமாஹேச்வர கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகார்யஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதாக தேவதான இறையிலியாக இட்ட முன்பு சொ

2 ன்ன நிலம் முப்பதிற்று வேலிக்கும் சித்திரை மாஸத்து ஸோமக்ரஹணத்து நீர் வார்த்த நிலம் இருபதிற்று வேலிக்கும் கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழ வ[1]

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: வரகுண ஈசுவரம் திருக்கோயிலில் திருமண்டபம் எடுப்பித்து இறைத் திருமேனியை எழுந்தருளுவித்து மற்றுமுள்ள திருப்பணிகளும் செய்யத் திருவழுந்தியூர் ஊரவையார் மேற்கொண்ட முடிவைத் தெரிவிக்கிறது. இத்திருப்பணிகளுக்கு முதலாக நன்செய் மற்றும் புன்செய்யில் விளைந்து வந்த தானியத்தில் கலமொன்றிற்கு நாழி தானியமும் பொன் ஒரு திரமமும் காசு இரண்டு திரமமும் தர ஒப்புக் கொள்ளப்பட்டது. கல்வெட்டின் பிற்பகுதி சிதைந்துள்ளதால் இரு திரமம் பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை.

காலம்: முதலாம் குலோத்துங்க சோழரின் நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1118.

1 — — — — —[2] கோவிராஜகேசரிபந்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 48 ஆவது இரட்டபா

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.
2. புகழ்மாது விளங்க என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி.

2 டி கொண்ட சோழ வளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துத் திரு வழுந்தியூராயி[சை]ந்த ஊரோம் எங்களிலிசைந்த பரிசாவது இவ்வூர் வரகுண ஈச்ᵥவரமுடைய மஹாதேᵥவர்க்கு திருமண்டப மும் எடுப்பித்து திருமேனியும் எழுந்தருளுவித்து மற்றுமுள்ள திருப்பணிகளும் செய்விக்கக் கடவோமாகவும் இத்திருப்பணி களுக்கு உடலாக புந்செய்யிலும் மெந்செய்யிலும் அளந்து முத லான தானியத்தில் கலத்துவாய் னாழி தானியம் அளக்கக் க

3 டவோமாகவும் இ க[லத்தி]ந்வாய் னாழி தா[னி]யமும் இவ்வூரில் கன்னால[னல] . . . . இரு திரமமும் பெ[ா]ன் ஒரு திரமமும் இடக் கடவோமாகவும் இத்தானமும் இத்திரமம் இரண்டும் சந்திராதித்தவல் செல்வதாக ஸம்மதித்து கல்வெட்டு வித்தோம் ஊராயிசைந்த ஊர்க்கு சமைந்த ஊரோம்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் மகாமண்டப வடக்குக் குமுதம்.

செய்தி: நாயனார் மன்னர்க்கு அழிந்தியூர் ஊரார் நிலவிற்பனை. இந்நிலம் திருச்சூலம் நாட்டப்பெற்று வரகுணப்பெருமாள் நல்லூர் என்ற பெயரில் வரகுணீசுவரம் கோயிலுக்குக் குடி நீங்காத் தேவதான மாக வழங்கப்பட்டது. தட்டார் குளம், கணக்கர் குளம் என்ற இரு நீர் நிலைகளின் பெயர்கள் கிடைக்கின்றன. இப்பகுதிக்கு நிச்சயிக்கப் பட்ட கடமையாக (வரியாக) ஒரு வேலி நிலத்துக்கு ஐந்து கலம் நெல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நெல்லைத் தேவகன்மி, கோயில் கணக்கர், ஸ்ரீகார்யம் செய்வார் முன்னிலையில் கோயில் திருக்கொட்டாரத்தே அளக்க வேண்டுமெனத் திட்டம் செய்யப்பட்டது. புன்செய்ப் பயிர் களின் விளைவுக்கு வேலிக்கு இரண்டு பணம் பெறப்பட்டுள்ளது.

காலம்: மாறவர்மர் குலசேகரரின் முப்பத்தெட்டாம் ஆட்சி யாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மராந திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு 38 வது பங்கூநி மீ 10 வ நாள் வட கோனாட்டு அழிந்தியூ (ரு) ரார்க்[1] இ[ஸை*]சந்த ஊரவரோம் நாயநார் மன்னற்கு பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது எங்கள் பக்கல் இவர் விலை கொண்டு நாங்கள் உடையார் வரவுணீசுரமுடைய நாயநாற்கு குடி நீங்கா தேவ தாநமாகத் திருச்சூலத்தாபநம் பண்ணிக் குடுத்த குடிகாடு தட்டான் குள

---

1. அழுந்தியூருக்கு என்று படிக்கவும்.

2 மும் கணக்கன் குளமுமாந வரவுணப் பெருமாள் நல்லூற்கு கடமை நிச்சயித்தபடி இக்குடிகாடு நான்கெல்லைக்குட்பட்ட வயலில் பயிரேறின நிலம் பயிர் பாற்து[1] பயிர் கண்ட நில[த்]துக்கு மாத்தால் அஞ்[சு*] கலமாக வந்த நெல் நாயநந் திருக்கொட்டாரத்தே தேவகந்மி கோயில் கணக்கந் சீகாரியம் செய்வாரோடும் அளக்[கக்*] கடவாராகவும் இவ்வயலில் எள்ளு வரகு தினை விளைஞ்ச பயிருக்கு மாத்தா லிரண்டு பணம் கொள்ளக் கடவதாகவும் இப்படிக்கு சந்திராதித்தவரை செ

3 ல்லக் கடவதாகக் கல்வெட்டிப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் நாயநார் மன்நற்கு வட கோநாட்டு அழிந்தியூர் ஊரவரோம் கோநாட்டு வேளர் எழுத்து அணுக்க நம்பி எழுத்து பிள்ளை வேளர் எ[ழு]த்து இராசராச வேளர் எழுத்து அழகிய சோழ வேளாந் எழுத்து சோநர் எழுத்து திருநீற்றுச் சோழ வேளாந் எழுத்து அணுக்கி வேளாந் எழுத்து அழகர் மூவேந்த வேளா[ந்] எழுத்து விக்கிரம சோழ வேளர் எழுத்து

நான்காம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் மகாமண்டபத் தெற்குக் குமுதம்.

செய்தி: அழிந்தியூர்க் கோயில் திருமண்டபத்திற்கு வலைப்பாடி காப்பான் வலையன் சூற்றிச் சாந்தனான பெரிய நாட்டு முத்தரையன் தட்டோடு இடுவித்தார்.

காலம்: கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இந்நாயனார் கோயில் திருமண்டபம் தட்டோடு இட்டாந் இவ்வூர் காணியுடைய வ

2 லைப்பாடி காப்பாந் வலையந் சூற்றிச் சாந்தனாந(ந) பெரிய னாட்டு முத்தரையன் தந்மம்

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் கருவறை, மேற்கு.

செய்தி: அழிந்தியூரைச் சேர்ந்த வண்ணார் அழிவில்லாத தேவனின் மகன் மொண்ணை தந்த கல்.

காலம்: கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இக்கல் ஒன்றும் அழிந்தியூரில்

2 வண்ணான் அழிவில்லாத தேவன் மகன் மொண்ணை தன்மம்

---

1. பார்த்து என்று படிக்கவும்.

5. நரலாட்டின் புதூர்க் கல்வெட்டு[1]

எஸ். இராமச்சந்திரன்

இடம்: வ. உ. சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நாலாட்டின் புதூரிலுள்ள கரிய மால்அழகர் கோயிலின் திருச்சுற்றில் வேப்ப மரத்தடியில் நிறுத்தப்பட்டிருக்கும் கல்தூண்.

செய்தி: குலசேகர பாண்டியரின் ஆட்சிக் காலத்தில், ஊற்றத்தூர் பரிக்கிரகத்தின் (சபையின்) நிர்வாகத்தில், பாண்டி மண்டலமுங் கொண்டான் இராசநாராயண தேவனான நாவிலங்காதான் என்பவன் இப்பகுதியைக் காத்து வருகிறான்.

காலம்: குலசேகர தேவரின் இருபதாம் ஆட்சியாண்டு, கி. பி. 1288 ஆகலாம்.

1 ஸ்வஸ்திஶ்ரீ நாயனார்
2 குலசேகர தேவற்
3 கு யாண்டு 20 வது
4 நெற்சுர நாட்டு ஊ
5 ற்றதூற் பரிக்கிர
6 கத்துக் கீழ் பாண்டி
7 மண்டலமுங் கொண்
8 டான் இராச நாரா
9 யண தேவனான
10 நாவிலங்காதா
11 ன் நன்றாக[2]

---

6. முடுக்கு மீண்டான் பட்டிக் கண்மாய்க் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: நாலாட்டின் புதூரின் ஒரு பகுதியான முடுக்கு மீண்டான் பட்டிக் கண்மாய் மடைக்கல்லில் உள்ள கல்வெட்டு.

செய்தி: எட்டப்ப நாயக்கர் மாப்பிள்ளை சொக்கய்யா நாயக்கர் செய்த கல்மடை.

---

1. இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர் நாலாட்டின் புதூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தமிழாசிரியர் திரு. பெ. கிருஷ்ணசாமி.
2. சுபமஸ்து என்ற வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ் வடிவம்.

காலம்: கி. பி. 1886.

1 ஸ்ரீ 1
2 061 ஷூ விய
3 ஷூ ஆனி மீ
4 . 28உ சோ
5 சாம வாரமு[ம்]
6 உத்திர நட்செ
7 த்திரமு[ம்] கூடி
8 ன சுபதின[த்*]தி
9 ல் முடுகி மீண்
10 டான் பட்டி கு
11 ளம் மகாராச
12 ராச மாணி
13 யார் செகவீ
14 ரராம எட்டப்ப
15 னாயக்கன் அவர்க
16 ள் மாப்பி[ள்*]ளை
17 சொக்கய்யா
18 அவர்களுக்கு
19 விட்டு குடுத்த
20 து ஷி அய்ய
21 ா அவர்கள்
22 செய்த கல்
23 மடை பெ
24 ருமாள் து
25 ணை உ

---

7. அல்லித்துறைக் கல்வெட்டு

பி. தமிழகன்

திருச்சிராப்பள்ளி ராச்சாண்டார் திருமலை சாலையில், சோமரசம் பேட்டைக்கு அருகில் அமைந்துள்ளது அல்லித்துறை. இச்சிற்றூர் வரலாற்றுச் சிறப்புடையது. திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பிடிக்கப் பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த போர்களுக்கு அல்லித்துறையும் ஒரு களமாக விளங்கியுள்ளது.

இச்சிற்றூரின் குடியிருப்புப் பகுதியில் ஒரு கிறித்துவக் கோயிலும், அதனருகே ஒரு நினைவுச் சின்னமும் காணப்படுகின்றன. விக்டோரியா மகாராணியாரின் மறைவையொட்டி எழுப்பப்பட்டுள்ள இந்நினைவுச் சின்னம் ஓர் அலங்காரச் சுவராகக் காட்சியளிக்கிறது. இதன் இரு புறங்களிலும் கோட்டங்கள் அமைத்துக் கல்வெட்டுப் பலகைகள் பதிக்கப் பட்டுள்ளன.

வலப்புறக் கல்வெட்டில் (முதற் கல்வெட்டு) விக்டோரியா மகா ராணியின் வாழ்க்கைக் குறிப்புகள் ஆங்கிலத்தில் உள்ளன. அவர் பிறந்த, மறைந்த நாட்களும், இங்கிலாந்து நாட்டின் மகாராணியாக முடி சூட்டிக் கொண்ட நாளும், இந்தியப் பேரரசியாகப் பிரகடனமான நாளும் அதில் இடம் பெற்றுள்ளன. இதன் கீழே விவிலிய வரிகள் தரப் பட்டுள்ளன.

இடப்புறக் கல்வெட்டில் (இரண்டாம் கல்வெட்டு) 'காலஞ் சென்ற மகிமை தங்கிய இந்தியச் சக்கரவர்த்தினி விக்டோரியா அம்மாளவர்கள் ஞாபகச் சின்னம்' என்று தமிழில் தகவல் தரப்பட்டுள்ளது. இக்கல்வெட்டிலும் விவிலிய வரிகள் இடம் பெற்றுள்ளன. வெசுலியன் மெத்தாடிஸ்ட் கழகம் எப்போது நிறுவப்பட்டது என்ற தகவலையும் இக்கல்வெட்டால் பெறமுடிகிறது. அலங்காரச் சுவரின் மேற்பகுதி மையத்தில் ஒரு கல்வெட்டுப் பலகை (மூன்றாம் கல்வெட்டு) பதிக்கப்பட்டுள்ளது. இதிலும் விவிலிய வரிகள் உள்ளன. இந்த அலங்காரச் சுவரின் மேற்பகுதியில் சிறிய கோபுரங்கள் கலசங்களுடன் அமைந்துள்ளன. மையக் கோபுரம் சற்று அலங்காரமாக எடுக்கப்பட்டுள்ளது.

இச்சுவரின் எதிரே விக்டோரியா மகாராணியின் நினைவாக ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. இக்கிணற்றிலிருந்து நீர் இறைத்து அதைக் கொட்டி வைக்க ஒரு தொட்டியையும் பக்கத்திலேயே கட்டியிருக்கிறார்கள். இந்தத் தண்ணீர்த்தொட்டிக்குக் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சக் கருங்கல் பாறை ஒன்றை அதன் ஒரு முனை கிணற்றுக் கைப்பிடிச் சுவரின் மீதும் மறு முனை தொட்டியின் கைப்பிடிச் சுவர் மீதும் பொருந்தும்படிக் கிடத்தியுள்ளனர். இதன் மையத்தில் குழிவாகக் குடையப்பட்டிருப்பதால் கிணற்றிலிருந்து ஊற்றப்படும் நீர் வாய்க்காலில் பாய்வது போல் நேராகத் தொட்டியில் வந்து விழுந்துவிடும்.

கிணறு இப்போது தூர்ந்து போய்விட்டது. தொட்டியும் சிதைந்துள்ளது. தொட்டியை ஒட்டியுள்ள சுவரின் முகப்பில் ஒரு கல்வெட்டு (நான்காம் கல்வெட்டு) காணப்படுகிறது. 'காலம் சென்ற நமது விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்தமாக ஏ. அ. தானியேல் என்னும் சுவிசேஷகர் காலத்தில் பொதுசனப் பிரயோசனத்துக்காகச் செய்தனர்' என்ற தகவலுடன் இதைச் செய்த பாலமூக்கன் அம்பலகாரர், குட்டி சவுரிமுத்து, கருப்பன் அம்பலகாரர் ஆகியோர் பெயர்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

இங்கிலாந்தின் மகாராணியாக இருந்தபோதும் அவர் நினைவாகத் தமிழ் மரபுப்படி கிணறு வெட்டி மக்களுக்குத் தண்ணீர்த்தொட்டி அமைத்துத் தந்திருக்கும் இந்தப் பழக்கம் வரலாற்றின் தொடர்ச்சியே. திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரமதேசத்தில் முதலாம் இராசேந்திரரும் அவரது வாழ்வரசியார் வீரமாதேவியும் உயிர் துறந்த போது அவர்கள் நினைவாக அங்கு ஒரு தண்ணீர்ப் பந்தல் நிறுவப்பட்டது ஒப்பு நோக்கத்தக்கது.

முதற் கல்வெட்டு

IN LOVING MEMORY
OF
VICTORIA
QU[1]EEN EMPRESS
OF
INDIA
Born May 24 — 1819
Ascended —1837
Proclaimed
Empress
of India. 1876
Died Jan. 22. 1901.

ஓ. தாகமாயிருக்கிறவர்களே
நீங்கள் எல்லாரும் தண்
ணீர்களண்டைக்கு வாருங்கள்
ஏசாயா. 55.1.

''நான் கொடுக்கும் தண்ணீரை
க் குடிக்கிறவனுக்கோ ஒருக்
காலும் தாகமுண்டாகாது
நான் அவனுக்குக் கொடுக்கும்
தண்ணீர் அவனுக்குள்ளே
நித்திய ஜீவ காலமாய் ஊறு
கிற நீரூற்றா யிருக்கும்'' என்றார்
யோவான். 5.14.

Rev. J. DIXON
W. M. S. OPENED
1875
Rev. J. M. THOMPSON
Rev. A. A. THOMAS
Rev. J. S. W. SHREWSBURY
Rev. H. G. PRICE
Rev. A. SMITH
Y. A. DANIEL
THIS WELL IS SUNK
1902

---

1. 'W' என்ற எழுத்தைச் செதுக்கிப் பிறகு அது தவறென்பதை அறிந்து மேலே 'U' என்ற எழுத்தைச் செதுக்கியிருக்கிறார்கள்.

இரண்டாம் கல்வெட்டு

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி
அப்பொழுது
நீயும் உன் வீட்டாரும்
இரட்சிக்கப் படுவீர்கள்
— அப்போஸ்தலர். 15.31.

காலம் சென்ற மகிமை தங்கிய
இந்தியா சக்கிரவர்த்தினி
விக்டோரியா அம்மாளவர்களின்
ஞாபக சின்னம்.

—

உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு
க் கொடுத்திருக்கிற தேசத்திலே உ
ன் நாட்கள் நீடித்திருப்பதற்கு
உன் தகப்பனையும் உன் தாயையும்
கனம் பண்ணுவாயாக.
— யாத்திரை. 20.12.

காலம் நிறைவேறிற்று தேவனு
டைய ராஜ்யம் சமீபமாயிற்று
மனந் திரும்பி சுவிசேஷத்தை
விசுவாசியுங்கள்
— மாற்கு. 1.15.

ஒருவன் மறுபடியும் பிறவா வி
ட்டால் தேவனுடைய ராஜ்யத்தை
காண மாட்டான்.
— யோவான். 3.3.

நீங்கள் மனந் திரும்பிப் பிள்ளைகளைப்
போல் ஆகா விட்டால் பரலோக ரா
ஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்.
— மத்தேயு. 17.3.

தேவன் ஆவியா யிருக்கிறார். அவ
ரைத் தொழுது கொள்ளுகிறவர்க
ள் ஆவியோடும் உண்மையோ
டும் அவரைத் தொழுது கொள்ளவே
ண்டும்.
— யோவான். 4.24.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம்
சகல பாவங்களையும் நீக்கி நம்மை
ச் சுத்திகரிக்கும்.

— I யோவான். 1.7.

சர்வ லோகத்தின் பாவங்களையும்
நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி
யாயிருக்கிறார்.

— I யோவான். 22.[1]

WESLEYAN
METHODIST SOCIETY
ESTABLISHED 1739
JOHN WESLEY
CHARLES WESLEY

HEARTY WELCOME
TO THE Rev.
W. H. FINDLAY. M. A.
FOREIGN WESLE[2]YAN MISSION
SECRETARY

ஏ. அ. தானியேல்
சுவிசேஷகர் — 1905.

மூன்றாம் கல்வெட்டு

இதோ உலகத்தின் பாவத்தை
சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி
யோவான் 1.29.

'தேவன் அன்பாகவே யிருக்கிறார்'
I யோவான் 4.8.

நீங்களும் ஒருவரி லொருவர் அன்பா
யிருக்க வேண்டு மென்பதே தேவ
கற்பனையா யிருக்கிறது.
யோவான் 15.12.

---

1. '22' என்ற எண்ணை அடுத்து மற்றுமோர் எண் உள்ளது. அது படிக்க முடியாதபடி சிதைந்துள்ளது.
2. 'E' என்ற எழுத்து விடுபட்டுப்போய்ப் பிறகு சேர்க்கப்பட்டுள்ளது.

நான்காம் கல்வெட்டு

நானே வழியும் சத்தியமும் ஜீவ
னுமா யிருக்கிறேன். யோவான் 14.6.

பிதாவே இவர்களுக்கு மன்னியும்
தாங்கள் செய்கிறது இன்னதென்று
அறியா திருக்கிறார்கள் – லுக்கா. 23.34.

காலம் சென்ற நமது விக்டோரியா மகா
ராணி யவர்களின் ஞாபகார்தமாக
கனம். ஏ. அ. தானியேல் சுவிசேஷகர் கா
[லத்]தில் பொது ஜன பிரயோசனத்துக்காக
செய்தனர். காலம் சென்ற தன் சினேகிதர்களாகிய
. . பாலமூக்கன் அம்பலகாரர். குட்டி சவுரிமுத்து
— — கருப்பன் அம்பலகார்.

8. புங்கவர் நத்தம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: வ. உ. சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி வட்டம் சோழபுரத்துக்கு அருகில் புங்கவர் நத்தம் என்ற ஊரில், முட்புதர்களுக்கிடையில் சிதைந்து போய், வழிபாடில்லாத நிலையில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் மண்டப வாயில்நிலையில் உள்ள கல்வெட்டு.

செய்தி: எட்டயபுரம் மகாராசா செகவீர ராமகுமாரரின் மாப்பிள்ளை சின்னேரு அய்யாவின் மகன் சிந்தாமணி அய்யா கட்டிய பெருமாள் கோயில்.

காலம்: கி. பி. 1888.

1 1063[1] ஞூ ச
2 ருவசித்து ஞூ
3 தை மீ" 21 உ
4 எட்டய[புரம்]
5 சமஸ்தான
6 மகாராச ரா
7 ச ராச பூஜித
8 செகவீர[ராம]
9 குமார எட்டப்
10 ப மகாராசா
11 மாப்பிள்ளை
12 சின்னேரு
13 அய்யா குமா
14 ரற் சிந்தாமணி
15 அய்யா அவர்க
16 ள் பெருமாள்
17 கோவில் சொ
18 ந்தத்தில் கட்டி மு
19 டித்திருக்கிரது
20 வேங்கடாச
21 லபதி துணை உ

1. கொல்லம் ஆண்டு.

௯. புள்ளமங்கைக் கல்வெட்டுகள்

மு. நளினி

இவ்வூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டுகளுள் மூன்று, வரலாறு இரண்டாம் இதழில் வெளியாகியுள்ளன. மேலும் மூன்று கல்வெட்டுகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் முகமண்டபத் தெற்குத் தாங்குதளம்.

செய்தி: சாவாந்தி வானதத்தன் என்பார் திருவாலந்துறை மகாதேவர் திருக்கோயிலில் நாள்தோறும் உழக்கு எண்ணெய் கொண்டு நந்தா விளக்கொன்று எரிப்பதற்காக ஸ்ரீகண்ட மங்கலத்தில் நான்கு மா ஆலைச்செய் கொடையளித்தார்.

காலம்: கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்தி [ஸ்ரீ கோ] ப்பரகேசரிபந்ம[ர்*]க்கு யாண்டு 8 [ஆவது] கிழாற் கூற்ற[த்*]து

2 ப்₃ரஹ்மதே₃யம் புள்ளமங்கலத்து திருவா[லந்துறை ம]ஹா தேவர்க்கு

3 சாவான்தி . வானதத்த னிசதம் உழக்கு எண்ணையால் இரவு

4 ம் பக(ல்)லும் ஒரு னொந்தா விளக்கு சந்தி[ராதி]த்தவல் எரிவ த[ாக]

5 குடுத்த னிலம் ஸ்ரீகண்ட மங்கலத்து ஆலைச்[செ][ய்*] னான் [மா]

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் கருவறை, மேற்குச்சுவர்.

செய்தி: புள்ளமங்கலத்து மகாசபையாரும் ஊர்த் தண்டலுடைய அதவத்தூர் உடையாரும் கூடியிருந்து நிறைவேற்றிய செயற்பாட்டைக் கூறுகிறது. புள்ளமங்கலத்தைச் சேர்ந்த நின்றோதும் சட்டப் பெரு மக்களுக்கு முதலாம் இராசராசரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டின் போது நிலப்பகுதியொன்று வரி நீக்கித் தரப்பட்டது.[1] மன்னரின்

1. இது பற்றிய கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளது. இதன் சுருக்கம் கல்வெட்டறிக்கையில் வெளியாகியுள்ளது. ARE 553 of 1921.

இருபத்து நான்காம் ஆட்சியாண்டின் போது ஓதும் சட்டர்கள் இல்லாத் நிலையில் அந்த நிலப்பகுதிகளுக்கு மீண்டும் வரி பெற்றுக் கொள்ளலா மென்ற மன்னரின் ஆணையை சபை இக்கூட்டத்தில் நடைமுறைப் படுத்தியது.

காலம்: முதலாம் இராசராசரின் இருபத்து நான்காம் ஆட்சி யாண்டு, கி. பி. 1009.

1–8 திருமகள் போல என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி.[1]
9 — — ஸ்ரீகோவிராஜராஜ
10 கேஸரிவற் — — தே$_3$வர்க்கு யாண்டு 24 ஆவது
11 நித்த[விநோத] வள நாட்டுக் கிழார் கூற்றத்து ப்$_3$ர
12 ஹ்மதே$_3$யம் புள்ளமங்கலத்து மஹாஸபை$_4$யோ
13 மும் இவ்வூ[ர்*] தண்டலுடைய அதவத்தூர் உடையாரு
14 ம் கூடியிருந்து ஸை
15 ப$_4$யோம் பணித்த ப
16 ரிசாவது முன் ஸபை$_4$யோ
17 ம் ந . . . . . [நீ]லமங்
18 கலத்து முட்டத்து அளை
19 யூர் நக்கன் காளி காணி வி
20 லை கொண்டு ஸஹையோ
21 மிதாய் ஸபை$_4$ப் பொது
22 வாய் இ[ரு]ந்த நிலம் இே
23 தவர்க்கு யாண்டு 12 ஆவ
24 து இ நீலமங்கலத்து ஸ
25 பை$_4$யோமிதான ஒன்றே
26 நான்கு நில[த்*]தையும் இவ்
27 வூர் ச[ட்*]டற் நின்று ஓதுவார்க்கு
28 இறை இலியாகப் பணி
29 த்து இறை கொள்ளப் [ெ
30 பறாதி[ந்த] நிலத்தாலென்
31 று திருவாணை கூறி கல்லி[ல்*]
32 வெட்டி கிட[ந்*]த நிலம் நிலை[த்*]
33 து சட்டராய் ஓதுவாருமின்
34 றி இறை இ[லி]யாந நிலங்
35 கள் இறை ஏற்றி கொள்க ெ
36 வன்று ந[ம்]மை உடைய
37 சக்ரவத்தி[கள்] ஸ்ரீராஜராஜ தேவர்[க்கு*] யாண்
38 டு 2[4 ஆவது] — —

1. மெய்க்கீர்த்தி மிகவும் சிதைந்துள்ளது.

39 . . . . இந்நிலமும் இறை கொள்ள
40 [ர]தி . . . ஊர் . . . . . . ஊர்க்கற்று ஸபை$_4$
41 யோமேய் விட்டு திருவாய் மொழிந்தபடி [இநி]
42 லம் இறை கொள்வதாக பணித்தே[ாம்]
43 மஹாஸபை$_4$யோம்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயிலின் உள்மண்டப வடபுறச் சுவர்.

செய்தி: நாள்தோறும் ஒரு விளக்கிற்கு உழக்கு எண்ணெய் என ஐந்து உழக்கு எண்ணெய் கொண்டு ஐந்து நொந்தா விளக்கு களை இக்கோயில் இறைவன் திருமுன் எரிக்கப் புள்ளமங்கலத்து மகாசபையார் நிலக்கொடையளித்தனர்.

காலம்: கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1–3 வரிகள் மிகவும் சிதைந்துள்ளன.
4 தாம் . . . . . .
5 கை நெ . . . . [அ]ஞ்
6 சு நொந்தா விளக்
7 குக்கு எண்ணையா[ல்*] நி
8 சதம் ஐவுழக்கினா
9 ல் ஆட்டை வி . . . . .
10 . . . . . . வும்
11 இந்நெல் . . . .
12 அஞ்சு நொ[ந்தா] வி
13 ளக்கு சந்திராதி$_3$த்தவ[லி]
14 ரவும் பக(ல்)லும் எ
15 ரிவதாகவும் இப்பரிசு
16 பணிச்சுக் குடுத்தோம் பு
17 ள்ளமங்கலத்து மஹாஸ
18 பை$_4$யோம் இவை பந்மாஹேச்$_{\circ}$வர ரக்ஷை

10. தூசி மாமண்டூர் இலட்சுமி நாராயணப் பெருமான் கோயிற் கல்வெட்டு

சி. கீதா

இடம்: தூசி மாமண்டூர்ப் பெருமாள் கோயில் மதில் சுவரின் கிழக்கு முகம். வாயிலுக்கு இடப்புறம்.

செய்தி: இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் திருமதிலை மாவண்டூர் அழகு சிங்க சின்ன அப்பன்னய்யங்கார் மகன் அப்பனய்யங்கார் எடுப்பித்தார். மாவண்டூர் என்ற பெயர் 1868 வரை இருந்துள்ளமை இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

காலம்: கி. பி. 1868.

1 சு˳பமஸ்து ஸ்வ(ா)
2 ஸ்திஸ்ரீ விஜயாப்த$_4$ா
3 உ த$_3$ாநீம் கல்யப்$_3$த$_3$
4 ாம் 4969 ச˳ா
5 லிவாஹந ச்˳காப்$_3$த$_3$ாம்
6 1790 உ . . வர்த்த
7 மாந விப$_4$வ நாம ஸம்
8 வத்ஸரம் புரட்டாசி மீ"
9 29 வ ஸ்ரீ [அ*]கிலாண்
10 ட கோடி ப்$_3$ரஹ்மாண்ட
11 நாயக ஸௌந்த$_3$ரவல்லி
12 ஸமேத ஸ்ரீலக்ஷ்மி நா
13 ராயண ஸ்வாமி ஸமே
14 தி$_4$ திருமதிள் கைங்க
15 ர்யம் மாவண்டூர் அழகு சி
16 ங்க சின்ன அப்பனய்ய
17 ங்கார் புத்திரர் அப்பனய்
18 யங்காரால் செய்விக்
19 கப்பட்டது

நன்றி

இந்த இதழ் உருவாகப் புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும், விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர்கட்கும், அவற்றை வாங்கித் தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

11. பாவூர் சத்திரம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம் : நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், பாவூர் சத்திரம் பிள்ளையார் கோயிலின் முன் உள்ள தனிக்கல்.

செய்தி : முனையெதிர் மோகரில் ஒருவர் பாகூரில், 'நாயன்மார் இடங்கை உய்யக்கொண்டார்' என அழைக்கப்பட்ட மற்றொரு முனை யெதிர் மோகரின் பெயரில் குளம் ஒன்று வெட்டுவித்தார்.

காலம் : கி. பி. 13ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ குறுமை
2 ற நாட்டுப் பாகூரான
3 க்ஷத்(த்)ரி[ய*] சிகாமணி நல்
4 லூர் முனைவது மோ
5 கரில் பக்கமசுரன கா
6 . . . . . க் கொண்டானேன்
7 [க]ல்லி விச்ச குழம்[1] நாய
8 ன்மார் இடங்கை உய்ய
9 கொண்டார் திருநாமம்
10 முனைவது மோகப் பே
11 ரேரியென்று திருநாமம்
12 — — கினேன் புன்செய் புன — —

---

12. திருவிசலூர்க் கல்வெட்டுகள்*

அர. அகிலா, இரா. லலிதாம்பாள்

கும்பகோணத்திலிருந்து பூம்புகார் செல்லும் கிளைச் சாலையில் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருவிசலூர் என்னும் திருவிசநல்லூர். இவ்வூரிலுள்ள சிவயோகநாதசாமி திருக் கோயில் திருப்பணி செய்யப்பட்ட காலத்தே நூற்றுக்கு மேற்பட்ட தன் கல்வெட்டுகளை இழந்து புதுக்கோலம் பூண்டு துன்பத்தோடு நிற் கிறது. இதன் தென்பால் உள்ள திருச்சுற்று மாளிகையின் ஓரங்க

---

1. குளம் என்று படிக்கவும்.

* இக்கல்வெட்டுகள் தொல்லியல் மேதை கூ. ரா. சீனிவாசன் அறக் கட்டளை உதவியுடன் கண்டறியப்பட்டன.

மாகப் பழங்கோயிலொன்று காணப்படுகிறது. நாற்புறமும் கல்வெட்டு களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இக்கோயில், திருப்பணியாளர்களால் நெற்களஞ்சியமாக்கப்பட்டதால் தப்பிப் பிழைத்தது. மையக்கோயிலின் தென் சுவரில் காணப்படும் கல்வெட்டொன்று இக்கோயிலைப் பிச்ச தேவர் கோயிலென்று அழைக்கிறது. அதற்கேற்ப இக்கோயிலின் கிழக்கு மற்றும் தெற்குக் கோட்டங்களில் பிச்சைத்தேவர் திருமேனிகளே காணக் கிடைக்கின்றன. கிழக்கில் வீணையேந்திய கோலத்திலும் தெற்கில் பிச்சை புகும் கோலத்திலும் இத்திருமேனிகள் வடிக்கப்பட் டுள்ளன. தாங்குதளம் மற்றும் வேதிக்கண்டப் பகுதிகளில் அற்புத மான சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட புதிய கல்வெட்டு களுள் சில இங்கு வெளியிடப்படுகின்றன. இவற்றுள் பெரும்பான்மை யான கல்வெட்டுகள் வரலாற்றுக்குப் புதிய தகவல்களைத் தருவது குறிப்பிடத்தக்கது.

முதலாம் இராசராசரின் தேவியாராக, இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராத தந்தி காமகோடியார் இங்குள்ள கல்வெட் டொன்றின் மூலம் அறிமுகமாகிறார். பழுவேட்டரையர் மறவன் கண்டனாரின் கல்வெட்டொன்று இக்கோயிலின் தாங்குதளத்தில் கிடைத்துள்ளது. புதிய இசைக் கருவியொன்றின் பெயர் கிடைத் துள்ளது.

முதற் கல்வெட்டு

இடம் : பிச்சதேவர் கோயிலின் மேற்குத் தாங்குதளக் கண்டப் பகுதி.

செய்தி : கல்வெட்டில் திருவிசலூர் காவிரியின் வடகரையிலுள்ள அவனிநாராயண சதுர்வேதிமங்கலத்துத் திருவிசலூராய்க் குறிக்கப் படுகிறது. இறைவன் திருவிசலூர்ப் பெருமானடிகள் என்றழைக்கப் பட்டுள்ளார். இக்கோயிலில் இருந்த ஆடவல்லான் திருமேனிக்குத் திருப்பள்ளியெழுச்சியின் போது இசையெழுப்ப வாய்ப்பாகப் புழுதி யூரைச் சேர்ந்த திருவிசலூர் சூர்யனான எதிர்மேல் சீகண்டப் பேரரையன் என்பார் 100 கலம் நெல் முதலாக வைத்தார். இந்நெல் முதலில் வரும் வட்டி கொண்டு இக்கோயில் சார்ந்த இசைக்கலைஞர் களான வாத்யப் பேரரையன் நக்கன் சேந்தனும் கவயறப் பேருவச்சன் பட்டன் பெருமானும் மற்றுமுள்ளோரும் இறையாடலுக்கு இசை வாசிக்க ஒப்புக்கொண்டனர். பூகரகம் பெருவடகம் ஒன்று, கரடிகை ஒன்று, மத்தளம் இரண்டு, தாளம், வீணை, சங்கு இரண்டு என வாசிக்கப்பட்ட இசைக்கருவிகளின் பட்டியலும் கல்வெட்டில் கிடைக்

கிறது. இவ்விசைக் கருவிகளை இயக்கத் தேவையான இசைக் கலைஞர்களை அவ்வப்போது ஏற்பாடு செய்து கொள்வதும் தங்கள் பொறுப்பென சேந்தனும் பெருமானும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் பூகரகம் பெருவடகம் என்னும் இசைக் கருவியை இன்னதென அடையாளம் காண முடியவில்லை. இதுபற்றித் தகவல் அறிந்தோர் விரிவாக எழுதினால் வரலாறு வெளியிட்டு மகிழும்.

காலம்: கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மற்கு யாண்டு 16ஆவது வட கரைத் தேவதான ப்₃ரஹ்மதே₃யம் ஸ்ரீஅவனி [நாராயணச்] சது[ர்வ்வேதி*]மங்கல . . . திருவிசலூர்ப் பெருமாளுக்கு இக் கரை உவச்சன் இன்னக்கன் சேந்தனும் பட்டன் பெருமானு முள்ளிட்ட

2 த் தேவதானம் புழுதியூர் புழுதியூருடையான் திருவிசலூர் ஸ-ஒர் (ய்)யனாகிய எதிற்மேற் சீகண்டப் பேரரையன் திருவிசலூர் ஆடியரு

3 ளுகின்ற கூத்தப் பெருமாளுக்குச் சந்த்₃ராதி₃த்தவ[ல்] நிசதமும் பள்ளியெழுச்சி கொட்டினவாறே கூத்தப் பெருமாளாடியருள ஆட்டத்துக்கு வாசிப்பதற்கு வைத்த₃ப்

4 பொற்காலால் முதல் 100 கலம் இன்னெல்லு னூற்றுக் கலமும் ஸ்ரீகோயில் காணியுடைய உவச்சகன் வாது₃ப் பேரரையனான நக்கன் சேந்தனும் கவயறப் பே

5 ருவச்சனான பட்டன் பெருமானும் உள்ளிட்ட உவச்சகளோங் கொண்டமையில் இஞ்ஞெல்லுக்குக் கலத்துவாய் ஆட்டை விட்டம் [50 கலம்] நெல்லுப் பலிசையாகப் பொலிந்து

6 இந்த பலிசை னெல்லு ஐம்பதின் கலத்தாலும் ஆட்டத்துக்கு கொட்டும் பூகரகம் பெருவடகம் 1ம் கருடிகை 1ம் மத்தளி 2ம் தாள

7 ம் வீணையும் சங்கிரண்டும் ஆக இவ்வேண்டு ஆளுங் கொண்டு சந்த்₃ரா₃தித்தவ லாட்டத்துக்கு வாசிப்போமானோம் இவ் விருவோமுள்ளிட்ட உவச்[சகளோ]ம் இத₄ர்(ம்)மம் மஹாஸபை₄ யோம் பந்மாஹேச்°வர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் தெற்கு மற்றும் மேற்குத் தாங்கு தளப் பட்டிகை, கண்டம்.

செய்தி : திருவிசலூர்த் திருக்கோயிலில் உத்தமாகரம் ஊட்டுவிப் பதற்காக மன்னர் மதுராந்தகத் தேவர் 543½காசு கொடையளித்தார். இக்காசு கொண்டு இறைவன் பெயரால் நிலம் வாங்கப் பெற்றது. உண விட வாய்ப்பாக வெண்கலம் 6, வட்டில் 6, உணவிடும் தட்டு ஒன்று, சட்டுவம் ஒன்று ஆகியன விலைக்குப் பெறப்பட்டன. இக்கல்வெட்டை வெட்டுவிக்கக் கல் தச்சர்க்கு ஒரு காசு கூலி தரப்பட்ட செய்தியும் கிடைக்கிறது. இது மிக முக்கியமான தகவலாகும். கல்வெட்டில் நில எல்லைகளைக் குறிப்பிடுமிடத்து முழையூர் ஸ்ரீகோயில் இடம் பெற் றுள்ளது. முழையூர்க் கோயில் அப்பர் பாடிய ஆறை வடதளியின் அரு கில் பழையாற்றில் உள்ள பரசுநாதர் திருக்கோயிலாகும்.

காலம் : உத்தம சோழரின் ஏழாவது ஆட்சியாண்டு, கி. பி. 976.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்ம[ற்*]கு யாண்டு ஏழாவது வட கரை தேவதாந ப்$_3$ரஹ்மதே$_3$யம் அமனிநாராயணச் சதுர்வ் வேதி$_3$மங்கலத்து திருவிசலூர் பரமேச்$_\circ$வரர் இ கோயிலிலே உத்த மாக்$_3$ர மூட்டுவிப்பதற்கா[க*] ஸ்ரீகண்ட$_4$ராதி$_3$த்யன் மது$_4$ராந் தகன் ஸ்ரீகோப்பரகேஸரிபந்மர் இத்தே$_3$வர் பேரால் இவ்வூர் பூ$_4$மி விலை கொ

2 . . . . கே த$_4$ர்(ம்)மமா[க*] இத்$_3$தே$_3$வர் மகனே நிசத ம(ா)றுவர் ப்$_3$ரஹ்மணரை ஊட்டுவிப்பாராக இவ்வூர் காராம் பிச் சேட்டுத் தூர்ப்பலத் திருவரங்க நாராயணச் சதுர்வ்வேதி ப$_4$ட்டஸோம்மாசியார் வசம் விடுவதாக காட்ட இப்பொன் மா றில் வந்த காசு 58½ ஐம்பத்தெட்டரையும் கப்ப . . ற்றி வந்த க[ா*]சு 543½

3 ஐஞ்நூற்று நாப்பத்து மூன்றரை இன்னிலத்தில் . . . . . . மங்கலத்து தாமோதிர பட்டன் பக்கல் திருவிசலூ[ர்*] தென் மேல் பக்கத்து விலை கொண்ட நிலம் . . . . கைக் குடுத்த காசு 87ம் இத்திருவிசலூரின் தென் பக்கத்து காட்டுக் குறி ஹவரு ப$_4$ட்டனிடை விலை கொண்ட நிலம் 3 மா ½ காணிக் [குக்*] குடுத்த காசு 60 அறுபதும் இத்திருவிசலூர் . . . .

4 லிக் கொன்ற சதுசே$_\circ$க$_2$ர க்ரமவித்தன் பக்கல் விலை கொண்ட ⅛ அரைக்காலுக்கும் இதன் வடமேல் பக்கத்து இவன் பக்கல் விலை கொண்ட ⅛ அரைக்காலுக்கும் ஆக குடுத்த காசு 93 தொண்ணூற்று மூன்றும் முழையூர் ஸ்ரீகோயிலின் கீழ் பக்கத் துக் கிளிநல்லூர் சாலாபத்தியன் ஸ்ரீத$_4$ரன் ஸூர்ய்ய நாராயண னும் தம்பிமாரும் பக்கல் விலைகொண்ட 4½ மா நான்மாவரை

5 க்கும் இவன்நுடைமையிற் கொண்ட புறஞ்சேரி மனை . . அரைக்காணி முந்திரிகை குடுத்த காசு 90 தொண்ணூறும் இந்நிலத்தில் பத்துமாச் செய் இறை இழித்து விசு$_{0}$[க்*]காக இவ்வூர் ஸபை$_{4}$யார்க் குடுத்த காசு 205½ இருநூற்று ஐந்தரை — — ஆறுவற்கும் உண்பிதற்க்கு வெண்கலம் 6 ஆறும் வட்டிலாறும் இட்டுட்டத் தலம் 1றும் சட்டுவம் 1றுக்குமாகக் குடுத்த காசு ஏழும் கல்லில் இப்படி எழுத்து வெட்டும் கல் தச்சநுக்கு குடுத்த காசு 1றும்(க்) காசு 5

6 43½ ஐஞ்னூற்று நா[ற்*]ப்பத்து மூன்றரையும் — — இந்நிலம் முக்காலே இருமாவரை முந்திரி

7 கை அரை முந்திரிகை நிலமுங் . . . . . . இத்தில் பத்து மாச் செய் . . . . இழித்தி அறுவர் ப்$_{3}$ராஹ்மணர் சந்திராதித்தவல் உத்தமாக்$_{3}$ரம தரத்தார்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் மேற்குத் தாங்குதளக் குமுதம்.

செய்தி: பழுவேட்டரையர் மறவன் கண்டனார் வைத்த சதுர் வேதிபட்ட தானம் பற்றிப் பேசுகிறது. இந்த அறத்துக்கு முதலாக வைத்த பொன் வாசிபடாத ஈழக்காசு ஆயிரமாகும். மறவன் கண்டனார் பிறந்த நட்சத்திரம் உத்திரட்டாதி. அவருக்குத் தானவிநோதன் என்னும் சிறப்புப் பெயர் இருந்தது. அப்பெயரால் கோயிலில் 'தான விநோதன் திருக்காவணம்' என்னும் அரங்கம் அமைக்கப் பெற்றிருந்தது.

காலம்: உத்தமசோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டு, கி.பி. 978.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபன்மற்கு யாண்டு 9 ஆவது வடகரை தேவதான ப்$_{3}$ரஹ்மதே$_{3}$யம் அவநி நாராயண சதுர்வ்வேதி மங்கலத்துத் திருவிசலூர்

2 பரமஸ்வாமிகள் கோயிலில் அடிகள் பழுவேட்டரையர் மறவன் கண்டன் இவ்வூர் சதுர்வ்வேதி ப$_{4}$ட்டதானம் வைத்த பரிசாவது இத்

3 தானத்துக்கு பே$_{4}$ாக$_{3}$மாக வைத்த பொன் 600ம் [இத*]னால் வாசிபடாத ஈழக்காசு ஆயிரங்காசும் இத்தானவினோத$_{3}$ன் சதுர்வ்வேதி ப$_{4}$ட்ட தானப் பெருமக்களுக்கு

4 தானமாக நீரோடு அட்டி குடுத்த இக்காசுகளுக்குப் பூவிழி காசின் வாய் . . . நெல்லு விருத்தி அட்டுவார்க்குத் தநிகுக்காக குடுத்து இவ்விருத்தியால் வந்த இர

5 ண்டாயிரக் கலம் இன்னெல்லுத் திருவிசலூர் பரம – – பழுவேட்டரையர் மறவன் கண்டனு முள்ளிட்டு அய்ம . . . . சதுர்வ்வேதி ப$_4$ட்டகள் மேற்ப்படு குற்றமில்லாதார்

6 நிசதம் பதினாழி நெல்லு பேரால் கொள்ளப் பெறுவதாகவும் இக்காசு தநிகு கொண்ட – – றுதி பூவறுதி இத்தான ஸபை$_4$யார்க்கே குடுத்து தம் பேரால் – – பெறுவாராகவும் இவர் பிறந்த நாள்

7 உத்திரட்டாதி நான்று மாஸந் தோறும் இ ஸ்ரீகோயிலிலே த$_3$ாந விநோத$_3$னன் னென்னுந் திருக்காவணத்தி – – இக்காசு முதல ழிக்கப் பெறாததாகவும் – – மாட பெறாதாராகவும் க்$_3$ராமத்$_3$ ரோஹிகளாய் இருபத்

8 து அங்கழைந்து[1] பொன் தண்டப்படுவாகளாகவும் இப்பரிசு சந்திராதித்தவற் நிற்க – – தேந்

நான்காம் கல்வெட்டு

இடம் : பிச்சதேவர் கோயிலின் வடக்கு மற்றும் மேற்குத் தாங்கு தள ஜகதி.

செய்தி: திருவிசலூர்த் திருக்கோயில் இறைவனுக்குக் கேரள யானைப் படையினர் திருப்பள்ளிக் கட்டில் மண்டபம் செய்வித்தனர். இப்படைச் சாமநாயகனான அமுதன் மங்கலவனுக்காக இம்மண்டபத்தில் விளக்கொன்று எரிப்பதற்காக அவன் உடன் பிறப்பான மாறன் அடைக்கலம் இருபத்தெட்டு ஆடுகளும் நிலை விளக்கொன்றும் கொடையளித்தார்.

காலம்: கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரிபந்ம[ற்*]கி யாண்டு 11 ஆவது வடகரை தே$_3$வத$_3$ாந ப்$_3$ரஹ்மதேயம் அமனி நாராயண ச

2 துர்வ்வேதி மங்கலத்து திருவிச(ல்)லூர் பெருமானடிகளுக்கு படையார் கேரள குஞ்சிர செ[ய்*]வித்த திருப்பள்ளி

3 க் கட்டில் மண்டபத்துக்கு இப்படைச் சாமநாயகன் அமுதன் மங்கலவனுக்காக இவனோடுடப் பிறந்த பெண்டாட்டி

4 . . . . யாலையப் பெருந்தெருவி லிருக்கு மாறனடைக்கலம் சந்திராதித்தவல் எரிப்பதற்கு வைத்த நெய் நிச

5 . . . . க்கு வைத்த ஆடு இருபத்தெட்டு இந்நெய் எரிய நிலை விளக்கொன்று இது$_3$ பந்மாஹேச்₀வர ரக்ஷை

---

1. ஐங்கழஞ்சு என்று படிக்கவும்.

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : பிச்சதேவர் கோயிலின் வடபுறச் சுவர்.

செய்தி : திருவிசலூர்த் திருக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்காகத் திரைமூர் நாட்டுக் குமரமார்த்தாண்டபுரத்து வணிகர் அய்யூருடையான் பொற்றாழி இருபத்து நான்கு காசுகளும் பெரிய நிலை விளக்கு ஒன்றும் கொடையளித்தார். இந்தத் திரைமூர் நாடு காவிரியின் தென்கரையில் இருந்தது.

காலம் : கி. பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மற்க்கு யாண்டு 16ஆவது தென் கரைத் திரைமூர் நாட்டு குமரமாத்தாண்டபுரத்து வியாபாரி ஐ[ய்*]யூ(ர்)ருடைய[ா]

2 ன் பொற்றாழி வடகரைத் தேவதான ப்₃ரஹ்மதே₃யம் அமனி நாராயண சதுப்பேதிமங்கலமுடைய திருவிசலூ[ர்*]ப் [பெருமா னடிகளு]

3 க்கு திருநொன்தா விளக்கு எரிப்பதற்கு வைத்தப் பெரிய நிலை விளக்கு ஒன்று 1 எரிப்பதற்க்கு [வை*]வத்த காசு இருப்பத்து நாலு 2[4] — — — —

4 மஹாஸபையார் ரக்ஷை பன்மாஹேச்₂வர ரக்ஷை

---

13. திருக்கோளக்குடி கல்வெட்டுகள்

மு. நளினி

திருக்கோளக்குடி பொன்னமராவதியிலிருந்து பதின்மூன்று கிலோ மீட்டர் தொலைவில் பூலாங்குறிச்சிக்கும் மிதிலைப்பட்டிக்கும் இடையில் அமைந்துள்ள சிற்றூராகும். இவ்வூரிலுள்ள மலை மீது பல இயற்கை யான குகைத் தளங்கள் உள்ளன. மலையடிவாரத்தில் ஒரு கோயிலும் மலையின் இடைப்பகுதியில் மூன்று கோயில்களும் இரண்டு திருமுன் களும் இருக்க மலையின் மேற்பகுதியில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வைத்து எண்ணத்தக்கக் குடைவரையொன்று அமைந்துள்ளது. தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் சீர்மைமிகு நிர்வாகத் திலுள்ள இத்திருக்கோயில் வளாகத்திலிருந்து அண்மைக் கள ஆய்வு களின் போது பல புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற் றுள் சில இங்கு இடம் பெறுகின்றன.

முதற் கல்வெட்டு

இடம் : குடைவரையின் மறைக்கப்பட்டுள்ள படிகளின் பிடிச் சுவர்.

செய்தி : கோயிலில் உவச்சக் காணியாக நிலமிருந்தும் உவச்சர்கள் இல்லாமையின் கோயில் நிர்வாகிகளான ருத்ர மாகேசுவரர்கள் கூடிக் குலோத்துங்க சோழ வாத்ய மாராயருக்கு அக்காணியைப் பராசவக் காணியாக நிச்சயித்துத் தந்தனர். கோயிலில் பேரிகை கொட்டவும் கைமணி கொட்டவும் பணியாளர் இருந்தனர். கல்வெட்டின் முதற் பகுதி கட்டடப் பகுதிக்குள் சிக்கியிருப்பதால் முழுமையான செய்தியை அறியக் கூடவில்லை.

காலம் : முதலாம் குலோத்துங்கரின் நாற்பத்தோராம் ஆட்சி யாண்டு, கி.பி. 1111.

1 — — — — ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 41 ஆவது பாண்டி நாட்டு ராஜேந்த்ர சோழ
2 — — — — உவச்சக் காணிக்கு உவச்சுக் கொட்டுவாரில்லாமையில் இக்கோயில் ஸ்ரீஉத்திர ஸ்ரீமாயேச்ᵥவரரும் விசதராஜமா
3 — — — — நாந கொலோத்துங்க சோழ வச்சிய மாரய[னு*]க்கு காணி செய்து குடுத்த பரிசாவது பேரிகை கொட்டுவாநுக்கு விற்றுக்கு
4 — — — — குமாண போகமாந மேலை வயலில் நச்சிநெடுங்கணும் நக்கி நெடுங்கணும் . முமித்துடவையும் இவை
5 — — — —கைம்மணி கொட்டுவார் இருவற்க்கு நாள் நாநாழி அரிசிச் சோறும்
6 — — — — இப்பாட . பராசவக் காணியும் எ[ப்*]பே[ர்ப*]ட்டதும் காணி காரா[ண்*]கி[ழ*]மை மீ[யா*]ச்சி உ[ள்*]ளிட இவனுக்குக் காணி
7 — — — — லுத்துவாந்நாகவும் இவன் . . . முள்ளவும் நிற்பதாக ஸம
8 — -- — — பராசவகாணி செ[ய்*து] குடுத்தோம் இக்கோயில் ஸ்ரீருத்₃ர ஸ்ரீமாஹேச்ᵥவரரு
9 — — — — [ே]ராம்

இரண்டாம் கல்வெட்டு

இடம் : மறைக்கப்பட்டுள்ள படிக்கு எதிர்ப்புறமுள்ள சுவர்.

செய்தி : திருக்கோளக்குடிக்கு முன்னாலுள்ள ஊருணி மூவேந்தன் என்னும் பிசாசின் பெயரால் அழைக்கப்பட்டது.

காலம் : கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருக்கோளக்கு[டி]
2 முன்பில் ஊருணி மூவேந்தந் எ
3 ந்நும் பசாசிந் பேர்

மூன்றாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபத் தெற்கு நுழைவாயிலின் மேற்கு நிலை.

செய்தி : கருப்பன் வயிராவியின் மகன் வயிரன் கொடையளித்த திருநிலைக்கால்.

காலம் : கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 கறுப்ப
2 ன் வயி
3 ராவி
4 மகன்
5 வசைரன்

நான்காம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபத் தெற்கு நுழைவாயிலின் கிழக்கு நிலை.

செய்தி : ஈசுவரமூர்த்தி கொடையளித்த திருநிலைக்கால்.

காலம் : கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 ஈசுவர மூ
2 ர்த்தி

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபக் கிழக்கு நுழைவாயில் உத்திரம்.

செய்தி : தன்ம பட்டரான உமையொருபாகன் இக்கோயில் இறைவனை எப்போதும் வழிபட்டுக் கொண்டிருக்கிறார்.

காலம் : கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 தன்ம பட்டர் உ
2 மை ஒரு பாகந் ச
3 [தா] சேர்வை

ஆறாம் கல்வெட்டு

இடம் : முன்மண்டபத் தூண் . படிக்கட்டுக்கு அருகில்.

செய்தி : இத்தூணை நிறுவியவர் சிதம்பரமூர்த்தி.

காலம் : கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 சிதம்
2 பர மூ
3 ர்த்தி

ஏழாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டப நுழைவாயிலுக்கு அருகில் முன்மண்டபக் கூரை.

செய்தி : அழகப்பன் இக்கோயில் இறைவனை எப்போதும் வழி பட்ட வண்ணமுள்ளார்.

காலம் : கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1	அழக	3	சதா சேர்
2	ப்பன் உ	4	வை

எட்டாம் கல்வெட்டு

இடம் : குடைவரை நுழைவாயில் வலப்புறச் சுவர்.

செய்தி : திருமூல சந்தான குருவான மங்கைபாக பண்டாரத்தின் ஆத்மார்த்தமான சொக்கலிங்கத்தின் திருமுன்.

காலம் : கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1	திருமூல	11	ச
2	சந்தா	12	ா
3	ன குரு	13	க்
4	வான ம	14	க
5	ங்கை பா	15	லி
6	க பண்டா	16	ங்க
7	ரத்தின் ஆ	17	த்தி
8	ர்மார்த்த	18	ன்
9	ம்	19	சன்ன
10	ெ	20	தி

14. பாஞ்சாலங்குறிச்சிக் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம் : சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனின் குலதெய்வக் கோயிலான ஜக்கம்மா கோயிலுக்கு முன்னர் நிறுத்தப்பட்டிருக்கும் கல் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல் முன்னர் அருகிலிருந்த கிணற்றில் நீரிறைத்தற்குரிய துலாக்கல்லாகப் பயன்பட்டதென்று கூறப்படுகிறது.

செய்தி : நயன நிலை என்ற ஊரைச் சேர்ந்த உடையான் பொன்னனான வீரபாண்டிய குலசேகர மூவேந்த வேளார் செய்தளித்தார்.

காலம் : கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்கலாம்.

1 நவி உ னயன
2 நிலை உடையா
3 ன் பொன்னனா
4 ன வீரபாண்டி
5 யக் குலசேக
6 ர மூவேந்த வே
7 ளார் தன்மம்

---

15. நரசமங்கலம் சிவன்கோயிற் கல்வெட்டு

கோ. வேணிதேவி

இடம் : காஞ்சிபுரம் வந்தவாசிப் பெருவழியிலுள்ள நரசமங்கலத்து மலை மேலுள்ள சிவன் கோயிலின் உள்மண்டபத் தென்புறத் தாங்கு தளம்.

செய்தி : பட்ட நாராயண பட்டர்க்கு அசகாயசூரச் சதுர்வேதி மங்கலத்து சபையார் நிலமளித்தனர். அகரம் குறிக்கப்படுகிறது.

காலம் : கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 பட்ட நாராயண பட்டற்கு[1] நாடாக தன்ம தானமாக கொண்டு குடுத்த நிலம் இரண்டு வேலியும் அகரத்துடன் கூட்ட திருமுகங் களும் வாங்கிப்

2 பங்கு இருபத்து ஆறேகாலாகக் குடுத்தோம் அஸஹாயச்சூரச் சதுர்வேதிமங்கலத்து மஹாஸபை$_4$யோம்

---

16. செங்கற்பட்டு மாமண்டூர் மாரியம்மன் கோயில் பலகைக் கல்வெட்டு

மு. நளினி

செய்யாறு வட்டத்திலுள்ள மாமண்டூரில் இருப்பதாகத் திரு கூ.ரா. சீனிவாசன் அவர்களும்[2] கல்வெட்டறிக்கையும்[3] குறிப்பிட்டிருக்கும் மண்டூகநாதர் திருக்கோயிலைத் தேடிய பயணம் செங்கற்பட்டு வட்ட மாமண்டூரின் தென்பாதியில் அக்கோயிலைக் கண்டுபிடித்ததில் முடிந்தது.[4] இக்கோயில் பற்றிய செய்திகளைத் திரட்ட உதவிய ஊர்ப் பெரியவர் திரு. சிவசாமி மாரியம்மன் கோயில் கல்வெட்டு பற்றியும் தகவல் தந்தார். மாரியம்மன் கோயில் வளாகத்தில் பிற் காலப் பல்லவர் காலத்ததாகக் கருதத்தக்க கொற்றவையின் பலகைச் சிற்பமொன்று காணப்படுகிறது. இதுவரை வரலாற்று வெளிச்சத் திற்கு வராத இந்த அரிய சிற்பம் தற்போது ஊரார் வழிபாட்டில் உள்ளது.

---

1. இப்பட்ட நாராயண பட்டர் இதே கோயிலில் காணப்படும் வேறு இரண்டு கல்வெட்டுகளிலும் இடம் பெற்றுள்ளார். இக்கல் வெட்டுகள் 'விட்டுப்போன தொடர்ச்சிகள்' பகுதியில் இடம் பெற்றுள்ளன.
2. K. R. Srinivasan, Cave-Temples of the Pallavas, Archaeological Survey of India, New Delhi, 1964, p. 54.
3. SII Vol. 17, ins. 664.
4. 4—8—94 அன்று இக்கோயில் தொடர்பான கள ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.

இடம் : மாரியம்மன் கோயில் முகப்பில் உள்ள கொற்றவைப் பலகைச் சிற்பத்தின் பின்னாலுள்ள பலகைக் கல்.

செய்தி : இவ்வூரிலுள்ள பிச்ச நயினார் திருக்கோயில் சார்ந்த தேவதானத்தில் வாழும் கைக்கோளர்க்குக் கோயில் தானத்தார் தந்த அடைவோலை. இவர்களிடமிருந்து சில்வரி, அந்தராயம், எச்சோறு உள்பட ஆண்டுக்குத் தறிக்கு மூன்று பணம் கொள்வதாக முடிவு மேற் கொள்ளப்பட்டது. செங்கற்பட்டு மாமண்டூரும் கல்வெட்டில் மாவண்டூர் என்றே குறிக்கப்படுவது கருத்தில் கொள்ளத்தக்கது.

காலம் : கி. பி. பதினேழாம் நூற்றாண்டு.

நள வருஷம்
ஸ்ரீமந் கட்டிய . . . . . . [மா]
வண்டூர் உடைய[ா*]ர் பிச்ச நயி[னார் தே]
வதானம் கீ(ழ்)மை வயலும் . . . . . .
ம்படில் திருமடை விளாகத்திலும்
ஏறின கைக்கோ[ள*]ர்க்கு அடைவோலை கு
டுத்த யிதிருவாசலில் யிரக்குச்[1] சி
ல் அ[ந்*]தர[ா*]யமும் எச்சோறு முள்
பட வருஷத்துக்கு தறிக்கு மூன்று பண
ம் கொள்ளக் கடவோ(ம்)மாகவும்
இந்த த[ந்*]ம்ம[த்து*]க்கு அகுதம் ப
ண்ணினவன் கெங்கை கரை
யில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்
திலே போகக்
கடவார்கள
ாகவும் தா
னத்தார்
எழுத்து
இவை நரசையர் எழுத்து
இவை ஊ(ர்)ரவர் சொற்படிக்கு
திருவருள் தாழ்வார் எழுத்து

---

1. இறுக்கும் என்று படிக்கவும்.

17. செங்கற்பட்டு மாமண்டூர் மண்டுகநாதரான பிச்சீசுவரர் கோயில் தூண் கல்வெட்டுகள்

சீ. கீதா, கோ. வேணிதேவி

இடம் : மையக் கோயில் மகாமண்டபத் தூண்கள்.

செய்தி : தூண்களை எடுத்தவர்களின் பெயர்கள். இரண்டாம் கல்வெட்டு மூன்று தூண்களில் காணப்படுகிறது.

காலம் : பதினைந்தாம் நூற்றாண்டு.

முதற் கல்வெட்டு	இரண்டாம் கல்வெட்டு
1 ஸ்வஸ்திஸ்ரீ குவ	1 ஏறமர்
2 ளை கிழான் அணு	2 படியர்
3 க்க நம்பி	3 தன்மம்

எண்ணங்களை எழுதுங்கள்

வரலாறு மூன்றாம் இதழைப் படிக்கும் அன்பர்கள் இந்த இதழின் அமைப்பு, இதில் இடம் பெற்றிருக்கும் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பற்றித் தத்தம் கருத்துக்களை எழுதுமாறு வேண்டுகிறோம். புதியனவாகவும், பயனுள்ளவையாகவும் எவ்வெப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதற்கும் வழி காட்டுங்கள். இவ்விதழில் வெளியாகியுள்ள ஆய்வுக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தெரிவித்தருள்க. வரலாறு உரியவற்றை வெளியிட்டு மகிழும். —ஆர்

2. விட்டுப்போன தொடர்ச்சிகள் *

நரசமங்கலம் கல்வெட்டுகள்

திருவண்ணாமலை சம்புவரையர் மாவட்டத்துச் செய்யாறு வட்டத்திலுள்ள நரசமங்கலத்து மலைமேல் சிவன் கோயிலொன்று உள்ளது. இக்கோயிலின் தாங்குதளத்தில் மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 1906இல் ஒரு முறையும், 1940இல் ஒரு முறையுமாய் இங்கிருந்து இரண்டு கல்வெட்டுகள் மைய அரசின் கல்வெட்டுத்துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுகளுள் 1906இல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டின் பாடம் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் இருபத்திரண்டின் முதற் பகுதியில் 260ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் கல்வெட்டின் முதல் எட்டு வரிகளை மட்டும் தந்து, அடிக்குறிப்பில், கல்வெட்டு முழுமையடையவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கள ஆய்வின் போது மைய ஆய்வர்கள் இக்கல்வெட்டு இருபத்தோரு வரிகள் கொண்ட முழுமையான கல்வெட்டு என்பதைக் கண்டறிந்தார்கள்.

1940இல் படியெடுக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டின் சுருக்கம் 1940ஆம் ஆண்டு கல்வெட்டறிக்கையில் கல்வெட்டு முழுமையடையவில்லை என்ற குறிப்போடு வெளியிடப்பட்டுள்ளது. திருவத்தியூர் அருளாளப் பெருமாள் கோயில் பட்டர்களாகப் பணியாற்றும் நான்கு நம்பிமார்களை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது என்ற செய்தி மட்டுமே கல்வெட்டுச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் கள ஆய்வில் இக்கல்வெட்டு முழுமையான நிலையில் பதினான்கு வரிகள் கொண்டு அமைந்திருப்பதையும் பயனுள்ள பல தகவல்களைத் தருவதையும் மைய ஆய்வர்கள் கண்டறிந்தனர்.

முதற் கல்வெட்டு

1906இல் படியெடுக்கப்பட்ட முதற் கல்வெட்டு முற்றுப் பெறவில்லை என்ற குறிப்போடு தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி இருபத்திரண்டின் முதற் பகுதியில் 260ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்பிக்கப்பட்டிருக்கும் முதல் எட்டு வரிகள் தொகுதியில் தரப்பட்டிருப்பது போலவே கீழே தரப்பட்டுள்ளன.

---

* இப்பகுதிக்கான ஆய்வுப் பணிகள் பேராசிரியர் கோ. வேணிதேவி அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் பகுதி 1-8 வரிகள்

1 ஸ்வஸ்தி[ஸ்ரீ*] ஸமஸ்த ஜக$_3$த$_3$ாத$_4$ார ஸோமகுல தில(தில)க மது$_4$ராபுரி மாத$_4$வ கேரள வம்ச$_\circ$ நிர்மூலந லங்காத்$_3$விவலுண்டந த்$_3$விதிய ராம சோளகுலசை$_\circ$

2 லகுலீச$_\circ$ கர்ணாடராஜ வித்$_3$ராண கா.க கரிகுடவாகல விவித$_3$ரிபு து$_3$ர்க$_3$மர்த$_3$ந வீரக$_3$ண்ட$_3$கே$_3$ாபால விபிநத$_3$ாவத்$_3$ஹந காஞ்சிபுர வரதீ$_4$ச்$_\circ$வர க$_3$ணபதி

3 ஹரிண ச$_\circ$ார்து$_3$ல நெல்லூர்புர வீரசித வீராபி$_4$ஷேக ப்ரணத ராஜப்ரதிஷ்ட$_2$ாவக மஹாராஜாதி$_4$ராஜ பரமேச்$_\circ$வர திரிபுவனச்சக்கரவத்தி ஸ்ரீகோற்சடபன்மரான சுந்தரபா

4 ண்டிய தேவற்கு யாண்டு 7 ஆவது விருச்சிக$_3$ நாயற்று அபர பக்ஷத்து த்ரதியையும் திங்கட் கிழமையும் பெற்ற மிருக ஷிரிஷத்து நாள் ஊர் விலையாவணக் கையெழுத்து செயங்கொண்ட சோழமண்

5 டலத்துக் காலியூற் கோட்டத்து மாவண்டூர் நாட்டு நரைசிங்க[மங்க*]லத்து ஊரா[யிசைந்த*] ஊரோம் எங்கள் காணியான

6 இன்னரைசிங்கமங்கலம் கொள்வீருளீரோ வென்று கூற இம்மொழி கேட்டு இதற்கு எதிர் மொழி குடுத்தேன்

7 (ன்) இம்மண்டலத்து இக்கோட்டத்து அகரம் தேவனப் பெரும்பாக்கத்து திருவத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளை

8 த் திருவாராதனம் பண்ணு[ம்*] நம்பிமாரில் புண்டவற்தனத்து பட்ட நாராயண பட்டரும் மாவண்டூர் நாட்டு தூசி அகரத்து பல்லாபுரத்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி 9–21 வரிகள்

9 து மலைகினிய நின்றான் பட்டரும் கொட்டி வரதராச பட்டரும் அருமணைப்புறத்துப் பெருமாள் பட்டரும் இந்நால்வரோம் எங்கள் காணியான நரைசிங்கமங்கலம் நாற்பாற் கெல்லைக்கு உள்பட்ட நன்செய் நிலமு

10 ம் புன்செய் நிலமும் நத்தமும் ஏரியும் ஏ[த்த] கோப்பும் உட்பட விற்றுத்தரில் கொள்வோம் என்று பிற்கூற முற்கூறிய நரைசிங்க[மங்க*]லத்து ஊரவரோம் எங்கள் காணியான நரைசிங்கமங்கலம் கீழ்பாற் கெல்லை பூண்டி எல்லை

11 க்கு மேற்கும் இச்செவ்வை கடம்புழான் குழி இரண்டும் உள்பட மேற்கும் இச்செவ்வை மாத்தூர் எல்லையுற மேற்கும் தென்பாற்

கெல்லை மாத்தூர் எல்லைக்கு வடக்கும் அமணந்தாங்கல் எல்லை யிற் வடக்கும் மே

12 ல்பாற் கெல்லை தென்னாயக் குன்று துடங்கி மாவண்டூர் ஏரிக் கரையில் மலைக்கு கிழக்கும் இச்செவ்வை பள்ளிகள் பட்டிக்கு கிழக்கும் வடபாற்கு எல்லை முப்பது பட்டி எல்லைக்கு தெற்கும் உட்பட நாற்பாற் கெல்லைக் குட்பட்ட நன்செ

13 ய் நிலமும் புன்செய் நிலமும் ஏரியும் ஏரிக்கோப்பும் பொதுவும் போதாதியும் மேனோக்கின மரமும் கீனோக்கின கிணறும் நத்த முட்பட நன்செய் நிலத்தில் உடையார் உருத்திரவாலீசுரமுடைய நாயனார் தே

14 வதானம் குழி ஆயிரமும் உடையார் திருத்தவக்குன்றமுடைய நாய னார் தேவதானம் குழி இருநூறும் கெத்தாவாலப் பிள்ளையார் தேவதானம் குழி ஐஞ்நூறும் தென் திருவேங்கடத்தம் பெருமாள் திருவிடையாட்டம் குழி ஆயிரமும்

15 துற்கை பட்டி குழி இருநூற்று ஐம்பதும் படாரிப் பட்டி குழி நூற்று ஐம்பதும் ஆக குழி மூவாயிரத்து ஐஞ்நூறும் பட்ட நாராயணற்கு எங்கள் பல நாடளக்க கொண்டு குடுத்தோம் உள் வரிப்படி குழி நா[லாயிரம் ஆக குழி ஏழாயிரத்து] ஐஞ்நூறும்

16 நீக்கி நாந்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் நிலமும் புன்செய் நில மும் நத்தமும் மனையும் மனைப் பட(ா)ப்பும் ஏரியும் ஏரிக் கோப் பும் மேனோக்கின மரமும் கீழ் நோக்[கின*] கிணறும் உட்பட விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசை — — — கும் நாட்[டு]

17 ராசிபணம் 300 இப்பணம் முன்னூற்றுக்கும் விலைக்குற விற்று பொருளறக் கைக்கொண்டு விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் பிற்கூறிய இப்பட்ட [நாரா*]யண பட்டற்கும் மலை கினிய நின்றான் பட்டற்கும் வரத [ராச பட்டற்கும் பெருமாள் பட் டற்]கும் முற்கூறி

18 ய நரசிங்கமங்கலத்து ஊரவரோம் விலைக்குற விற்றுப் பொரு(ள்) ளறக் கைக்கொண்டு விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத் தோம் நரசிங்கமங்கலத்து ஊ[ரவ*]ராம் இருகாலாவது முக் காலாவதும் இப்பணம் முன்னூற்று[க்கு நாராயண பட்டற்கும்] மலைகினிய நி

19 ன்றான் பட்டற்கும் வரதராச பட்டற்கும் பெருமா[ள்*] பட்டற்கும் இப்பணம் முன்னூற்[று*]க்கு விலைக்குற விற்றுப் பொரு(ள்)ளறக் கைக்கொண்டு விற்று விலை[ப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் நரசிங்கமங்கலத்]து ஊரவரோம் இவூற்கு எப்பேற்பட்ட கலனும் இல்லை கலனுள்வாய்த் தொற்றுப்படில் நாங்களே தீத்துக் குடுக்க

கடவோமாகவும் ஒலைக் குற்றம் எழுத்துச் சிதைவு வாசகப் பழு தென்று சொல்லப் பெறாதாகவும் இன்னரசிங்கமங்கலத்து கீழ்பாற் கெல்லை பூண்டி எல்லைக்கு மேற்கும் இச்செவ்வை கடம்புழான் குழி இரண்டும் உட்பட மேற்கும் இச்செவ்வை மாத்தூரெல்லையுற மேற்கும் தென்பாற் கெல்லை மாத்தூர் எல்லைக்கு வடக்கும் இச் செவ்

20 வையும் அமணந்தாங்கல் எல்லையுற வடக்கும் மேல்பாற் கெல்லை சென்னாயக் குன்று துடங்கி மாவண்டூர் ஏரிக் கரையில் மலைக்குக் கீழ் — — — ாற்கெல்லை முப்பது பட்டி எல்லைக்கு தெற்கும் உட்ப் பட்ட நன்செய் நிலத்தில் தேவதானம் திருவுடையாட்டம் துற்கை பட்டி படாரி பட்டி குழி 3500ம் இப்பட்ட நாராயணர் காணியான தம் உள்வரிப்படி குழி 4000ம் ஆக குழி 7500 குழி ஏழாயிரத்து ஐஞ்நூறும் நீக்கி இப்பணம் 300 இப்பணம் முன்னூற்றுக்கும் இன் னரசிங்கமங்கலம் விலைக்குற விற்று பொரு(ள்)ளறக் கைக் கொண்டு விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் நரசிங்க மங்கலத்து ஊரவரோம்

21 இப்படிக்கு இவை கணக்கந்தை படியப் பிள்ளை எழுத்து இப்படி அறிவேன் தீய்பங்குடையான் துக்கையாழ்வான் பெரிய பெரு மாளேன்

இரண்டாம் கல்வெட்டு

1940 ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் 171a என்ற எண்ணிடப் பட்டு வெளியிடப்பட்டிருக்கும் இரண்டாம் கல்வெட்டு முழுமையடைய வில்லையென்றும் கிடைத்திருக்கும் பகுதியில் பட்டர்களின் பெயர்கள் மட்டுமே இருப்பதாகவும் குறிப்பு காட்டியிருக்கிறார்கள். இவர்கள் குறிப் புப்படி பார்த்தால் இக்கல்வெட்டின் முதல் வரியை மட்டுமே படியெடுத் திருப்பது போல் தோன்றுகிறது. இக்கல்வெட்டில் மொத்தம் பதினான்கு வரிகள் உள்ளன.

படியெடுக்கப்பட்டதாகக் கருதப்படும் பகுதி

1 திரிபுவனச்சக்கரத்தி[கள்*] ஸ்ரீகோற்ச்சடபன்மரான சுந்தர பாண் டிய தேவற்கு யாண்டு 7வது விரிச்சிய நாயற்று அபர பக்ஷத்து த்ரதிகையும் திங்கட்கிழமையும் பெற்ற மிருகச்சிஸத்து நாள் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்து தேனைப் பெரும்பாக்கத்துத் திருவத்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமா ளைத் திருவாராதனம் பண்ணும் நம்பிமாரில் புண்டவற்தனத்து பட்ட நாராயணற்கும் மாவண்டூர் நாட்டு தூசியகரத்து பல்லா

புரத்து மலைகினிய நின்றாந் பட்டற்கும் கொட்டி வரதராசபட்டற்கும் அருமனைப்புறத்துப் பெருமாள் பட்டற்கும் இன்னால்வற்கும் இம்மண்டலத்து இக்கோட்டத்து இந்நாட்டு மாவண்டூர் வாளுவன் வாளுவன் பொன்மலையாழ்வாரும் வாளுவன் சிறந்தான் தமிழதரையனும் தேவப்பெருமாளும் கணகந்தை[1]

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதி 2 — 14 வரிகள்

2 திருமாந்தீசுவரமுடையான்[2] திருவுடைப்பிள்ளை யுள்ளிட்டாரும் கணக்கந்தை படியன் கச்சியேகம்பன் உள்ளிட்டாரும் இக்குடி கண்ணப்பிள்ளை பெருங்காண்டை யுள்ளிட்டாரும் இக்குடி செல்வப்பிள்ளை — — — — திருவண்ணாமலை உடையார் உள்ளிட்டாரும் இக்குடி புலியன் நெதியன் உள்ளிட்டாரும் இக்குடி அரசன் வடுகப்பிள்ளை உள்ளிட்டாரும் ஓதுவிச்சான் கம்பன் உள்ளிட்டாரும் இவ்வனைவோம் இவர்களுக்கு திரவியச் செலவு தீட்டுக்குடுத்த பரிசாவது எங்கள் காணியாய் நாங்கள் இவர்களுக்கு விற்ற நரைசிங்க மங்கலத்துக்கு பிறமாணப்படி பணம் 300 இப்பண[ம்*] முன்னூறும் கைக்கொண்

3 டபடி வாளுவன் பொன்மலையாழ்வான் கைக்கொண்ட பணம் 50 வாளுவன் சிறந்தான் தமிழதரையன் கைகொண்[ட*] பண[ம்*] 50ம் தேவப்பெருமாள் கைகொண்ட பணம் 50 ஆக பணம் 150ம் கணக்கந்தை மாந்தீசுரமுடையான் திருவுடைப்பிள்ளை உள்ளிட்டார் கைகொண்ட பணம் 11 இக்குடி படியன் கச்சியேகம்பர் உள்ளிட்டார் கைகொண்ட பணம் 11 ம் இக்குடி கண்ணப்பிள்ளை பெருங்காண்டை உள்ளிட்டார் கைக்கொண்ட பணம் 12ம் இக்குடி செல்வப்பிள்ளை திருவண்ணாமலை உடையான் உள்ளிட்டார் கைக்கொண்ட பணம் 22ம் இக்குடி புலியன் நெதியன் உள்ளிட்டார் கைகொண்ட பண[ம்*] 33ம் கரிய பெருமாள் செல்வாண்டை யுள்ளிட்டார் கைகொண்ட பணம் 25 இக்குடி அரசன் வடுகப்பிள்ளை யுள்ளிட்டார் கை

4 [கொ*]ண்ட பணம் 12½ம் ஓதுவிச்சார் ஏகம்பன் உள்ளிட்டார் கைக்கொண்ட பணம் 12½ ஆக கணக்கந்தைகள் கைக்கொண்ட பணம்

1. கல்வெட்டறிக்கையில் வெளியாகியிருக்கும் சுருக்கச் செய்தி கொண்டு பார்க்கும்போது இந்த ஒரு வரியைத்தான் படியெடுத்திருப்பார்கள் என்று தோன்றுகிறது. இக்கல்வெட்டின் பாடம் வெளியாகாமையின் கல்வெட்டறிக்கைச் சுருக்கத்தின் அடிப்படையில் விட்டுப்போன பகுதிகளை வெளியிட்டுள்ளோம்.
2. திருமாந்தீசுவரம் என்ற பெயரில் மாமண்டூரில் அமைந்துள்ள கோயில் இப்போது திருமனந்தீசுவரம் என்று அழைக்கப்படுகிறது.

பணம் 150 ஆக பணம் 300 இப்பணம் முன்னூறும் இப்படியால் கைக்கொண்டு திரவியச் செலவு தீட்டுக் குடுத்தோம் இப்புண்டவற் தனத்து பட்ட நாராயண பட்டற்கும் பல்லாபுரத்து

5 மலைக்கினிய நின்றான் பட்டற்கும் கொட்டி வரதராச பட்டற்கும் அர[ம*]ணைப்புறத்து பெருமாள் பட்டற்கும் இவ்வாளுவர்களும் கணக்கந்தைகளும் இவ்வனைவோம் வாளுவன் பொன்மலை யாழ்வான் கைகொண்ட பணம் 50 இப்பணம் ஐம்பதும் கைக் கொண்டமைக்கு வாளுவன் பொன்மலையாழ்வான் எழுத்து வாளுவன் தமிழதரையன் கை

6 கொண்ட பணம் 50 இப்பணம் ஐம்பதும் கைக்கொண்டமைக்கு வாளுவன் தமிழதரையன் எழுத்து

7 வாளுவன் தேவப்பெருமாள் கைக்கொண்ட பணம் 50 இப்பணம் கைக்கொண்டமைக்கு இவை தேவப்பெருமாள் எழுத்து கணக் கந்தை கச்சியழகியன் உள்ளிட்டார் — — இப்பணம் பதின் ஒன்

8 றும் கைக்கொண்டமைக்கு இவை கச்சி எழுத்து கணகந்தை கரிய பெருமாள் செல்வாண்டை உ[ள்*]ளிட்டார் பணம் 25 மேற்படி அரசாண்டை வடுகப்பிள்ளை உள்ளிட்டார் பணம் 12½ம் ஓதுவிச் சார் கம்பர்

9 [கொ*]ண்ட பணம் 12½ம் ஆகப் பணம் 50 இப்ப[ணம்*] ஐம்பதும் கைக்கொண்டமைக்கு இவை ஓதுவிச்சார் கமலாண்டை எழுத்து கணகந்தை நெதியன் உள்ளிட்டார் பணம் 33 இப்பணம் முப்பத்து மூன்றும் கைக்கொண்

10 டமைக்கு இவை நெதியன் மாந்தையாண்டை எழுத்து இப்பணம் இருபத்து இரண்டும் கைக்கொண்டமைக்கு இவை செல்வன் திருவண்ணாமலையுடையான் எழுத்து கணக்கந்தை திருவுடைப் பிள்[ளை*] உள்ளிட்டார் [பணம்*] 11 இப்பணம் பதின்

11 ஒன்றும் கைக்கொண்டமைக்கு இவை தாமோதரன் எழுத்து கணகந்தை பெருங்காண்டை உள்ளிட்டார் பணம் 22 இப்பணம்

12 இருபத்து இரண்டு கைக்கொண்டமைக்கு இவை பெருங்காண்டை எழுத்து இப்படி அறிவேன் பிராமணன் கங்கை பட்டனேன்

13 இப்படிக்கு இவை வாளுவன் எழுத்து இப்படிக்கு இவை வாளுவன் தேவப்பெருமாள் எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை கச்சி ஏகம்பன் எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை தாமோதரன் எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை [வடுகன்] எழுத்து இப்படிக்கு இவை கணகந்தை நெதியன் எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை பெருங்காண்டை எழுத்து இப்படி அறிவேன் கொற்

றங்காரியேன் இப்படி அறிவேன் மாத்தூர்ப் புசந்தை ஆதித்த தேவனேன் இப்படி அறிவேன் காலியூர் நாட்டு வேளானேன் இப்படி அறிவேன் மாட்டு பாசி அமநிபட்டனேன் இப்படி அறி வேன் ஆலப்பாக்கிழானேன் இப்படி அறிவேன் தீய்பங்குடையான் படியனேன் இப்படி அறிவேன் வாளுவன் மலைகினிய நின்ற பெருமானேன் இப்படி அறிவேன் கற்பாக்கத்து திருநலுழான் கூத் தானேன் . . . . இப்பிரமாணம் இவர்கள் சொல்ல எழுதினேன் மாவண்டூர் ஊற் கணக்கன் அருளாள பட்டனேன் இவை என் எழுத்து இப்படி அறிவேன் மாவண்டூர் செல்வன் கற்பூரனேன்

14 இப்படிக்கு இவை வாளுவன் தமிழதரையன் எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை எழுத்து இப்படிக்கு இவை கணக்கந்தை மாந்தை பாணன் எழுத்து இப்படிக்கு இவை ஓதுவிச்சான் கம் பாண்டை எழுத்து இப்படிக்கு இவை கணகந்தை செல்வன் திரு வண்ணாமலையுடையான் எழுத்து இப்படிக்கு இவை தீய்பங்குடை யான் பெரிய பெருமாள் அழகிய வரதனேன் இப்படி அறிவேன் மாவண்டூர் சிவப்பிராமணன் மூத்தபட்டனேன் இப்படி அறிவேந் நொட்டூர் வரதராசபட்ட சோமாசியேன் இப்படி அறிவேன் காயாற்றுமுக விஷ்ணுபட்டச் சோமாசியார் பிள்ளை இத்தக்சணா மூர்த்திபட்டனேன் இப்படி அறிவேன் செட்டி[யா]ர் ஆவான பட்டனேன் இப்படி அறிவேன் பல்லாபுரத்து உள்ள நன்கடை யானேன் இப்படி அறிவேன் கூத்தாடு கிழான் அம்மை அப்பன் மல்லப் பிள்ளையேன் இப்படி அறிவேன் கண்கிலுப்பையில் காவ னூர் கிழவனேன்

திணை மயக்கமாய் ஒருமைப்பாடு

இன்று பரவலாகப் பேசப்படும் நாட்டு ஒருமைப்பாடு நானில ஒருமைப்பாட்டுச் சிந்தனையாகச் சங்க இலக்கியங்களில் மலர்ந் துள்ளது. 'குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல் நறும் பூங்கண்ணி குறவர் சூடக், கானவர் மருதம் பாட, அகவர் நீல் நிற முல்லைப் பல்திணை நுவல' என்னும் வரிகளும், 'கானக்கோழி கதிர் குத்த, மனைக்கோழி திணை கவர, மந்தி கழி மூழ்க, கழி நாரை வரை இறுப்ப' என்னும் வரிகளும் திணை மயக்கமெனப் பெயர் சூட்டப் பெற்றாலும் ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்தச் சிந்தனைதான் பாரதியை 'சிந்து நதியின்மிசை நிலவினிலே' என்று பாட வைத்தது போலும்.

— ராஜி

3. செப்பேடுகள்

கூத்தூர் செப்பேடு

க. அவ்வை, அ. அப்துல் மஜீது, மு. நளினி

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்டதாகத் தகவல் தரும் செப்பேடு ஒன்று திருச்சிராப்பள்ளி சமயபுரம் சாலையிலுள்ள கூத்தூர் காமாட்சி அம்மன் கோயிலில் கிடைத்தது. இதுவரை வரலாற்றாய்வாளர்களின் கவனத்திற்கு வராத இப்புதிய செப்பேடு அக்கோயிலை நிர்வகிக்கும் ஏகாம்பரம் பிள்ளை பூசாரியின் மகன் செல்லப்பிள்ளை பூசாரியிடம் உள்ளது.

இந்தச் செப்பேட்டுப் படியின் நீளம் முப்பது சென்டிமீட்டர்; அகலம் இருபத்திரண்டரை சென்டிமீட்டர். செவ்வக வடிவில் அமைந்துள்ள இச்செப்பேட்டின் மேற்பகுதியில் பொருத்துவதற்கு வாய்ப்பாகத் துளையுள்ள வளைவமைப்பொன்று உள்ளது. இச் செப்பேட்டின் முகப்பில் வலமிருந்து இடமாகப் பிள்ளையார், முருகன் முதலிய தெய்வங்கள் நின்ற நிலையிலும் மையத்தில் சிவபெருமான் லிங்க வடிவத்திலும் இடக்கோடியில் மகாலட்சுமி அமர்ந்த கோலத்தி லும் காட்டப்பட்டுள்ளனர். தளமொன்றின் மீது நிற்கும் பிள்ளையாரின் வலப் பின்கையில் அங்குசமும், இடப் பின்கையில் பாசமும் உள்ளன. வல முன் கை காக்கும் முத்திரை காட்ட, இட முன் கை மோதகத்தைக் கொண்டுள்ளது. தும்பிக்கை மோதகத்தைத் தொட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. முருகன் வலக்கையில் வேலும், இடக்கையைக் கடியவலம்பிதமாகவும் கொண்டு நிற்கிறார். லிங்க வடிவத்தின் மேலே வலப்புறம் கதிரவனும், இடப்புறம் நிலவும் காட்டப்பட்டுள்ளன. மகாலட்சுமி கூரையமைந்த தளத்தின் மீது தாமரை இருக்கையில் அமர்ந்துள்ளார். பின் கைகள் இரண்டிலும் மலர் மொட்டுகள் இருக்க, வல முன் கையைக் காக்கும் கையாகவும் இட முன் கையை அருட் கையாகவும் கொண்டுள்ளார்.

இச்செப்பேட்டின் முன்பக்கம் முழுவதும் எழுத்துகள் காணப்படு கின்றன. பின்புறம் முக்கால் பகுதியுடன் செய்தி முடிந்து விடுகிறது. முன்பக்கத்தில் நாற்பத்தாறு வரிகளும் பின்பக்கத்தில் ஐம்பத்து மூன்று வரிகளும் உள்ள இச்செப்பேடு முழுவதுமாய்த் தமிழில் அமைந்திருந் தாலும் சில இடங்களில் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள் ளன. செப்பேட்டின் மேல் இட மூலையும், கீழ் வல மூலையும் சிதைந் துள்ளன.

'ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவர' எனத் தொடங்கும் விசய நகர மன்னர்களுக்குரிய மெய்க்கீர்த்தியின் முதல் சில வரிகள் விசய நகரத்தை யாண்ட மன்னர்களின் வீரப்பெருமைகளை விரித்துரைக்கின்றன. அவர்தம் வெற்றிகளும், வென்ற நாடுகளின் பெயர்களும் குறிப்பிடப் படுகின்றன. இம்மன்னர்களின் வழிமுறை வரிசைக்குப் பிறகு 'திருச்சி ராப்பள்ளி சமஸ்தானம் ஸ்ரீமத் ராசாதிராசனாகிய சதுற்த கோத்திரம் திருமலை நாயக்கரவர்கள் வத்திர சிம்மாசனம் கொண்டு அரசாளுகிற நாளையில்' என்று இச்செப்பேடு வெளியிட்ட காலத்தில் திருச்சிராப் பள்ளியை ஆண்ட மன்னரின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இச்செப்பேடு வெளியிட்ட காலம் காணப்படுகிறது. சாலிவாகன சகாப்தம் 1232[1] என்றும் கலியுகம் 4411 என்றும் குறிக்கப் பட்டுள்ளன. சவுமிய ஆண்டு தைத்திங்கள் பதின்மூன்றாம் நாள், சுக்கில பட்சமும் ஆதி வாரமும் அசுபதி நட்சத்திரமும், சௌபாக்கிய நாமயோகமும் பெற்ற சுபதினத்தில் தெய்வராய பூசாரி, செல்லக் குமார பூசாரி என்ற இருவருக்கும் கோயில் ஆளுகை குறித்து ஏற்பட்ட உடன்பாட்டை இச்செப்பேடு விளக்குகிறது.

'திருச்சிராப்பள்ளி சாவடி வடகரை மழவநாடு வடவழிப் பத்து பாச்சூருக்குக் கிழக்கிலுள்ள திருவரங்கத்தைச் சேர்ந்த திருவிளை யாட்டம் கிராமத்தில் கீழ்முறியில் மேல்முறியில் சேர்ந்த பிச்சாண்டார் கோயில் கூத்தூரில் அனாதி திருக்கம்பைபுரம் வயிரிசெட்டிபாளையம் காமாட்சியம்மன் கோயில் தலத்துக்கு அம்மன் வரப்பிரசாதப்படி பாரம் பரியமும் கல்லும் காவிரியும் உள்ளவரையும் சந்திராதித்தர் உள்ள வரையும் புத்திர பவுத்திர பாரம்பரியமாய்ச் செல்லக்குமார பூசாரி என்பார் ஆளுமை கொண்டார். அவர் சந்ததி செல்லக்குமார பூசாரி அவருக்குச் சகோதரன் தெய்வராய பூசாரி இவ்விருவரில் கூத்தூரில் இருந்து அனாதி திருக்கம்பைபுரம் வயிரிசெட்டிப் பாளயைத்துத் தலத் துக்கும் கூத்தூருக்கும் இரண்டு தலத்துக்கும் ஒருவனாயிருந்து' என்று தொடரும் செப்பேட்டில் இந்த வரிக்குப் பிறகு எழுத்துக்கள் சிறிது சிதைந்துள்ளன.

அனாதி பூர்வமான வயிரிசெட்டிப்பாளையம், திருக்கம்பைபுரம் காமாட்சி அம்மன் சன்னதி தலத்தில் தமையனாகிய தெய்வராய பூசாரியும் கூத்தூரு தலத்துக்குத் தம்பியாகிய செல்லக்குமார பூசாரியும் பொறுப்பேற்றனர். 'கூத்தூரில் காமாட்சி அம்மன் சன்னதி தலத்தில், முன் பெரியவர் இருந்தபடிக்கு தலமுந் தரிச்சுக் கொண்டு செல்லக்

---

1. இக்காலக் குறிப்பு திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தோடு ஒத்துவரவில்லை. இச்செப்பேடு போலியாக இருக்கலாம். செய்திச் சிறப்பு கருதியே வெளியிடப்பட்டுள்ளது.

குமார பூசாரியை இருக்கச் சொன்னபடியினால் கூத்தூரு தலத்தில் ஆதிக்கம் வைச்சு வந்த விவரம்' என்று சொத்து விவரங்கள் பேசப்படு கின்றன.

நஞ்சைக்காணி இரண்டு, சோளக்காணி ஒன்று, பட்ட விருத்தி யாக வந்த நிலப்பகுதி ஒன்று, கோயில் சேர்ந்த தென்னம்பிள்ளை நூறு, தென்னைமரம் ஐம்பது[1], கிடாமாடு பன்னிரண்டு, கறவை எருமை இரண்டு, விறுதல எருமை இரண்டு, எருது நான்கு, கறவைப் பசு ஐந்து, விறுதல பசு பதினாறு, செங்கன்று ஐந்து, கிடாரிக்கன்று ஏழு, எருமைக் கிடாரிக்கன்று மூன்று, கிடாரிக்கன்று ஒன்று என்று கூத் தூரின் நிலம் மற்றும் கால்நடைச் சொத்து விவரங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. இச்சொத்தில் தமையனாகிய தெய்வராய பூசாரி வயிரி செட்டிப்பாளையம் வரும்போது ஓட்டி வந்த எருது நான்கு, கறவைப் பசு இரண்டு, கறவை எருமை ஒன்று, செகு இரண்டு, விறுதல பசு ஒன்று, ஆக உருப்படி பத்து. மொத்த உருப்படிகள் ஐம்பத்தேழு என்றும் அவற் றில் தமையனார் கொணர்ந்த பத்து போக, மீதமுள்ள நாற்பத்தேழு உருப்படிகள் கூத்தூரில், தம்பியாகிய செல்லக்குமார பூசாரியிடம் ஒப்பு விக்கப்பட்ட தாகவும் செப்பேடு தெரிவிக்கிறது.

இதனைத் தொடர்ந்து அரினா முதலி என்னும் பெரியவர் செய்த சன்னதிப் பரிகல அறக்கொடை பேசப்படுகிறது. வெள்ளிக் கிரீடம் இரண்டிற்கு ஐம்பது பொன், மணி வடம் ஒன்றுக்கு முப்பது பொன், மோகனமாலை ஒன்றுக்கு இருபத்தைந்து பொன், பொட்டுக் காரை மூன்றுக்கு இருபது பொன், பொன்னாலான கண்ணடக்கம் ஏழு இணை கள், வெள்ளியாலான கண்ணடக்கம் இருபது இணைகள், அபைய ஹஸ்தம் இரண்டுக்குப் பத்துப் பொன், வெள்ளி அருணா ஐந்துக்கு இருபத்தைந்து பொன், ஒட்டியாணம் மூன்றுக்கு முப்பது பொன், செப்புக்குடம் மூன்றுக்குப் பதினைந்து பொன், குத்துவிளக்கு இரண் டுக்குப் பத்துப் பொன், திருநீற்றுக் கிண்ணம் ஐந்துக்கு ஐந்து பொன், பெரிய மணி இரண்டிற்குப் பத்துப் பொன், தூபக்கால் இரண்டிற்கு இருபது பணம், கற்பூரத் தீபத்தட்டு இரண்டிற்குப் பதினைந்து பணம், பட்டுச் சீலை, கச்சை உட்பட அனைத்தும் இப்பெரியவரால் கூத்தூர் காமாட்சி அம்மன் கோயிலுக்குக் கொடையாகத் தரப்பட்டுள்ளன.

இவற்றுள் வயிரிசெட்டிப்பாளையம் கோயிலுக்குத் தெய்வராய பூசாரி என்பவர் எடுத்து வந்த பொருட்கள் செப்புக்குடம் ஒன்று, கற்பூரத் தட்டம் ஒன்று, தூபக்கால் ஒன்று, கிண்ணம் இரண்டு, பட்டுச் சீலை இரண்டு, கச்சை இரண்டு முதலியனவாகும். இவை தவிர பிற பொருட்கள் கூத்தூரிலேயே நிறுத்தப்பட்டன. வயிரிசெட்டிப்பாளையம்

1. செப்பேட்டில் அன்பது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயிலில் தேர்த்திருவிழா நடக்கும் போது, முன்பு பெரியவர்கள் நடந்து கொண்டபடி, கூத்தூரில் இருந்து இந்த நகைகளைக் கொண்டு வந்து அலங்காரம் செய்வதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. திருக்கம்பை புரம் வயிரிசெட்டிப்பாளையம் காமாட்சியம்மன் சன்னதிக்கு வரத நாயக்கர் என்னும் பெரியவர் நிலமளித்துள்ளார். இதற்கு ஒரு குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குக் 'குழி' என்று பொருள். அதை யடுத்து 30 என்ற எண் தமிழ் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளதால், நிலம் 30 குழி என்று பொருள் கொள்ளலாம்.

இந்தப் பட்டயம் காமாட்சி அம்மன் சன்னதியில் எழுதப்பட்ட தாகச் செப்பேடு கூறுகிறது. கூத்தூர் தலத்துக்கும் திருக்கம்பைபுரம் வயிரிசெட்டிப்பாளையத்துக்கும் பேதங்களின்றி முன்பு பெரியவர்கள் நடந்து கொண்டபடி, கல்லும் காவிரியும் சந்திராதித்தர் உள்ளவரைக் கும் வேறுபாடு இல்லாமல் நடந்து கொள்வோமென்றும் இரண்டு தலங் களிலும் நடக்கக்கூடிய இராசீக, தெய்வீகக் காரியங்களில் ஒரு தலத்தில் இருப்பவர்கள் இன்னொரு தலத்துக்கு உதவுவோமென்றும் இரு தலத்தைச் சேர்ந்தவர்களும் ஒப்புதலளித்துள்ளார்கள்.

இந்தப் பட்டயத்தை எழுதுவித்த பெரியவர்களாகத் தென்னங் குடையா பிள்ளை, அம்பலக்கொண்டா பிள்ளை, அகிலாண்டம் பிள்ளை, தென்னாராயணமுடையா பிள்ளை மற்றும் சன்னதிக் குடிகள் குறிக்கப் பெறுகிறார்கள்.

இப்பட்டயப்படி, பெரியவர் தெய்வராய பூசாரி வயிரிசெட்டிப் பாளைம் காமாட்சி அம்மன் கோயிலையும் வீரமாச்சன்பட்டி தலத்தை யும் பரிபாலனம் செய்துகொண்டு சுகமேயிருப்பதென்றும் இளையவர் செல்லக்குமார பூசாரி கூத்தூர் தலத்தையும் செயங்கொண்டானையும் பரிபாலனம் செய்துகொண்டு சுகமே இருப்பதென்றும் முடிவு காணப் பட்டுள்ளது.

இவர்களை அம்மன் அடிமை கொண்டதாகவும் அப்போது அம்மன் சொன்ன வரப்பிரசாதம் எந்நாளும் இவர்தம் சொல்லுக் குள்ளாகும் என்றும் இவர்கட்கு அம்மன் சகல பேறுகளும் தந்து இரட்சிப்பார் என்றும் வாழ்த்திப் பட்டயம் முடிகிறது.

செப்பேடு

1 ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேசுரன் அரியராய விபாடன் பாழைக்குத் த

2 ப்புவராத ராயகண்டன் மூவராய கண்டன் கண்ட நாடு கொண்டு

3 கொண்ட நாடு கொடாதா னாரியர் தள விபாடன் ஆரியர் வீரமழித்தான் பூ

4 றுவ தெட்சண யச்சிம வுத்தர சதுற் சாகர கண்டன் லவண யிடச்சுரர் செ

5 ந்பிதே தீக்ஷீரசுத் தொதக சத்த சமுத்திராபதி சுவாயம்பு மனுச்சக்கிறவற்

6 த நிறமித அகண்ட நவகண்பி பிறிதிவி மண்டலாதிபதி யங்க வங்க கலிங்க

7 காஸ்தீமரக் கொங்கணடங்கக்கு குதகுச்சர மாளவ துளுவ மகத காம்போச ம

8 ண்டலீகர் திறையளக்க வந்த ரெகுராமன் அரிசாபசாற தூலபரிசக்

9 கிற வரகமோன கச வேட்டையாடும் புசாபல பராக்கிறமன் எதிரிப

10 டுவாரு மன்னர் முதிகிட்டு முறியவே கட்டாரி தொட்டப் பட்டாபி ராமன்

11 துஷ்கன நிக்கிற கனசிஷன பரிபாலகன் அஷ்[ட]லட்சுமி வாச மிட்ட புயவீ

12 மனி ஆடு மணி நாவசையாது கட்டும் படையரிடவர் திலகன கிலப்பிறதா

13 பன் பகையரசன் முடியிடறி ரண பேரி கொட்டி விருது பெறும் வீராள

14 ன் வில்லவர்களாகச் சதுரங்க சேனா பெலதுங்க வீமன் சற்பனன் பா

15 ழையினும் விற்பனன் முள்ளோன் எழு முழமான மத வேழ நிரை கட்டும் ெ.

16 சச்சாரமுள்ள வனுற்சரக புறுழன் வறன்ன லெட்சங் குதிரை மன்னு ப

17 ரிலாயன் அறிவுக்கு அகஸ்த்திய னாண்மைக்கு ராமர் பொறுமைக் குத் தற்ம்மர்

18 புகழுக்குச் சோமன் கல்விக்குச் சே[ர]ழன் கன்தைக்குச் சோழன் சொல்லுக்கு

19 அரிச்சந்திரன் இராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்ட

20 னார்க் குல திலகன் நாற்பத்து முக்கொண் மேற் சக்கிறமாக மாடமாளி

21 கையுங் கூட கோபுரமுங் கோட்டையு மதிளுங் குறைவிலாத மைத்த

22 விசைய் நகரத்திலும் வேலூர்தனிலும் முத்தினாற் பந்தராற் சுத்தெலாம் விள

23 ங்கப் பூத்தார் பொலியும் ஆஸ்தான மண்டபத்தழகும் பீதாம்பரந் த

24 ழையவணிந்து அங்கதகடக் குண்டல கிரீடமு முத்தால் வலி பதக்கஞ சீர் பெற

25 ப் புனைப்புனைந்து கஸ்த்தூரித் திலகம் நெத்தியிலணிந்து ஆறுகாலப் பீடத்தேறி

26 யினிதமர்ந்து உடைவாளேந்தி யொருவன் புடைப்புறப்படுவார்கள் கட்டியங் கூற

27 ச் சல்லரி தடாரி தண்ணுமை பண்ணுமை பல்லிய முழங்க மனுவிஜா [ம] னேசுர

28 மது பராட்டித் திக்கெல்லாம் புகழ் செலுத்தும் ஸ்ரீமல்லிகாற்சுன தேவ மகராய வீர வசந்தராய விருபாட்சிராய வீர நரசிம்மராய கிருஷ்ணன் ராய இவர்களிற் புனரா

29 ய் மன்னியரில் திருச்சிராப்பள்ளி சமஸ்தான ஸ்ரீமத் ராசாதிராசனாகிய சதுற்த கோத்திர

30 ம் திருமலை நாயக்கரவர்கள் வத்திர சிம்மாசனங் கொண்டரசாளுகிற நாளையில்

31 ஸ்வஸ்திஸ்ரீ விசையாற்புதைய சாலிவாகன சகாற்தம் 1232 கலியுகம் 44

32 11 இதின் மேல் செல்லா நின்ற சவுமிய வூ தை மீ 13உ சுக்கில பட்சமும் ஆதி

33 வாரமும் அசுபதி நட்செத்திரமும் சவுபாக்கிய நாமயோகம் வாலவாகாணம் பெற்ற சுப

34 தினத்தில் திருச்சிறாப்பள்ளி சாவடி இ வடகரை மழவனாடு வடவழி பத்து பாச்சுரு

35 [க்கு] க் கிழக்கு ஸ்ரீரங்கந் திருவிளையாட்டங் கிராமத்தில் கீழ் முறி மேல் முறியில் சே

36 ந்த பிச்சாண்டார் கோவில் கூத்தூரில் அனாதி திருகம்பைபுரம் வயிரிசெட்

37 டிபாளையம் காமாட்சியம்மன் கோவில் தலத்துக்கு அம்மன் வரப்பிறசாதம் பார

38 ம்பரியமும் கல்லுங் காவேரியுள்ள வரைக்கும் சந்திராதித்தருள்ள வரை இப்புத்திர பவு

39 த்திர பாரம்பரியமாயி செல்லக்குமார பூசாரி யென்று நாமமுஞ் சொல்லி ஆளுமைக்

40 கொண்டார் அவர் சந்ததி செல்லக்குமார பூசாரி அவருக்கு சகோ தரம் தெய்வரா

41 ய பூசாரி இருவருலே கூத்தூரிலே யிருந்து அனாதி திருகம்பை புரம் வயிரிசெ

42 ட்டிபாளையத்து தலத்துக்கும் கூத்தூருக்கும் இரண்டு தலத்துக்கும் ஒருவனாயிரு

43 . . . உத்தரிக்குறப் படியினாலே இரண்டு தலத்துக்குப் போக்கு வரத்துக்கும் ந[று]வாக

44 . . . ணப்போகாதென்று அனாதி பூறுவமான வயிரிசெட்டிபாளை யம் திருக்க

45 ம்பைபுரம் காமாட்சியம்மன் சன்னதி தலத்தி தமையனாகிய தெய்வ[ரா]ய பூசா

46 . . . . . ருகுறபடி யி கூத்தூரு ஸ்தலத்துக்குத் தம்பியாகிய செல்லக் குமார

47 . . . . . கூத்தூரில் காமாட்சியம்மன் சன்னதி ஸ்தலத்தில் முன் பெரிய வ

48 . . . . ருந்தபடிக்கு ஸ்தலமுந் தரிச்சுக் கொண்டு யிருக்கச் சொன்ன படி

49 யினாலே கூத்தூரு தலத்தில் ஆதிக்கம் வைச்சு வந்த விபரம் பைங் குனி

50 . . த்துக்கு தெற்கு அனாதி பூறு[வ]மான நஞ்சை காணி இரண்டு சோள க

51 ாணி ஒண்ணு பட்டவர்தி செயி ஒண்ணு கோவில் சேந்த தென்னம

52 ரம் நூறு மனையைச் சேந்த தென்னமரம் அன்பது கிடாமாடு பனிரண்டு க

53 றவை யெருமை இரண்டு விறுதல எருமை இரண்டு எருது நாலு கறவைப் பசு அஞ்

54 சு விறுதல பசு பதினாறு செங்கண்ணு அஞ்சு கிடாரிக்கண் ஏழு எருமைக் கிடாரி

55 க்கண் மூணு கிடாக் கண் ஒண்ணு ஆக உருப்படி அன்பத்தேழில் தமையனாகிய செ

56 தய்வராய பூசாரி வயிரிசெட்டிபாளையத்தில் வருகுற போது ஓட்டி வந்தது எரு

57 து நாலு கறவைப் பசு இரண்டு கறவை யெருமை ஒண்ணு செகு இரண்டு விறு

58 தல பசு ஒண்ணு ஆக உருப்படி பத்து ஒட்டி வந்தது கூத்தூரி தம்பி யாகிய வா

59 . சம் ஒப்பிச்சு வந்தது உருப்படி நாற்பத்தேழு சன்னதிப் பரிகலம் அரினா முதலி

60 பண்ணவிச்ச உபயம் வெள்ளிக் கிரீடம் இரண்டுக்கு அன்பது பொன் குடமணித் துர

61 வடம் ஒண்ணுக்கு முப்பது பொன் மோகன மாலை ஒண்ணுக்கு இருவத்தஞ்சு பொன்

62 பலவித உபயம் பொட்டுக் காரை மூணுக்குப் பொன் இருபது பொன் கண்ணடக்கம்

63 சோடு ஏழு வெள்ளிக் கண்ணடக்கம் [சோடு] இருவது அபையஸ்தம் இரண்டுக்குப் பத்

64 துப் பொன் வெள்ளியருணாள் அஞ்சுக்கு இருவத்தஞ்சு பொன் ஒட்டியாண மூ

65 ணுக்கு முப்பது பொன் செப்புக்குட மூணுக்கு பதினஞ்சு பொன் குத்துவி

66 ழக்கு இரண்டுக்குப் பத்துப் பொன் திருணீத்துக்கிண்ணம் அஞ் சுக்கு அஞ்சு பெ

67 பான் பெரிய மணி இரண்டுக்கு பத்துப் பொன் தூபக்கால் இரண் டுக்கு இருப

68 து பணம் கற்பூர தீபத்தட்டு இரண்டுக்கு பதினஞ்சு பணம் பட்டுச் சீலைக் க

69 ச்சை உள்பட நகை முப்பது இந்த வகையில் வடக்கே வயிரி செட்டிபாளை

70 யத்துக்கு அம்மன் சன்னதிக்கு பெரியவரெடுத்து வந்தது செப்புக் குடம் ஒண்ணு

71 கற்பூரத் தட்டம் ஒண்ணு தூபக்கால் ஒண்ணு கிண்ணம் இரண்டு பட்டுச் சீலை இர

72 ண்டு கச்சை இரண்டு ஆக நகை பத்து மத்த நகை கூத்தூரு ஸ்தல[த்து*]க்கு நிறுத்தி வந்த

73 து வருஷாவதி விசேஷ தினங்களில் இந்த நகை அனாதி பூறுவம் பெரியவர்கள் நடந்து கெ

74 ாண்டபடிக்கு வயிரிசெட்டிபாளையம் ஸ்தலத்துக்கு தேர் திரு விளாவுக்கு கொண்டு வ

75 ந்து அலங்காரம் பண்ணிவிக்குறது திருக்கம்பைபுரம் வயிரிசெட்டி பாளையம் க

76 ாமாட்சி யம்மன் சன்னதிக்கு ஆதிக்கமா[றா]டிக் கண்ணப்ப கோத்திரம் சுருதி வரதப்ப

77 னாயக்கரவர்கள் காம[ா*]ட்சியம்மன் சன்னதிக்கு பட்டவற்தி[ன் ணடு] பண்ணின காற

78 ணைக் கலுங்கிப் பாச்சலில் உமைப்பிடாரி கோவிலுங்கு தெற்கு நஞ்சை செயிக வயி

79 ரிசெட்டிபாளையம் புஞ்சையில் [குழி] 30 இதுவே ஆதிக்கம் பண்ணிக்கொண்டு ஸ்த

80 லமுந் தரிச்சுக் கொண்டிருப்போமாகவும் இந்தப்படிக்கு அம்மன் சன்னதியில் பட்

81 டயமெழுதினது கூத்தூரு ஸ்தலத்துக்கு திருக்கம்பைபுரம் வயிரி செட்டிப்பாளையம் தல

82 த்துக்கும் பேதா பேதங்களில்லாமல் முன்னம் பெரியவர்கள் நடந்து கொண்ட

83 படிக்கு கல்லுங் காவேரியும் சந்திராதித்த ருள்ளவரைக்கும் பேதமில்லாமல் நடந்து

84 கொள்ளுவோமாகவும் இரண்டு ஸ்தலத்திலே இராசீக தெய்வீகங் கள் நடந்தால் ஒ

85 ரு தலத்திலே யிருக்கிறவர்கள் ஒரு தலத்துக்கு உத்தரவாதம் பண்ணுகுறது இந்த

86 ப்படிக்கு பட்டயமெழுதயில் தென்னங்கொடையா பிள்ளை அம்பலகொண்டா

87 பிள்ளை அகிலாண்டம் பிள்ளை தென்னாராயணமுடையா பிள்ளை மற்று முண்டாகி

88 ய சன்னதிக் குடி[ம*]க்கள் [லெல்லா]ங் கூடி எழுதிவிச்சது இதே பிற்காத்து தமையனாகிய

89 தெய்வாரய பூசாரி வயிரிசெட்டிபாளையம் அம்மன் ஸ்தலத்தைப் பரிபாலன

90 ம் பண்ணிக் கொண்டு வீரமாச்சன்பட்டி ஸ்தலத்தையும் பரிபாலனம் பண்ணிக் செ

91 காண்டு சுகமேயிருக்கவும் கூத்தூரு ஸ்தலமும் செயங்கொண்டா னும் இரண்டு

92 தலத்தையும் இளையவன் செல்லக்குமார பூசாரி அம்மன் சன்னதி பரிபாலனம் ப

93 ண்ணிக் கொண்டு சுகமே இருக்கவும் இவாளுக்கு முன்னம் அம்மன் அடிமைக் கெ

94 காள்ளயில் அம்மன் சொன்ன வரப்பிறசாதம் என்னாளும் இவ்வாள் சொல்லு

95 க்குள்ளாக வாக்கு மனுவிரங்கி நடப்பிவிக்கிறோமென்றும் இவ் வாளுக்குத் தெ

96 தய்வ நம்பியென்று தெய்வராய னென்றுஞ் செல்லக்குமார னென் றும் அம்

97 மன் கட்டளையிட்டது ஆகையினாலே அம்மன் சகல பாக்கியமும் (முங்) கட்டளை பண்ணி

98 இரட்சிப்பார்

கிலுகிலி மந்தி

வண்டிகளில் உப்பேந்தி உமட்டியரும் புதல்வரும் உடன் வர உமணர்களின் வணிகச் சாத்தொன்று சிறுபாணாற்றுப்படை வழி நடந்தது. அவர்களுடன் பிள்ளை போலச் செல்லமாய் வளர்க்கப்பட்ட மந்தியொன்றும் பயணித்தது. பயணத் துன்பம் தெரியாதிருக்க விளையாடிச் செல்வது இன்று நேற்று பழக்கமா! உமணர் புதல்வர்களுடன் பிள்ளை மந்தியும் விளையாடி மகிழ்ந்தது. நன்னீரில் பிறந்த முத்துக்களை வாள் போல் வாயமைந்த சிப்பியினுள் அடைத்துக் கிலுகிலி செய்திருந்தனர் அந்நாள் தமிழர். எதற்கும் இருக்கட்டுமென்று அப்படியொரு கிலுகிலியைத் தன்னோடு கொணர்ந்திருந்த பிள்ளை மந்தி உமணர் புதல்வருடன் அதை ஆட்டி ஒலிக்கச் செய்து விளையாடிக் கொண்டே போனதாம். இந்த ஆட்டம் பயணக் களைப்பு மறக்கவா அல்லது பிள்ளைகள் அழுகை நீக்கவா நாமறியோம். ஆனால் சிப்பியும் முத்துமாய் விளங்கிய சங்கக் கிலுகிலி இன்று தகரத்திற்கும் பிளாஸ்டிக்கிற்கும் தடம் பெயர்ந்திருப்பது உண்மை.

— ராஜி

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. தேவர் மலைக் குடைவரை*

அர. அகிலா

புதுக்கோட்டையிலிருந்து பொன்னமராவதி செல்லும் சாலையில் பேரையூருக்கான பாதை வலப்புறம் பிரிகிறது. இப்பாதையில் சற்று உள் சென்று இடப்புறம் திரும்பி மண் சாலையொன்றில் ஏறத்தாழ ஒன்றரை கிலோ மீட்டர் தொல்லை கருதாது செல்பவர்க்குத் தேவர் மலைப் பாதை பிடிபடும். இந்த இடத்திற்கு மேல் சைக்கிள் தவிர வேறெந்த ஊர்தியும் செல்ல முடியாதென்பதால், இங்கு இறங்கிக் கண்மாய்க் கரையில் முட்செடிகளுக்கும் மண் சரிவுக்கும் ஈடு கொடுத்து ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் நடக்க வல்லவர்கள் தேவர் மலை என்றழைக்கப்படும் அருமையான களத்தை அடையலாம். கரையிலிருந்து சடாரென இறங்கும் பாதை வயல்களைத் தாண்டி மலைச் சரிவை நாடுகிறது. இந்தத் திருப்பத்தில் பெரியதும் பழையதுமான அரச மரமொன்று காற்று வீச்சில் கிளைகளைக் குலுக்கிக் கொண்டு ஆயிரம் இலைகளை விசிறி வரவேற்பு தருகிறது. இதன் நிழலில் பிள்ளையாரும் நாகரும். சற்றே தள்ளி, வளர்ந்து பரவிய நாவல் மரம். தென்புறத்தே புளிய மரங்கள். வடபுறத்தே கண்ணுக்கெட்டிய தொலைவு வரை வயல்கள். பின்னால் நெடுகப் படுத்த யானைக் கூட்டமாய்க் குன்று வரிசை. மேலே ஆழமான சுனையொன்று அதிகமான நீரைத் தேக்கி வைத்திருப்பதால் மலை தழுவி வரும் காற்று குளிர் தந்து செல்கிறது. எத்தனை வெயில் அடித்தாலும் தெரியாத நிழல் பரந்த இந்தச் சூழலில்தான் குடைவரைக் கோயிலொன்று பிற்காலத்து முகமண்டபத்துடன் நம்மை வரவேற்கிறது. சுற்றுலாத் தலமாக்கினால் மக்கள் கூட்டம் மண்டுவது நிச்சயம்.

கோயிலுக்கு முன்னால் நாவல் மரத்தடியில் சிதைந்த மேடையில் இரட்டைப் பிறவிகள் போல் இரண்டு நந்திகள். ஏன் இரண்டென்று யாருக்கும் தெரியவில்லை. இரண்டுமே உருக்குலையாப் பிற்காலப் படைப்புகள்.

பின்னால் சரிந்துள்ள குன்றின் முன்னால் கல்லடுக்கிய கட்டுமானமாய் முகமண்டபம். இதன் கிழக்கு வாயிலில் நான்கு படிகள்.

---

* மருத்துவர்கள் திரு. சு. பழனியாண்டி, திரு. கோ. நா. மோகனவேலு அறக்கட்டளைகளின் உதவியுடன் இக்கட்டுரைக்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முகமண்டபத் தாங்குதளம் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை, துணைக்கம்பு என அமைந் துள்ளது. வடபுறத்தே குமுதம் வரை மண் மேடிட்டுள்ளது. தென் புறத்தே முதலிலும் இறுதியிலுமாய் அமைந்துள்ள தாங்குதளம் இடைப்பகுதியில் பாறை இடையீட்டால் பட்டிகை மட்டும் காட்டப் பெற்றுத் துணைக்கம்போடு சுவர் தாங்கி நிற்கிறது. கிழக்கிலும் வடக்கிலும் பக்கத்திற்கு நான்கென பிரம்மகாந்த அரைத்தூண்கள். இவற்றின் மேற்பகுதியில் கலசம், தாடி, கும்பம், பாலிகை, பலகை, வீரகண்டம், போதிகை போன்ற தலையுறுப்புகள் ஒழுங்குபட அமைந் துள்ளன. வெட்டுப் போதிகையின் பக்கங்களில் தரங்கத்தை நினை வூட்டும் கோடுகள். போதிகைகளின் மேலமரும் உத்திரத்தையொட்டி தட்டோட்டுக் கூரை. இதுவே சற்று முன்னிழுக்கப்பட்டுக் கபோதம் போல் காட்டப்பட்டுள்ளது.

தென் சுவரின் கிழக்குப் பகுதியில் இரண்டு பிரம்மகாந்த அரைத் தூண்கள் காட்டப்பட்டுள்ளன. நடுப்பகுதியில் ஒரு மீட்டர் இடை வெளிக்குள் கோட்ட அணைவுத் தூண்கள் போல மேலுமிரண்டு பிரம்ம காந்த அரைத்தூண்கள். ஆனால் கோட்டமில்லை. அதற்குப் பதிலாக சன்னலொன்று கல்லிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்குப் பகுதியில் தூண்களற்ற சுவர். வடக்குச் சுவர் பின்னாலுள்ள பாறையோடு முட்டுமிடத்தில் ஏற்பட்டுள்ள 55 செ. மீ. இடைவெளி யைச் செங்கற்கள் அடுக்கி அடைத்துள்ளார்கள்.

91 செ. மீ. அகலமுள்ள கிழக்கு வாயில், முகப்புச் சுவரினின்று சற்று உள்ளடங்கித் திருநிலைக் கால்களும் மேல்நிலையும் கீழ் நிலையும் பெற்று மண்டபத்திற்குள் வழி விடுகிறது. வாயிலின் இரு புறமும் பக்கத்திற்கொன்றாய் முகப்புச் சுவரை அணி செய்யும் பிரம்மகாந்த அரைத்தூண்கள், மேலுறுப்புகள் ஏதுமின்றி போதி கைளை மட்டும் நீட்டி உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனக் கட்டணைப்பில் தாமரையிதழ்கள் எழுதப்பெற்ற வலபி. மேலே வெளிவாங்கலாய்த் தட்டோட்டுக் கபோதம்.

தென் வடலாக 5.81 மீட்டர் அகலமும் கிழக்கு மேற்காக 5.94 மீட்டர் நீளமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தைப் பக்கத்திற்கு மூன்றென ஆறு தூண்கள் தாங்குகின்றன. மேலும் கீழும் இடை யிலும் சதுரங்கள் அமைய, சதுரங்களுக்கு இடையில் கட்டுகள். மேலாக அமைந்துள்ள சதுரத்தின் மேல் தனியாக ஒரு கல் வைக்கப் பட்டுள்ளது. அதன் மீது பக்கங்களில் தரங்கக் கோடுகளோடு கூடிய வெட்டுப் போதிகைகள் கிளைத்து உத்திரத்தைத் தாங்குகின்றன.[1] உத்திரத்தின் மீது இருபுற வாஜனத் தழுவலில் வலபி. மேலே

கூரை. கிழக்குச் சுவரில் இருவரிசைத் தூண்களுக்கும் நேராய் நிறை வடையாப் போதிகைகள் மட்டும். தூண் வரிசைகளுக்கு வடக்கிலும் தெற்கிலும் கல் பாவிய கூரை.

முகமண்டபத்தில் சிறியதொரு பலித்தளமும் அதன் முன்னே சற்றுப் பெரிய தளத்தில் நந்தியொன்றும் காட்டப்பட்டுள்ளன. வலப் புறத்தே மேடையமைத்துத் தேவநாயகி என்ற பெயரில் அம்மனை நிறுவியுள்ளனர். பிற்காலத் திருமேனி. முன் கைகள் காப்பும் அருளும் காட்டப் பின் கைகள் மலர் மொட்டுக்களை ஏந்தியுள்ளன. பாரதியின் பாடல் வரியை நினைவூட்டும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த தோற்றமுமாய், இடையில் பட்டாடை கணுக்கால்கள் வரை தாழ அம்மை காட்சி தருகிறார். முகமண்டபத்தின் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன.

முகமண்டபத்தை அடுத்த பாறைச்சரிவின் தென், வட பகுதி களைக் கோட்டங்களாக்கிப் பிள்ளையாரையும் சண்டேசுவரரையும்[2] அமர்த்தியுள்ளனர். இடைப்பட்ட பகுதியில் ஆழமாய்க் குடைந்து சிறு முகப்புடன் கூடிய கருவறை அமைத்துள்ளனர்.

இந்த முகப்பு, முகமண்டபத் தரையிலிருந்து 39 செ. மீ. உயரத் தில் மேடை போலத் தென் வடலாக 2.92 மீட்டர் நீளத்திற்கும் கிழக்கு மேற்காக 59 செ. மீ. அகலத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது. தூண்களற்ற இந்த முகப்பிற்குப் பின்னால் கருவறை முன்சுவரின் நடுப்பகுதியில் 63 செ. மீ. அகலமும் 1.59 மீட்டர் உயரமும் உள்ள நுழை வாயில். இதன் இருபுறமும் பிரம்மகாந்த அரைத்தூண்கள். முகப்பின் வட, தென் பாறைப் பகுதிகள் கருவறை முன் சுவரைத் தொடுமிடங்களில் பக்கத்திற்கொன்றாக மேலுமிரண்டு பிரம்மகாந்த அரைத்தூண்கள். இவற்றின் தலைப்பில் கிளைக்கும் தரங்கப் போதி கைகள் மேலே உத்திரத்தைத் தொடுகின்றன. கீழ்க்கைகளை விட மேற் கைகள் பெரிதாக உள்ள இப்போதிகைகளின் தரங்க எழுச்சிகளில், கீழிருந்து நான்காவது எழுச்சி மற்றவற்றினும் பெரிதாகக் காட்டப் பட்டுள்ளது. கருவறை வாயிலின் இரு புறமும் இத்தூண்களுக்கு இடைப்பட்ட பகுதி கோட்டங்களாக்கப்பட்டு முனிவர்களின் திருவுரு வங்கள் இடம் பெற்றுள்ளன. புலத்தியர், அகத்தியர் என்றழைக்கப் படும் இவ்வடிவங்கள் போன்ற முனிவர் திருவுருவங்கள் திருக்கோளக் குடிக் குடைவரையின் முகமண்டபப் பக்கச் சுவர்களிலும் காணப் படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

கருவறை வாயில், திருநிலைக் கால்கள் காட்டப்பெற்று மேல், கீழ் நிலைகளுடன் அமைந்துள்ளது. பக்கத் தூண்களின் போதிகை

கள் தாங்கும் உத்திரம் கருவறையின் மேலும் தென் வடலாகத் தொடர்கிறது. அதன் மீது பிதுக்கமாய்ச் சிறு வாஜனம். கபோதம் 56.5 செ.மீ. முன்னோக்கி வளைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ்ப்பகுதி நன்றாகச் சமன்படுத்தப்பட்டு வழவழப்பாகக் காட்சி தர, மேற்பகுதி பாறையாகவே விடப்பட்டுள்ளது.

கிழக்கு மேற்காக 2.64 மீட்டர் அகலமும் தென் வடலாக 2.66 மீட்டர் நீளமும் 1.96 மீட்டர் உயரமும் கொண்டு அமைந்துள்ள கருவறையின் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. கூரையையொட்டி நான்கு புறமும் வாஜனம் ஓடுகிறது. கருவறையின் மையப் பகுதியில் பாறையிலேயே வெட்டப்பெற்ற ஆவுடையார் கிழக்கு மேற்காக 1.23 மீட்டர் நீளமும் தென் வடலாக 1.19 மீட்டர் அகலமும் கொண்டு, உபானம், ஜகதி, உருள் குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை, துணைக்கம்பு என்ற கட்டமைப்பில் விளங்க, அதன் மீது 65 செ.மீ. உயர லிங்கமேனி காட்டப்பட்டுள்ளது.

நீர் வெளியேறக் கருவறை வாயிலின் வடபுறமிருந்து கால் வெட்டி முகமண்டப வடபுற முதல் தூண் பின்வரை நீட்டியிருக்கிறார்கள். இத்துடன் வடபுறக் கோட்டத்தின் கீழ்ப்பகுதியிலும் அகத்தியர் திருவடிகளுக்கு இடப்புறத்தே ஒரு துளையிட்டு நீர் ஓடிவர வழியமைத்துள்ளனர்.

கருவறை முகப்பைக் காட்டிலும் நன்கு முன்தள்ளி அமைந்துள்ள பக்கப் பாறைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கோட்டங்களில் தென்புறம் பிள்ளையாரும் வடபுறம் சண்டேசுவரரும் செதுக்கப்பட்டுள்ளனர். 91 செ.மீ. அகலமும் 1.27 மீட்டர் உயரமும் 37 செ.மீ. ஆழமும் கொண்ட தென்புறக் கோட்டத்தின் கீழ்த்தளம் முகமண்டபத் தரையிலிருந்து 33 செ.மீ. உயரத்தில் அமைந்துள்ளது. வடபுறக் கோட்டமோ 66 செ.மீ. அகலமும் 96 செ.மீ. உயரமும் 18 செ.மீ. ஆழமும் கொண்டுள்ளது. முகமண்டபத் தரையிலிருந்து 23 செ.மீ. உயரத்தில் உள்ள இக்கோட்டக் கீழ்த்தளத்தின் மீது 13 செ.மீ. உயரத்தில் மேலும் ஒரு தளம் காட்டி அதில் சண்டேசுவரரை அமர்த்தியுள்ளனர்.

இக்குடைவரைக் கோயில் வளாகத்தின் தென்புறத்தே மேற்கு நோக்கிய திருவாயிலுடன் பிற்காலத் திருப்பணியாய்ச் சிறியதொரு திருமுன். ஜகதி,கண்டம், பட்டிகை என்றமைந்துள்ள தாங்குதளத்தின் மீது சுவரும் உத்திரமும் தட்டோட்டுக் கூரையுடன். இக்கூரையே கபோதமாகவும் வளைக்கப்பட்டுள்ளது. கூரையின் மேல் கிரீவமற்ற நாகர சிகரம். உச்சிக்குடம் இருந்து உடைந்துள்ளது. இதைப்

பெருமிழலைக் குறும்பர் அடக்கமான இடமாகக் கூறுகிறார்கள். உள்ளே சிறிய அளவிலான லிங்கத் திருமேனியொன்றும் எதிரில் நந்தி யொன்றும் உள்ளன.

நேர் நின்ற திருக்கோலத்தில் கைகளைக் குவித்து வணக்க முத்திரையில் அமைத்து ருத்திராக்கக் கங்கணங்களும் வளைகளும் கழுத்தணியும் கொண்டவராய், மழித்த தலையிலும் சுற்றிவர ருத்திராக்கமணிந்து இடுப்பில் அரையாடையுடன் லிங்கத்தை வழிபடுவது போல் வடபுறத்தே காணப்படும் அடியவர் திருமேனியைப் பெருமிழலைக் குறும்பராகக் கொண்டுள்ளனர். இவருக்கு எதிரில் உள்ள சிற்ப வடிவத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் என்கிறார்கள். இத்திருமேனியின் வலக்கையில் மலர் மொட்டும் இடக்கையில் பொதுவாக அய்யனார் சிற்பங்களில் காணப்படும் செண்டும் காட்டப்பட்டுள்ளன. சடாமகுடமும் மகர குண்டலங்களும் கழுத்தில் ருத்திராக்கமும் கொண்டமைந்துள்ள இவ்வடிவத்தின் இடைப் பகுதியில் கணுக்கால் வரை தழைந்த கீழ்ப்பாய்ச்சாடை. வழக்கமாகப் பார்க்கும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவுருவங்களிலிருந்து வேறுபட்டமைந்துள்ள இச்சிற்பம் பிற்கால நிறுவலாகும்.

பெருமிழலைக் குறும்பனார் சுந்தரர் மீது கொண்ட பிசிராந்தையன்பைத் திருத்தொண்டர் புராணம் பத்துப் பாடல்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.[3] சுந்தரர் கயிலை செல்வது கேட்டு, அவரின்றி இந்த மண்ணில் வாழ விரும்பாது தம் யோக ஆற்றலால் அவருக்கு முன் கயிலை சென்று காத்திருந்தவர் பெருமிழலைக் குறும்பனார்.

இப்போதும் பெருமிழலைக் குறும்பனாரைப் போற்றி இக்கோயிலில் பெருவிழாக்கள் எடுக்கப்படுவதும் அதற்குத் திரளான மக்கள் கூடுவதும் அதன் காரணமாய்ப் பாண்டியர் குடைவரைக்கும் பார்வைப் பரிசுகள் கிடைப்பதையும் அறிய மகிழ்வேற்படுகிறது. பிற்காலத்துத் திருமுன் ஒன்றினால் பழமையின் பெருமையாய் விளங்கும் தேவர் மலைக் குடைவரையும் குறிஞ்சிப் பூவாய்க் கிடைக்கும் மக்கள் காற்றை மகிழ்ந்து உள்ளிழுத்து வாடாமல் நின்று கொண்டிருக்கிறது.

சிற்பங்கள்

மையக் கோயிலில் பிற்காலப் பணியாய் அம்மன் திருமேனியும் குடைவரைப் புதையல்களாய்ச் சண்டேசுவரர், பிள்ளையார் மற்றும் முனிவர் சிற்பங்களும் உள்ளன.

தென்புறக் கோட்டத்தில் அரைத்தாமரை அமர்வில் காட்டப்பட்டிருக்கும் பிள்ளையாரின் திருமேனி சிதிலமாகியுள்ளது. மார்புப் பகுதியிலும் வயிற்றுப் பகுதியிலும் பாறை செதில் செதிலாகப் பிளந்துள்ளது. இவரது வலம்புரித் துதிக்கையில் மோதகம். மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் பட்டை வளைகளும் அணிந்து சிறுமகுடமும் உதர பந்தமுமாய் அமர்ந்திருக்கும் இப்பெருமானின் இட முன் கை வயிற்றருகே பறக்கும் ஆடையைப் பிடித்துள்ளது. வலப் பின் கையில் மலர். இடப் பின் கையிலிருப்பது கரும்புத் தோகை போல் காட்சி தருகிறது. வல முன் கை மணிக்கட்டிற்குக் கீழே சிதைந்துள்ளது. நல்ல கம்பீரமான திருமேனி என்றாலும் குன்றக்குடி, வல்லம் பிள்ளையார் திருமேனிகளின் எழிலுக்கும் வடிப்புக்கும் இணையாகாது.

வடபுறக் கோட்டத்தில் வலக்காலைக் குத்துக்காலாக வைத்து இடக் காலை மடித்து ஆடையை இருபுறத்தேயும் தொடையின் மேற்பகுதி வரை சுருக்கி அமர்ந்துள்ள சண்டேசுவரப் பெருமானின் வலக்கையில் கீழிருந்து மேலாகப் பெரிதாகும் உருள் தடி.[4] படமெடுத்த தலையுடன் பாம்பொன்று சுற்றியுள்ள இத்தடியை வலத்தொடையில் தாங்கலாகச் சாய்த்துள்ளார். ஆடையின் முடிச்சைப் பிடித்திருக்கும் இடக்கை கடகமாய் இடத்தொடை மேல். இக்கையின் சுண்டுவிரலில் மோதிரம் காட்டப்பட்டுள்ளது. சடாபாரத்தின் உச்சியில் முடிகள் சிறு முடிச்சாக்கப்பட்டு அதைச் சுற்றிலும் ருத்திராக்க வளையம். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். மணிக்கட்டுகளில் பட்டை வளைகளும் மேற்கைகளில் கங்கணங்களும் ருத்திராக்கக் கழுத்தணியும் அணிந்துள்ள இவரது திருமுகம் மிக அழகுற வடிக்கப்பட்டுள்ளது. தமிழகக் குடைவரைகளில் காட்டப்பட்டுள்ள சண்டேசுவரத் திருமேனிகளுள் இதுவே மிகச் சிறந்த வடிப்பாய் மிளிர்கிறது.

கருவறை முன் சுவரின் தென்கோட்டத்தில் நிற்கும் இளைய முனிவரைப் புலத்தியரென்று அழைக்கின்றனர். சடா மகுடமணிந்த களையான முகம், கீழாடையைக் கீழ்ப்பாய்ச்சாகக் கட்டிக் கொசுவங்களை நடுவில் அடுக்கிய பாங்கு கவர்ச்சியாக இருப்பதுடன் சிற்பத் திருமேனியின் காலத்தை நிர்ணயிக்கவும் உதவுகிறது. இடுப்பாடையின் முடிச்சும் தொங்கலும் இடப்புறம் காட்டப்பட்டுள்ளன. இடக்கை கருவறை நோக்கிப் போற்றிடும் பதாகமாய் அமைய வலக்கை தொடை மீது அமர்ந்துள்ளது.[5] நன்றாக மழித்த திருமுகத்தின் இருபுறமும் தொங்கும் சில சடைப் புரிகள் வலத் தோளில் புரண்டு அழகூட்டுகின்றன. அணிகலன்களற்ற செவிகள் நீள் செவிகளாய் அமைந்துள்ளன. துணியை மடித்து முப்புரி நூலாய் அணிந்துள்ள இவர் திருக்கோளக்குடி புலத்தியரை விட மிக அழகுற வடிக்கப்பட்டுள்ளார். பார்வையிலேயே இளமை துள்ளுகிறது.

வலப்பாதத்தைத் திரஸ்ரயமாகவும் இடப்பாதத்தைச் சமமாகவும் நிறுத்திப் புலத்தியரைப் போலவே ஆடையணிந்து, செழித்து வளர்ந்த தாடியும் மீசையுமாய் வடகோட்டத்தில் காட்சி தரும் முதிய முனிவரின் வலக்கை கருவறை இறையைப் போற்றிட, இடக்கை தொடைமேல்.[6]



புலத்தியர்

அகத்தியர்

துணியை மடித்து முப்புரிநூலாய்க் கொண்டுள்ள இப்பெருமகனாரின் திருமுகமும் கனிந்து அருளுடன் காட்சி தருகிறது. திருக்கோளக்குடி அகத்தியர் கையிலிருக்கும் பூங்கொத்தை இந்த அகத்தியரிடம் காண முடியவில்லை.

இருவர் திருமேனிகளும் சிறு தளமொன்றின் மீது நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளன. இத்தளம் கருவறை வாயிலில் சிறு படியாக நீள்கிறது.

கல்வெட்டு

குடைவரைக் கோயில் அமைந்துள்ள பாறைச் சரிவின் தென் புறத்தே இக்கோயிலுக்கும் பெருமிழலைக் குறும்பர் திருமுன்னுக்கும் இடைப்பட்ட பகுதியில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.[7] பதினேழு வரிகளில் அமைந்துள்ள இக்கல்வெட்டு துன்முகி ஆண்டு, ஆவணித் திங்கள் பதினோராம் நாளன்று, பெரியான் பேரையூர் பரையன் மகள் நாடியாற்கு, கான நாட்டு விருதராச பயங்கர வளநாட்டுப் படைப் பற்றான மலையாலங்குடியைச் சேர்ந்த ஊரவையார் இறையிலிக் காணியாக நிலமும் வீட்டு மனையொன்றும் தந்தது பற்றிப் பேசு கிறது.[8] மலையாலங்குடியில் தேவதானக் குறை ஏற்பட்டு அதன் காரணமாக மாளுவ குமாரப்பர் நஞ்சு தின்று இறந்ததாகக் கூறும் கல்வெட்டு ஏதோ ஒரு வகையில் அவரோடு நாடியாரைத் தொடர்பு படுத்துகிறது. கல்வெட்டின் பிற்பகுதியில் பல இடங்களில் எழுத்துக் கள் பொரிந்திருப்பதால் இந்தத் தொடர்பினை அறியக்கூடவில்லை. இவ்வம்மைக்கு உதிரப்பட்டியாக மூன்று மா நிலம் விடப்பட்டிருந்தது. இவர் மாமன் பெயர் பொன்னன். மலையாலங்குடி புரவான ஆதங்குடி வயலைச் சேர்ந்த நாதவன நிலம், பொன்னுலக நிலம், வேவலப் பொன்னேரி வயக்கல், பெரியான் வயக்கல் போன்ற நிலப்பகுதி களைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலைச் சிறகில் இருந்த தச்சர் மனைக்குத் தெற்கிலிருந்த மனை இவ்வம்மைக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. நாடியாற்கு நிலமும் மனையுமளித்த ஊராரின் சார்பில் சோழ மாணிக்கப் பேரையன். வாணவதரையன், சமைய மாணிக்கப் பரையன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

குடைவரையின் காலம்

குடைவரையின் அமைப்பு, சிற்பங்களின் நேர்த்தி மற்றும் கலை யமைப்பு கொண்டு நோக்கும் போது கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலப் பணிகளுள் ஒன்றாய் இதைக் கொள்ள முடியும். இது பாண்டியர் பணியா, முத்தரையர் பணியா என்பதை வேறுபடுத்தி நிறுவச் சான்றேதும் கிடைக்கவில்லை.

ஏற்புக்கோடல்

இத்திருக்கோயிலைக் காணச் சென்றபோது அன்போடு உடன் வந்து உதவிய பேரையூர் சிவாச்சாரியார் திரு. கண்ணன் குருக்கள், அவரது திருமகன் க. கார்த்திக், இரண்டாம் முறை சென்றபோது

உடன் வந்து நெடுநேரம் துணையிருந்து இலக்கியம் மற்றும் கலைத் தொடர்பான செய்திகளைப் பகிர்ந்து கொண்டு மகிழ்வித்த மல்லாங் குடிப் பெரியவர்கள் திரு. பெ. இராமசாமி, திரு. சி. சோமசுந்தரம், அன்போடு வரவேற்று மகிழ்வித்த அவர்தம் குடும்பத்தார், தேவர் மலைக் குடைவரையைப் பார்ப்பதற்குக் காரணமாய் அமைந்த தமிழ் மாமுனிவர் வணக்கத்திற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், வணக்கத்திற்குரிய தவத்திரு இளவரசு சந்நிதானம், உடன் வந்த கவிஞர். திரு. வே. சங்கர நாராயணன் ஆகியோர்க்கு இக்கட்டுரை யாசிரியரின் பணிவன்பு நிறைந்த நன்றி உரியது.

அடிக்குறிப்புகள்

1. இத்தூண்களின் போதிகைகள் முற்காலச் சோழர் பாணியில் உருவாக்கப்பட்டிருப்பதாகத் திரு. தி. இராசமாணிக்கம் கூறுவது சரியன்று. தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1989, பக். 55.
   முற்காலச் சோழர் காலத்தில் போதிகைகள் தரங்க வரிசையில் குளவு கொண்டு பல்லவர் முறைக்குச் சற்று மாறுபட்டு அமைந்தன. இடைக்காலச் சோழர் காலத்தில் இது வெட்டுப் போதிகையாக மாறியது. பிறகு மதலையும் நாணுதலும் பூ மொட்டும் போதிகை வளர்ச்சியில் இடம் பெற்றன. தேவர் மலை முகமண்டபப் போதிகைகள் பிற்காலப் பாண்டியர்க்கும் சற்றுப் பிற்பட்டவையாகலாம்.

2. திரு. சி. கே. சுப்பிரமணியனார் இச்சண்டேசுவரர் சிற்பத்தைப் பெருமிழலைக் குறும்பனாராகக் கொண்டு, சிற்பத்தின் ஒளிப்படத் தையும் தம் நூலில் வெளியிட்டுள்ளார். திருத்தொண்டர் புராணம் மூன்றாம் பகுதி - இரண்டாம் பாகம், சேக்கிழார் நிலையம், கோயமுத்தூர், 1980, பக். 815. 808ஆம் பக்கத்திற்கு எதிர்ப் பக்கத்தில் படம் வெளியிடப்பட்டுள்ளது.

3. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் வெளியீடு, 1982, பக். 204 - 205.

4. திரு. தி. இராசமாணிக்கம் இதை மழுவென்று குறிப்பிடுவது பொருந்தாது. தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக் 56. கோடாரியையே மழு என்று சிற்ப நூல்கள் குறிக்கின்றன. இது டங்கம், பரசு என்றும் அழைக்கப்படும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை, 1978, பக். 128.

5. இதைக் கடி முத்திரை என்று திரு. தி. இராசமாணிக்கம் குறிப்பிட்டிருப்பது சரியல்ல. தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 55.

6. ஊரு அஸ்தமான இதைத் திரு. தி. இராசமாணிக்கம் கடிமுத்திரையென்று கூறுகிறார். மேற்படி., பக். 55.

7. இக்கல்வெட்டு எந்தக் குறிப்பிட்ட மன்னனது என்பது தெரியவில்லை என்று திரு. தி. இராசமாணிக்கம் எழுதியுள்ளார். இக்கல்வெட்டு எந்த மன்னரையுமே குறிக்கவில்லை. தேவர் மலைக்கோயில் விருதராஜபயங்கர வள நாட்டில் இருப்பதாகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் எழுதியிருப்பதும் தவறாகும். கல்வெட்டில் இந்தக் கோயிலைப் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி., பக். 57.

8. Inscriptions of Pudukkottai State, ins. 927, கல்வெட்டுத் தொகுதியில், இக்கல்வெட்டு குடைவரைக்கு இடப்புறமுள்ள பாறையில் இருப்பதாகத் தரப்பட்டுள்ள தகவல் சரியன்று. கல்வெட்டு வலப்புறப் பாறையில்தான் வெட்டப்பட்டுள்ளது.

வெள்ளோட்டமும் விடையோட்டமும்

ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் தன்னை நாடி வந்த பாணர்க்கு வழங்கிய தேர் பெருஞ் சிறப்புடையது. தொழில் வல்லுநர் அரிதின் முயன்று செய்த அந்தத் தேரைத் தேர் செலுத்துவதில் வல்ல ஓட்டுநர் ஓட்டிப் பார்த்து அதன் செயல் திறத்தில் நிறைவு கண்ட பிறகே அத்தேர் பாணர்க்கு வழங்கப்பட்டது. அத்தேரை இழுக்கத் தரப்பட்ட பாண்டில் என்னும் வெள்ளெருது குதிரைகளினும் விரைந்து தேரிழுக்கும் ஆற்றல் பெற்றதெனக் கவிஞர் கூறுகிறார். இதன் உண்மைத் தன்மையைப் பல்லவச் சிற்பங்கள் உணர்த்துகின்றன.

காஞ்சிபுரம் அய்ராவதேசுவரம் திருக்கோயிலில் கருவறை உட்சுவர் சிற்பங்கள் பாய்ந்து செல்லும் பாண்டில்களைக் காட்டுகின்றன. இந்த எருதுகளின் மேல் இணையாகவும் தனியாகவும் வீரர்கள். தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்தின் திரிபுரம் எரித்த ஓவியக் காட்சியில் கூட இறைவன் தேர் அருகே வெள்ளெருதே காட்டப்பட்டுள்ளது. அறம் செய்யும் போதும் தரம் பார்த்துச் செய்த இந்த நாடு இன்று ஏன் இப்படித் தாழ்ந்து விட்டது?

— ராஜி

2. தென்னிந்திய வரலாற்றில் காலப்பகுப்பு

கு. சதாசிவன்

இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னகம் தட்சிணபாதம் என்றும் திராவிடம் என்றும் வழங்கப்படுகிறது. இத்திராவிடத் தென்னாடு பழம்பெரும் பூமி என்று புவியியலார் அறிவிக்கின்றனர். இத்திராவிட நாட்டு மக்கள் திராவிட மொழி பேசி வந்தனர். இந் நாட்டின் பண்பாடும் வரலாறும் மிகப் பழமையானவை. ஆனால் இதன் வரலாறு வரையறுத்து வரையப்படவில்லை; ஆராயப்பட வில்லை. ஆராய்ச்சிக்கு வேண்டிய மூலச்சான்றுகளும் கிடைத்தில. காலத்தாலும் இடத்தாலும் பாதிக்கப்பட்டுப் பல அழிந்து போயின. எஞ்சியனவும் வரலாற்று ஆராய்ச்சிக்கு அதிகம் பயன்படுவன போல் இல்லை. எனவே இந்திய வரலாற்றில் தென்னிந்திய வரலாறு அதிகம் இடம்பெறவில்லை. வரலாறு வரைந்தோரும் தரவேண்டிய இடத்தைத் தர மறுத்தனர். தென்னிந்தியாவுக்கு வரலாறே இல்லாதது போல் அவர்கள் ஒருதலைப்பட்ச வரலாறு வரைந்தனர். அவ்வரலாற் றாளர் இந்தியா என்றால் வட இந்தியா என்றுதான் கருதினர். அனைத்துப் பேரரசுகளும் படையெடுப்புகளும் சமய, சமூக இயக்கங் களும் வட இந்தியாவில்தான் தோன்றின என்று கருதினர். இந்திய வரலாற்றில் இடம் பிடித்த இக்குறைபாட்டை, பேராசிரியர்கள் சுந்தரம் பிள்ளையும், ஸ்மித்தும் சுட்டிக் காட்டிய பின்பும் இது நீக்கப் பட்டபாடில்லை. இவர்களுக்கு எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் முகலாய வரலாறு வரைந்த எட்வர்ட்சும், காரட்டும், “ It was always a question of the penetration of the south by the north, not of the reverse process ” என்று வரைந்தனர்.[1] இவ்வாசிரியர்கள் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், கரிகால் பெருவளத்தான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், முதலாம் இராசேந் திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் மேற்கொண்ட வட நாட்டுப் படையெடுப்புகளையும் அடைந்த வெற்றிகளையும் மறந்து விட்டனர் போலும்! கேரளாவின் காலடியில் பிறந்து, இந்தியா முழுதும் அத்வைதக் கோட்பாட்டியக்கத்தைப் பரப்பிய ஆதிசங்கரரின் சேவையை மறந்தனர் போலும்! அதற்கு முன் தென்னகத்தில் தோன்றி வடநாட்டில் பரவிய பக்தி இயக்கத்தின் சாதனைகளையும் மறந்தனர் போலும்! கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வட இந்தியாவை ஆண்ட ஹர்ஷவர்த்தனரை வெற்றி கொண்ட சாளுக்கிய மாமன்னன் புலிகேசியை மறந்தனர் போலும்! பல்லவ, பாண்டிய, சோழ மரபுகள் இந்தியக் கலைக்கு ஆற்றிய சிறப்புப் பணிகளையும் மறந்தனர் போலும்!

---

1. Edwardes and Garrett, Mughal Rule in India, p. 46.

ஆனால் இன்று தொல்லியல் புவியியல், மானிடவியல், அறிஞர் களின் புதுப்புதுக் கண்டுபிடிப்புகள் மூலம் தென்னிந்தியா இழந்த இடத்தைப் பெறத் தொடங்கியுள்ளது. தென்னிந்தியாவிலும் வர லாற்று நோக்கு வளர்ச்சியுற்றுள்ளது. பல அறிஞர் மேற்கொண்ட அரிய பெரிய ஆராய்ச்சிகளின் பயனால் தென்னிந்திய வரலாறு புதுக் கண்ணோட்டத்தில் வரையப்பட்டு வருகிறது. அவ்வறிஞர் தென் னிந்தியாவுக்கு உரித்தான சில தனிப் பண்புகளைக் கண்டறிந் துள்ளனர். தனித்து நிற்கும் தன்மைத்தான திராவிடப் பண்பாடு மற்ற பண்பாடுகளால் அதிகம் பாதிக்கப்படவில்லையென்றும் உணரு கின்றனர்.

வரலாற்று மூலச்சான்றுகள் அதிகம் தென்னிந்தியாவில் இல்லை என்ற கருத்தும் மாறிவிட்டது. பழுதுபடாத, அதிகக் கலப்படம் இல்லாத இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள் தென்னிந்தியாவில்தான் உள்ளன. ஒரு காலத்தில் தென்னிந்தியா, இலங்கை, மலேயா, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், தென்னாப்பிரிக்க நாடுகள் ஒன்றாய் இணைந்து இயங்கின எனத் தெரிய வருகிறது. லெமூர் என்ற குரங்கின மிருகங்கள் தென்னகத்தின் தெற்கே வாழ்ந்து வந்தன என்று சர் ஜாண் இவான்ஸ், சர் ஜாண் கோல்டர்னஸ், பேரா சிரியர் கேக்கல், ஸ்காட் எலியட் போன்ற மேனாட்டறிஞர் கருது கின்றனர். இலங்கையின் வரலாற்றுக் குறிப்புகளும், சிலப்பதிகார மும் தென்னகத்தில் ஏற்பட்ட கடல்கோள்களைக் கூறுகின்றன. நாற் பத்தொன்பது நாடுகளை உள்ளடக்கிய அன்றைய தமிழ்நாட்டின் ஒரு நாடு குறும்பனை நாடு. அதன் எஞ்சிய பகுதிகளே இன்று குமரி மாவட்டத்தில் குளச்சல் பகுதிக்கு அருகில் உள்ள குறும்பனை என்று தோன்றுகிறது. பாண்டியர்கள் சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த கபாட புரத்தைப் பற்றிய செய்தியை அர்த்தசாத்திரம் தருகின்றது. வரலாற் றாய்வுக்கு அடிப்படைச் சான்றுகளே ஆதாரமாயின், இந்திய வரலாறு நிச்சயம் மாற்றி வரையப்பட வேண்டும். அவ்வாறு வரையப்படு மாயின் தென்னிந்தியாவே இந்திய வரலாற்றினைத் தொடங்கிவைக் கும் நிலப்பகுதி என்பது வெளிப்படும்.

இவ்வாறு வரலாற்றுக் காலத்துக்கு முந்திய கால வரலாறு கொண்ட தென்னிந்திய வரலாற்றில் ஒரு தீராப் பிரச்சினை உண்டு. அது தென்னிந்திய அறிஞர் பலரைச் சிந்திக்க வைத்த, செயலாற்றச் செய்த காலப்பகுப்புப் பிரச்சினை. தென்னிந்திய வரலாறு வட இந்திய வரலாற்றுத் தொடர்ச்சிக்கு முற்றிலும் மாறுபட்டது. தென்னிந்தியா அந்நியர் ஆட்சியில் அகப்பட்டு அதிகம் துவண்டுவிடவில்லை; தொடர்ச்சியும் கெட்டுப்போய்விடவில்லை; தனிப் பண்புகளையும் இழந்துவிடவில்லை. ஒருசில இடையீட்டுக் காலங்கள், இருண்ட

காலங்களைத் தவிர தென்னிந்திய வரலாறு அதிகம் பாதிக்கப்படவில்லை என்பது பலரறிந்த உண்மை. அப்படியிருந்தும் ஏன் காலப் பாகுபாடு தென்னிந்திய வரலாற்றைப் பொறுத்த அளவில் இயலாத ஒன்றாகி விட்டது? அதற்குச் சில காரணங்கள் இருக்கவே இருக்கின்றன.

i. அங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் தொடர்பான சின்னங்களை விட்டுச் செல்லாமை.

ii. அல்லது விட்டுச் சென்றவற்றை வெளிக்கொணர முற்கால அறிஞர் முயலாமை

iii. முறைப்படத் தொகுத்த மூலச்சான்றுகள் கிடைக்காமை அல்லது இல்லாமை.

iv. தென்னக நாடுகளிடையேயுள்ள வேறுபட்ட வரலாற்றுத் தன்மை.

v. அகழ்வாய்வு, புவியியல், இனவியல் ஆராய்ச்சிகள் திட்டமிடப் பட்டு முறைப்படச் செயல்படுத்தப்படாமை.

vi. மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படாமை.

vii. காலப்பகுப்பு செய்வோரிடையே இணைந்த முடிவு ஏற்படாமை.

வரலாற்றாளரிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கை. கருத்து வேறுபாட்டிற்கென்று திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டாம். குறிப்பாக இவ்வேறுபாடு தென்னக அறிஞர்களிடையே பரவலாக இருப்பதை நாம் காணலாம். ஏன் இந்தக் கருத்து வேறுபாடு? அதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் வரலாற்றாளர் பல சிந்தனை வட்டங்களைச் சார்ந்து நிற்கின்றனர்; ஒருதலைப்பட்ட கருத்துடையோராயும் உள்ளனர்; ஒரு குறிப்பிட்ட நோக்கை மனதிற் கொண்டு இயங்குவோராயுள்ளனர்; விருப்பு வெறுப்புக்குட்பட்டுத் தவிக்கின்றனர்; எல்லாவற்றையும் அகநிலை நோக்கிலேயே காண்கின்றனர்.

பல்லாண்டுகளாக இணைந்த ஒரு கருத்துப் பிறவாமலிருந்த போதிலும், அவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது; பல கருத்துக்கள், இயக்கங்கள், சங்கங்கள் தோன்றுகின்றன. அவற்றின் மூலம் பலரும் தத்தம் கருத்துக்களை வெளியிடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வரலாற்று விழிப்புணர்ச்சி பாராட்டுதற்குரியது; பேணிக் காப்பதற்குரியது. வேறுபாடுகள் இவற்றின்கண் புகாமல் பாதுகாக்கத்தக்கவை.

தென்னிந்திய வரலாற்றுக் காலப்பகுப்புப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், இந்திய வரலாற்றில் முதலில் காலப்பகுப்பு ஏற்பட்ட விதத்தை அறிதல் வேண்டும். இந்திய வரலாற்றை வரையப் போந்த மேனாட்டறிஞர் கொண்டு வந்ததே காலப்பகுப்பு முறை. அவர்கள் இந்திய வரலாற்றினைப் பழங்காலம், இடைக்காலம், தற் காலம் என மூன்றாகப் பகுத்தனர். இது ஐரோப்பிய வரலாற்றுப் பகுப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஐரோப்பியக் காலப் பகுப்பு முறை பெரும்பாலும் இந்தியாவுக்குப் பொருந்துவதில்லை. ஏனெனில், இந்திய வரலாற்றுத் தன்மை, தொடர்ச்சி என்பன வேறு.

மேனாட்டாரின் இந்திய வரலாற்றுக் காலப்பகுப்பை மறுத்த சிலர் இந்திய வரலாற்றினை இந்துக் காலம், முஸ்லிம் காலம், தற் காலம் என்று பகுத்தனர். இது சரியாகத் தென்படவில்லை. ஏனெனில் இந்துக்காலம், முஸ்லிம் காலம் என்று கூறியவர்கள் தற்காலத்தைக் கிறிஸ்தவக் காலம் என்று கூறுதல்தானே பொருந்தும். கிறிஸ்தவக் காலம் கி. பி. 1947-ஆம் ஆண்டுடன் முடிவடைந்ததால் அதை விடுத் தனர் போலும்! முப்பெரும் பகுதிகளாகப் பகுத்தோர் வரலாற்றுக்கு முந்திய கால வரலாற்றை என்னென்பர்? வரலாற்றுக்கு முந்திய காலம் இந்தியாவில் இருக்கவில்லையா? இந்து, முஸ்லிம் என்று பகுத்தோர் சாதி, சமய வேறுபாடுகளுக்கு இடந்தந்து விட்டனர். இக்குறைகளை யுணர்ந்த சில அறிஞர் பாரதீய வித்யாபவன் வரலாற்றுக் காலப் பகுப்பே இந்திய வரலாற்றுக்குப் பொருந்துமென்பர்.

கால அடிப்படையிலமைந்த முப்பெரும் பகுப்பும் சாதி, சமய அடிப் படையிலமைந்த முப்பெரும் பகுப்பும் பாரதீய வித்யாபவன் பகுப்பும் வடஇந்திய வரலாற்றுக்குப் பொருந்தலாம். இவை தென்னிந்திய வரலாற்றுக்குப் பொருந்தாமை காண்க.

வரலாற்றாளர் அனைவரும் காலப்பகுப்பு ஒரு வசதிக்காகவே எனக் கருதுகின்றனர். வசதிக்காகத்தான் மேனாட்டாரும் இந்திய வரலாற்றினைப் பகுத்தனர் போலும்! வசதிக்காகக் காலப்பகுப்பு எனின் ஏன் தென்னிந்திய வரலாற்றில் காலப்பகுப்பு ஏற்படவில்லை? காலம் தாழ்த்துதல் வெற்றியில் முடியும் என்றல்ல. தென்னிந்திய வரலாற்றில் நிச்சயம் காலப்பகுப்பு வேண்டும். ஆய்வாளர் திட்ட மிட்டுச் செயலாற்றப் பெரிதும் இது பயன்படும்.

தென்னிந்தியா எனும்போது அதன் நிலப்பரப்பு, எல்லைகள் யாவை என்று அறிந்திருத்தல் வேண்டும். தென்னகம் என்றால் வெறும் நான்மொழி பகரு நாடன்று. விந்திய மலைக்குத் தென்பகுதி நாடுகள் அனைத்தும் தென்னகமாதல் வேண்டும். இக்கருத்தினை

மனதிற் கொண்டு இனி நாம் தென்னிந்தியக் காலப்பகுப்பினைக் காண் போம்.

சில வரலாற்றாளர் கருத்துப்படி தென்னிந்திய வரலாற்றுக் காலப் பகுப்பு, அதாவது பலரும் ஒப்புக்கொள்ளத்தக்க காலப்பகுப்பு ஏற் படுதல் இயலாது. ஆனால் அவர்களும் காலப்பகுப்பின் சிறப்பினை உணருகின்றனர். சிலர் காலப்பகுப்பே தேவையற்றது என்பர். இந்தியாவுக்கெனப் பொதுக் காலப்பகுப்பு இருக்கும்போது எதற்குப் பிறிதொரு காலப்பகுப்பென்பர். வடஇந்திய வரலாற்றுக்கும், தென்னிந்திய வரலாற்றுக்குமிடையே பெருத்த வேறுபாடு இருத்தலின் காலப்பகுப்பு தென்னிந்தியாவுக்கு வேண்டுமென்பர் சிலர்.

இன்னும் சிலர் பாரதீய வித்யாபுவன் காலப்பகுப்பே தென்னிந்தி யாவுக்கும் போதுமானது என்பர். சிலர் தற்காலக் கருத்தோட்டத்தில் காலப்பகுப்பு முறையை முன்வைக்கின்றனர். சிலர் காலப்பகுப்பு, அடிப்படைச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு பகுக்கப்பட வேண்டுமென்பர். சிலர் காரணங்களைப் பாராது, வரலாற்றில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளின் விளைவுகளை, மாற்றங்களை அடிப்படை யாகக் கொண்டு காலப்பகுப்புச் செய்யவேண்டுமென்பர். வேறு சிலர் மரபுவழிப் பட்டியல்படி பகுக்க வேண்டுமென்பர். சிலர் ஒவ்வொரு தென்னிந்திய நாட்டுக்கும் தனித்தனியான காலப்பகுப்பைக் கையாள வேண்டுமென்பர். மேலும் சிலர் காலப்பகுப்புக்கேற்ற காலம் இன்னும் ஏற்படவில்லை என்பர். அனைத்துச் சிந்தனையாளரும் அதற்குப் போதிய கருத்தமைதிகளையும் தருகின்றனர்.

மேற்கூறிய கருத்துக்கள் சிலவற்றின் செயல்திறனைக் காண் போம். முன்கூறியதுபோல் இவர்கள் அனைவரும் பல சிந்தனை வட்டத்தைச் சார்ந்து நிற்கின்றனர். சிலர் பழமை விரும்பிகளாயும், பலர் முற்போக்குக் கருத்துடையோராயும் உள்ளனர். காலப்பகுப்பு வேண்டாமென்போர் இன்னும் வடஇந்திய வரலாறுதான் தென் னிந்திய வரலாற்றை ஆளவேண்டும் என்று எண்ணுபவர் போலும்! சிலர் பொருளாதாரச் செயல்களுக்குச் சிறப்பிடம் தருவர். வரலாற்று முன்னியக்கத்தில் பொருளாதாரத்தின் பங்கு மறுப்பதற்கில்லை. ஆனால் பொருளாதாரச் சூழல்களே வரலாற்றுப் போக்கினை நிர்ண யித்து விடுகின்றன என்றால் அது மிகைப்படு கூற்று. இப்பொருளா தாரத்தை அடிப்படையாகக் கொண்ட சில சிறப்பு நிகழ்ச்சிகளால் தென்னிந்திய வரலாற்றில் காலப்பகுப்புச் செய்தல் பொருந்துமென் பதற்கில்லை. சிலர் அரசர்களின் (தனி மனிதச்) செயல்களுக்கு அதிக இடம் தருகின்றனர். இவர்கள் தாமஸ் கார்லைலின் கோட்பாட்டைப் பின்பற்றுவோர். இவர்களின் கண்களுக்குச் சிலரே உயர்ந்த,

உன்னதமான மனிதர்களாகத் தோன்றுகின்றனர். சமுதாயமின்றி எப்படி அவர்கள் உயர்ந்தோராயினர் என்று கேட்கத் தோன்றுகிறது. சிலர் அரசியல் செயல்களுக்கே, சமயச் செயல்களுக்கே சிறப்புத் தருகின்றனர். பழங்காலத்து, அரசியல் செயல்கள் மட்டுமே வரலாறு என்று கருதப்பட்டு வந்தது. எனவேதான் 'பழங்கால அரசியல் இன்றைய வரலாறு' என்று சில அறிஞர் கூறினர். அரசியல் செயல்கள் வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் மற்ற தன்மைகளைப் பொறுத்திருக்கின்றன என்பது மறுக்க இயலாது. இந்நிலையில் பலரும் ஒப்புக்கொள்ளும் வகையில் காலப்பகுப்பு ஏற்படாது.

மூலச்சான்றுகள் இல்லாத காலங்கள் இன்று வெளிச்சத்துக்கு வராத நிலையையும், மூலச்சான்றுகள் அதிகம் கிடைக்காத காலங்கள் இடையீடுகளாய் இருப்பதையும் அவர்கள் உணர்வர். வரலாற்றாளர் தம் நினைவாற்றலிலிருந்து எவ்வாதாரத்தையும் புதிதாகத் தோற்றுவித்து வரலாறு வரையத் தலைப்படார். எனவேதான் வரலாற்றாளரால் இருண்ட கால, இடையீட்டுக் காலங்களை முறைப்பட வரைய இயலவில்லை. மூலச்சான்றுகளில்லாத, எந்த நாட்டு வரலாறும் இப்படித் தானிருக்கும். ஆகவே வரலாற்றாளர் விரித்துரைக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு அடிப்படை மூலச்சான்றுகளே.

எனவே மூலச்சான்றுகளை ஆதாரமாகக்கொண்டு தென்னிந்திய வரலாற்றைப் பகுப்பதே பொருந்துமாறு தோன்றுகிறது, இப்பகுப்பில் நீண்ட காலப்பகுப்பு, குறுகிய காலப்பகுப்பு என்ற வேறுபாடுகளுக்கு இடமில்லை. இன, சமய, சமூக, தனிநபர், வகுப்பு, சிந்தனை வட்ட வேறுபாடும், குறுகிய நோக்கங்களும் இல்லாத நிலை ஏற்படுமாப் போல் தோன்றுகிறது. அதனடிப்படையில் தென்னிந்திய வரலாற்றினை நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை (i) வரலாற்றுக்கு முந்திய காலம். இதனை அகழ்வாய்வுச் சான்றுக்காலம் எனலாம். இக்காலம் ஏறத்தாழக் கி. மு. 300 வரை நீடித்ததாகக் கொள்ளலாம். (ii) பின் தொடர்ந்த காலத்தை இலக்கியக் காலம் எனலாம். தொல்பொருட்கள், கல்வெட்டுகள் இக்காலத்து இருந்த போதிலும், இலக்கியங்களே மூல ஆதாரங்களாகப் பயன்படுதல் காண்க. இக்காலம் ஏறத்தாழக் கி.பி. 600 வரை நீடித்திருந்தது என்க. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சங்கம் மருவிய காலத்தில் ஏற்பட்ட களப்பிரர் காலத்துடன் இக்காலம் முடிந்து விடுகிறது. (iii) பின் தொடர்ந்த காலம் கல்வெட்டுக் காலம் எனலாம். இக்காலத்தின் போது வரலாறு தொடர்புடைய நூல்கள் எழவில்லையென்றல்ல. ஆனால் பெரும்பாலும் வரலாற்று மூலச்சான்றுகள் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன. இக்காலம் ஏறத்தாழ 1700 வரை நீடித்தது.

(vi) தொடர்ந்த காலம் அச்சுச் சுவடிக் காலம். இக்காலத்தில் அச்சிடப் பட்டுப் பாதுகாக்கப்பட்ட நூல்களே, சுவடிகளே அடிப்படைச் சான்றுக ளாயுள்ளன.

இப்பிரச்சினைக்கு இறுதியான முடிவொன்றும் இதுகாறும் ஏற்பட வில்லை. வரலாற்றாளரிடையே வேறுபட்ட கருத்துக்கள் இருக்கும் வரை இறுதி முடிவு ஏற்படுதலும் இயலாது. இருப்பினும் வேறுபாடு களினூடே முடிவும் ஏற்படலாம். அப்படி ஏற்படுமாயின் அது மூலச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டதாயிருக்க வாய்ப்புண்டு. ஆகவே மூலச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்ட இம்முறை தென்னிந்திய வரலாற்றாய்வுக்குப் பெரிதும் துணை நிற்கும். ஆய்வோருக்கு வழிகாட்டும். தென்னிந்திய வரலாறு வளம்பெற வகை செய்யும்.

திருப்பதிகமும் தங்கப் பூக்களும்

முதலாம் இராசராசரைத் திருமுறை கண்ட தேவராய்த் தமிழ் மற்றும் வரலாற்றறிஞர்கள் உகப்பர். இராசராசர் காலத்துக் கல்வெட்டு களை நுணுகி ஆராய்வோர் அப்பெருந்தகையின் பண்பு நலன்களைத் தெளிவாய் உணர முடியும். தாம் எடுப்பித்த ராஜராஜீசுவர விமானத் தால் தமிழகத்தையே தலை நிமிரச் செய்திருக்கும் இப்பெருமகனார் திருமுறைகள் காட்டிய நெறிப்படியே வாழ்ந்தார் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

நாவுக்கரசர் பெருமான் தம்முடைய பொதுத் திருப்பதிகங்களுள் ஒன்றான திருஅங்கமாலையில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் உடலுறுப்புகளால் எப்படியெல்லாம் இறைவனை வழிபட்டு மகிழ முடியுமென்று வழிகாட்டியிருக்கிறார். இப்பதிகத்தின் இறுதி வரிகளில் கை நிறையப் பூச்சுமந்து இறைக்கோயிலை வலம் வந்து, கொணர்ந்த பூக்களை அன்போடு இறைவன் திருமுன் தூவி வணங்குதல் செய்யார் உடல் பெற்றதன் பயன் பெறாதார் என்று சாடுகிறார் அப்பர்.

நித்தவிநோதரான முதலாம் இராசராசர் இந்தப் பதிகத்தை ஆழ்ந்து பயின்றிருப்பார் போலும். இல்லையென்றால் தாம் ஒவ்வொரு போர்க்களத்திலிருந்து திரும்பும்போதும் அளவற்ற பொற் பூக்களுடன் ராஜராஜீசுவரத்துக்கு வந்து இறைவனை வழிபட்டு அத்தங்கப் பூக்களை இறைவன் திருமுன் அட்டித்து மகிழ்ந்திருப்பாரா?

— ராஜி

3. மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்*

மு. நளினி, இரா. கலைக்கோவன்

காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து பதினோரு கிலோமீட்டர் தொலைவில் செய்யாறு வட்டத்தில் அமைந்துள்ளது மாமண்டூர். செங்கற்பட்டு மதுராந்தகம் சாலையிலுள்ள மாமண்டூரிலிருந்து பிரித்தறியப்படுவதற்காக இதைத் தூசி மாமண்டூர் என்று ஊரார் அழைக்கிறார்கள். இந்த மாமண்டூரில் சிவன் கோயிலொன்றும், பெருமாள் கோயிலொன்றும் பெருவழிப் பாதையின் வல, இடப்புறங்களில் அமைந்துள்ளன. பழங்கோயில்களான இவை இரண்டும் இன்றிருக்கும் நிலை பரிதாபகரமானது.

மாமண்டூரிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது நரசமங்கலம்.[1] பெருவழிப் பாதையின் இடப்புறத்தே நடப்பட்டிருக்கும் ஊர்ப்பெயர் சொல்லும் கல்லுக்கு மேற்கில் பிரியும் மண்சாலை ஊருக்குள் நுழைந்ததும் இரண்டாகப் பிரிகிறது. இடப்புறப் பிரிவு வயல்களைச் சுற்றிக் கொண்டு குன்றுகளை நோக்கிப் போகிறது. இந்தக் குன்றுகளில்தான் பல்லவர்களின் குடைவரைகள் இடம் பெற்றுள்ளன.

சரிந்தும் உயர்ந்தும் ஆங்காங்கே தரையைத் தொட்டுச் சமநிலை எய்தியும் நீண்டு கிடக்கும் இக்குன்றுத் தொடரின் பெரும் பகுதி நரசமங்கலத்தின் பின்புறமே உள்ளதென்றாலும் இதன் வட பகுதியை மாமண்டூர் எல்லைக்குள் வருவாய்த்துறைப் பதிவுகள் இணைத்துக் கொண்டுள்ளன. இந்த வட பகுதியில்தான் கிழக்கு முகமாக இரண்டு குடைவரைகள் குடையப்பட்டுள்ளன. இவற்றை மாமண்டூர்க் குடைவரைகள் என்று அழைக்கலாம்.

தென் பகுதியில் குன்று ஓரிடத்தில் நன்கு உயர்ந்து பின் முழுவதுமாய்ச் சரிந்து தரைநிலையைத் தொட்டுத் தொடர்ந்து மீண்டும் ஒரு எழுச்சியைப் பெற்றுத் தொடர்கிறது. இந்த இரண்டு எழுச்சிப் பகுதிகளிலும் இரண்டு குடைவரைகள் குடையப்பட்டுள்ளன. முதல் எழுச்சியில் அமைந்துள்ள குடைவரை அளவில் மிகப் பெரியது. இக்குடைவரை அமைந்திருக்கும் குன்றுப் பகுதியின் உச்சியில் ஒரு கட்டுமானக் கோயிலும் அதற்குச் சற்றுத் தள்ளி வடபுறத்தே சிறிய அளவிலான மற்றொரு கட்டுமானக் கோயிலும் உள்ளன. இக்கட்டுமானக் கோயில்களை அடையக் குன்றின் சுவரில் வெட்டியமைத்த படிக்கட்டுகள் உதவுகின்றன.

---

* திருவேங்கடமுடையான் திருவேங்கடப் பட்டத்து ராணி அறக்கட்டளை உதவியுடன் இக்கட்டுரைக்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

தென்வடலாக எழுந்து நிற்கும் இக்குன்றுத் தொடரின் பின் புறத்தே பரந்து விரிந்து கிடக்கிறது சித்ரமேகத் தடாகம். முதலாம் மகேந்திரவர்மரால் உருவாக்கப்பட்ட இப்பேரேரி பின்னாளில் கி. பி. 1638 இல் வெங்கடப்ப நாயக்கரால் அவர் தந்தை சென்னப்ப நாயக்கரின் நினைவாக விரிவு செய்யப்பட்டுச் சென்ன சாகரம் என்று பெயரிடப்பட்டதையும் கிழக்கில் குன்றையொட்டி மேலும் கரை நீட்டிக் கப்பெற்று வலுப்படுத்தப்பட்டதையும் சாகரக் கரையில் சாதனைப் பட்ட யங்களாய் நிற்கும் முப்பெரும் கல்வெட்டுப் பாறைகள் பெருமையோடு எடுத்தோதுகின்றன.[2] மிகப் பெரிய மதகுகள் இவ்வேரியின் நீரைச் சுற்றுப் பக்கங்களிலுள்ள சிற்றூர்களுக்குப் பாய்ச்சிப் பசுமைப் புரட்சி செய்து வந்தது ஒரு காலம். பல ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற ஆண்டு, கொட்டிய மழையில் நிரம்பிக் கடல் போல் ஏரி அலை வீசித் தளும்பியதாக உள்ளூர் வாசிகள் மகிழ்ந்து கூறினர். ஆனால் இப் போது ஏரி வறண்டு கிடக்கிறது. சில பகுதிகளில் நாற்று நட்டிருக் கிறார்கள். ஓரிடத்தில் செங்கல் சூளை. புன்செய்ப் பயிர்களை விளை வித்துக் கொண்டு கடலை மூட்டைகளுடன் ஊரார் காலக் கனிவை எதிர்நோக்கியுள்ளனர்.

மேற்கிலிருந்து கிழக்காக ஓடும் ஓர் ஓடையே மாமண்டூர்க் குடை வரைகளை நரசமங்கலக் குடைவரைகளிலிருந்து பிரிக்கின்றது. இந் நாளைய வருவாய்த்துறைப் பதிவுகள் இக்குடைவரைகளை இரண்டு ஊர்களுக்காய்ப் பங்கிட்டுப் பிரித்தாலும் அந்நாளில் இவை அனைத் துமே நரசிங்கமங்கலத்துக்குள் அடைக்கலமாகியிருந்ததை முதலிரண்டு குடைவரைகளிலுள்ள கல்வெட்டுகளும், மலைமேற் கோயிலில் உள்ள கல்வெட்டுகளும் தெளிவாக்குகின்றன. இருந்தபோதும் அறிஞர்கள் இக்குடைவரைகளைப் பற்றி எழுதும்போது ஏனோ இவை அனைத் தையுமே மாமண்டூர்க் குடைவரைகள் என்றே பெயரிட்டிருக்கிறார்கள்.[3]

தமிழக அரசின் சுற்றுலாத்துறை ஒரு படி மேலே போய்க் காஞ்சிபுரம் பற்றிய தன்னுடைய சுற்றுலாத்துறை வெளியீட்டில் இக்குடைவரை கள் இடம் பெற்றிருக்கும் மாமண்டூர், செங்கல்பட்டுக்கு அருகில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பிழையைச் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் பலரிடம் எடுத்துக் கூறியும் யாரும் கவலைப்படவில்லை. திருத்தமும் இதுநாள்வரை செய்யப்பட வில்லை.

மாமண்டூர், நரசமங்கலம் குடைவரைகள் பல வகைகளில் சிறப் புடையவை. பல்லவப் பாண்டியர் குடைவரைகளில் ஒரே மலைத் தொடரில் தொடர்ந்தாற் போல் அடுத்தடுத்து நான்கு குடைவரைகள் அமையப்பெற்றுள்ள ஒரே இடமாக இப்பகுதியைக் கொள்ளலாம்.

இந்நான்கு குடைவரைகளும் ஏறத்தாழ சமகாலத்தவை என்றாலும் அமைப்பு முறையில் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. இவற்றுள் மூன்று வழிபாட்டில் இருந்தவை. ஒன்று முழுமையடையாமல் அரை குறையாக நின்றுபோன பணி. நான்கில் முதலாவதில் மட்டும்தான் ஒரு கருவறை. இரண்டாவதிலும் நான்காவதிலும் மூன்று கருவறைகள். மூன்றாம் குடைவரையோ ஒன்பது கருவறைகளுடன்[4] தமிழகத்தின் தனித்ததொரு அதிசயமாய் நிற்கிறது. இந்தக் குடைவரையின் அமைப்பே அலாதி. பல்லவர் கை வண்ணத்தில் எழுந்த இந்த நான்கையும் கட்டடம். சிற்பம், கல்வெட்டு என்ற தலைப்புகளின் கீழ் விரிவாகப் பார்ப்பதே சால்புடையது.

கட்டட அமைப்பு

இங்குள்ள நான்கு குடைவரைகளுமே நன்கு திட்டமிடப்பட்டுத் தேர்ந்தெடுத்த பாறைகளில் குடையப்பட்டுள்ளன. பொதுவாகப் பல்லவர் குடைவரைகளில் காணப்படும் அனைத்து அடிப்படை உறுப்புகளையும் இக்குடைவரைகள் பெற்றுள்ளன என்றாலும் வேறுபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

முதற் குடைவரை

தொடரின் வடகோடிப் பாறைச்சரிவின் கீழ்ப்பகுதியில் கிழக்கு நோக்கிய நிலையில் நிலமட்டத்திலிருந்து 1.21 மீட்டர் உயரத்தில் வெட்டப்பட்டுள்ள முதற் குடைவரையை அடையப் பிற்காலப் படியமைப்பொன்று உதவுகிறது. பாறைச்சரிவு செங்குத்தாக இருப்பதால் குடைவரை முகப்புக்கு முன்னுள்ள தரை அளவில் சிறியதாய் அமைந்துள்ளது. தென்புறம் 86 செ. மீ. அகலத்திலிருக்கும் இத்தரை வடபுறம் செல்லச் செல்லக் குறுகி 55 செ. மீ. அளவில் நிற்கிறது. இதன் தென்வடல் நீளம் 5.98 மீட்டர்.

குடைவரையின் முகப்பு இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் கொண்டுள்ளது. பக்கங்களில் அமையப் பெற்றுள்ள அரைத்தூண்கள் பிரம்மகாந்தத் தூண்களாய் அமைய, இடையிலுள்ள முழுத்தூண்கள் தொடக்கக் காலத்திற்கே உரிய சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் உருவாகியுள்ளன. கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தைவிட இரு மடங்கு பெரியதாகக் காட்டப்பட்டுள்ளது. மேற்கு முகத்தில் இதன் உயரம் 79 செ. மீ. அகலம் கீழ்ப்பகுதியில் 65 செ. மீ. ஆகவும் மேற்பகுதியில் 60 செ. மீ. ஆகவும் உள்ளது. மேற்சதுரத்தின் உயரம் 40 செ. மீ. சதுரங்களுக்கு இடையிலுள்ள கட்டின் உயரம் 68 செ. மீ.

முழுத்தூண்களின் சதுரங்களில் மேற்கு முகத்தைத் தவிர ஏனைய பகுதிகளில் தாமரைப் பதக்கங்கள் இடம் பெற்றுள்ளன.[5] கீழ்ச்சதுரங் களில் முழுமையாகக் காணப்படும் இப்பதக்கங்கள் மேற்சதுரங்களில் முக்காலளவே உள்ளன. இது மேற்சதுரம் அளவில் குறைந்து போனதால் ஏற்பட்ட நிலை போலும். கீழ்ப்பதக்கங்கள் மகேந்திரவாடி குடைவரைத் தூண்களில் இருப்பது போல் சதுரங்களுக்குள் சிறைப் படுத்தப்பட்டுள்ளன. இச்சதுரங்களின் உட்புற மூலைகளில், பதக்கத் தையும் சதுரத்தையும் இணைப்பது போன்ற அழகிய கொடி வேலைகள் காட்டப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, தளவானூர், மகேந்திரவாடி என்று பல பல்லவக் குடைவரைகளில் தாமரைப் பதக்கங்கள் இடம் பெற்றிருந்தபோதும், மாமண்டூரில் உள்ள நான்கு குடைவரைகளில் முதலாவதில் மட்டுமே இவை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரைத்தூண்களின் வட, தென் முகங்களின் கீழ்ப்பகுதியில் முழுப் பதக்கங்களும் மேற்பகுதியில் முக்கால் பதக்கங்களும் காட்டப்பட் டுள்ளன. கிழக்கு முகங்களில் மேலொன்றும் கீழொன்றுமாக அரைப் பதக்கங்கள் உள்ளன. முழுத்தூண்களைப் போலவே மேற்கு முகங் களில் பதக்கங்கள் வெட்டப்படவில்லை.

இந்த அரைத்தூண்களையொட்டி வெளிப்புறத்தே வெட்டப் பட்டுள்ள பக்கச் சுவர்கள் நன்கு பொளியப்பட்டுச் சீரமைக்கப்பட்டுள் ளன. மேலிருந்து கீழே இவை அகலப்படுவதைப் பார்வையால் உணரலாம். இச்சுவர்களின் கீழ்ப்பகுதி முகப்புக்கு முன்னுள்ள தரையோடு முடிகின்றது. தென் சுவரின் கீழ்ப்பகுதியில் ஒரு வரியி லமைந்த கிரந்தக் கல்வெட்டு ஒன்று மிகவும் பொரிந்து படிக்கவியலா நிலையில் காணப்படுகிறது. இது ராகமொன்றின் ஸ்வர பேதங் களைக் குறிப்பதாகலாம் என்று அறிஞர் திரு. கூ. ரா. சீனிவாசன் குறிப்பிட்டிருக்கிறார்.[6]

தூன்களின் உச்சியிலிருந்து பக்கவாட்டில் கிளைத்தெழும் போதி கைகள் எளிமையானவை. இவற்றின் கீழ்க்கைகள் மேற்கைகளை விடச் சற்று நீளமானவை. இக்கீழ்க்கைகள் இலேசான வளைவுடன் மேற்கைகளாகி உத்திரத்தைத் தாங்குகின்றன. வழக்கமான பல்லவர் குடைவரை உத்திரங்களை விடச் சற்று அளவில் சிறுத்துக் காணப்படும் இவ்வுத்திரத்தின் மேல் பிதுக்கமாக வாஜனம் ஒன்று தென்வடலாகக் குடைவரையின் முழு நீளத்திற்கும் ஓடுகிறது. வாஜனத்திற்கு மேலே வடிவமைக்கப்படாத கபோதமாகப் பாறைச்சரிவின் மேற்புறம் கூரையாகியுள்ளது.

தூண்கள் அமர்ந்துள்ள முகப்பின் அகலம் 62 செ. மீ. இந்தத் தூண்கள் பல இடங்களில் சிதைந்துள்ளன. குறிப்பாக வடக்குத்

தூணின் கீழ்ச்சதுரமும் கட்டும் பெருமளவு சிதைந்துள்ளன. தாமரைப் பதக்கங்களும் பல இடங்களில் சேதப்படுத்தப்பட்டுள்ளன. முகப்பிற்குப் பின் அமைந்துள்ள முகமண்டபத்தின்[7] தென் வடல் அளவு 6.27 மீட்டர். இதன் அகலம் வடபுறத்தே 1.63 மீட்டர். தென் புறத்தே 1.59 மீட்டர். இம்மண்டபத்தின் தரையமைப்பும் முகப்பின் தரையமைப்பும் ஒரே மட்டத்தில் உள்ளன. இதன் கூரையை ஒட்டி நான்கு புறமும் வாஜனம் காட்டப்பட்டுள்ளது.

முகமண்டபத்தின் தென்புறச் சுவரில் முதலாம் மகேந்திர வர்மருடையதாகக் கருதப்படும் கிரந்தக் கல்வெட்டொன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது.[8] பின்சுவரின் மையப் பகுதியில் குடையப் பட்டுள்ள கருவறை முகமண்டபத்திற்குள் பிதுக்கமாகக் காட்டப் பட்டுள்ளது. இப்பிதுக்கம் பின்சுவரிலிருந்து தென்புறத்தே 20 செ.மீ. அளவிலும் வடபுறத்தே 23.5 செ. மீ. அளவிலுமாய் முன்னோக்கி அமைந்துள்ளது. கருவறையின் தாங்குதளம் பாதபந்த அமைப்புடன், 61 செ.மீ. உயரத்திற்கு ஜகதி, எண் பட்டைக் குமுதம்,[9] கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை, மேற்கம்பு என்னும் உறுப்புக்களை வரிசை யாகக் கொண்டு விளங்குகிறது.[10] கண்டத்தில் அரைத்தூண்களின் பாதங்கள் காட்டப்பட்டுள்ளன. கம்பின் மீதெழும் சுவர்ப்பகுதியின் கிழக்கு முகத்தில் நான்கு அரைத்தூண்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு, கருவறை வாயிலையொட்டிப் பக்கத்திற்கொன்றாக அமைய, ஏனைய இரண்டும் கிழக்குச் சுவரின் வட, தென் திருப்பங்களில் பக்கத்திற்கொன்றாக அமைந்துள்ளன.

எளிய பிரம்மகாந்தத் தூண்களாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அரைத்தூண்கள் போதிகைகளின்றி நேரடியாக உத்திரத்தில் முடிகின்றன. உத்திரமும் அதையடுத்து அமைந்திருக்கும் வாஜனம்,[11] வலபி ஆகியனவும் சிறிய அளவினவாக வடிக்கப்பட்டிருக்கக் கபோதம், கூடுகளோ அலங்கரிப்போ இல்லாமல் எளிய நிலையில் உள்ளது. இம்மேல்நிலை அமைப்புகள் அனைத்தும் கருவறை வெளிச் சுவரின் முப்புறத்தேயும் காட்டப்பட்டுள்ளன. உள்மண்டபக் கூரையை ஒட்டி ஓடும் வாஜனம் பின் சுவரில் கருவறைப் பிதுக்கத்தின் இருபுறமும் முடிகிறது.

கருவறை முன் சுவரின் மையப்பகுதியில் 71 செ.மீ. அகலத்தில் வாயில் அமைக்கப்பட்டுள்ளது. தாங்குதள உறுப்புக்கள் இவ்வாயி லுக்கு இடம் விட்டு நின்று விடுகின்றன. முகமண்டபத் தரையமைப் பிலிருந்து கருவறைக்குள் நுழைய இரண்டு படிகள் உள்ளன. முதற்படி சந்திரக் கல்லாக அரைநிலா வடிவத்தில், தாங்குதள உறுப்பான ஜகதியின் பாதி உயரத்திற்குக் காட்டப்பட்டுள்ளது. இரண்டாம் படி

ஜகதியின் எஞ்சிய உயரத்திற்கு அமைந்து வாயிலின் கீழ்நிலையாகி யுள்ளது. அரைத்தூண்களின் மேலோடும் உத்திரம் வாயிலின் மேல் நிலையாக, அதன் மீது வாஜனம், வலபி போன்ற பிற உறுப்புக்கள் தொடர்கின்றன.

கருவறையின் உட்புற உயரம் 1.95 மீட்டர். இதன் தரையமைப்பு இரண்டாம் படியின் மேற்பரப்பை விடச் சற்றுத் தாழ அமைந்துள்ளது. தரையும் கூரையும் சுவர்களும் வெறுமையாக உள்ள இக்கருவறையின் தென்வடல் உள்ளளவு 1.67 மீட்டராகும். பக்கச் சுவர்கள் 1.31 மீட்டர் அளவினவாக உள்ளன. கருவறையின் பின்சுவரையொட்டி அதன் முழு நீளத்திற்கும் 39 செ.மீ. உயரத்தில் மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடையின் நடுவே 17 செ. மீ. ஆழத்திற்கு 39 செ.மீ. பக்கமுள்ள சதுரமான பள்ளமொன்று வெட்டப்பட்டுள்ளது. பின்சுவரிலிருந்து 7 செ.மீ. தள்ளி வெட்டப்பட்டுள்ள இப்பள்ளம் கருவறையில் நிறுவப்பட்டிருந்த இறைத்திருமேனியின் அடிப்பகுதியைப் பொருத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கலாம்.

கருவறையிலிருந்து நீர் வெளியேறுவதற்காக வெட்டப்பட்டுள்ள கால் இரண்டாம் படியில் தொடங்கிச் சந்திரக்கல்லின் இடப்புறத்தே இறங்கி முகமண்டபத்தின் தரையில் 2.74 மீட்டர் நீளத்திற்கு ஓடி முகப்புக்கு முன்னுள்ள தரையில் முடிகிறது.

இக்குடைவரையின் கட்டட உறுப்புக்களுள் பல பெரும் சிதைவுக்கு ஆளாகியுள்ளன. கருவறை வாஜனம் கிழக்கு முகத்தின் வடபுறத்தேயும் கபோதம் வடபகுதியிலும் சிதைக்கப்பட்டுள்ளன. முகமண்டப வாஜனமும் பல இடங்களில் சிதைந்து காணப்படுகிறது. முகமண்டபப் பின்சுவர் சில இடங்களில் செதில் செதிலாகப் பிளந்துள்ளது.

பின்சுவரின் தென் பகுதியிலும், முகப்புத் தூண்கள் மற்றும் உத்திரம் ஆகியவற்றின் கிழக்கு முகத்திலும் இலேசான சுதை மற்றும் வண்ணப் பூச்சுகளின் எச்சங்களை இன்றும் காண முடிகிறது. சிவப்பு, பச்சை, மஞ்சள் வண்ணங்களில் காணப்படும் இவ்வண்ணப் பூச்சுகள் தோரண அலங்காரத்தை நினைவூட்டுகின்றன. இவை இக்குடைவரை வழிபாட்டில் இருந்தபோது பூசப்பெற்றவையாக இருக்கலாம்.

இரண்டாம் குடைவரை

இரண்டாம் குடைவரை முதற் குடைவரையின் தென்புறத்தே சற்றுத் தள்ளி அதே பாறைச்சரிவின் கிழக்கு முகத்தில் நிலமட்டத்திற்குச் சற்று மேலாக அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் குன்றின் சரிவு செங்குத்தாக இல்லாமல் நன்றாக முன்னோக்கி இறங்கியிருப்பதால் முகப்புக்கு முன்னுள்ள தரை பேரளவினதாகக் கிடைத்துள்ளது. இத்

தரையமைப்பு நிலமட்டத்திலிருந்து சற்று உயர்ந்து இரண்டு அடுக்கு களைக் கொண்டுள்ளது. முதல் அடுக்கு அகலமானதொரு நடை போலக் கரடுமுரடாகக் காட்சியளிக்கிறது. தென்வடலாக 8·50 மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக 1·77 மீட்டர் அகலமும் கொண்டமைந்துள்ள இந்த முதலடுக்கிலிருந்து 13 செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்டுள்ள இரண்டாம் அடுக்கு தென்வடலாக 8·59 மீட்டர் நீளமும் கிழக்கு மேற் காக 56 செ.மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. முதல் அடுக்கைவிட இரண்டாம் அடுக்கின் தரையமைப்பு நன்றாகப் பொளியப்பட்டுச் சமப் படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டடுக்குத் தரையமைப்பின் இரு பக்கங் களிலும் பாறைச்சரிவுகளே சுவர்களாக்கப்பட்டுள்ளன. சரிவின் இயல்பையொட்டி இச்சுவர்களின் மேற்பகுதியைவிட கீழ்ப்பகுதி மிக அகலமாக உள்ளது. தென்புறத்தே 1·70 மீட்டர் அகலமும் வடபுறத்தே 1·90மீட்டர் அகலமும் கொண்டுள்ள இப்பக்கச் சுவர்கள் மல்லையி லுள்ள அதிரணசண்டேசுவரம் குடைவரைச் சுவர்களுடன் ஒப்பிடுமளவு அகன்றிருந்தாலும், அவற்றைப் போல் சீராக்கப்படாது கரடு முரடா கவே விடப்பட்டுள்ளன.

முன்தரையின் இரண்டாம் அடுக்கிலிருந்து 7 செ.மீ. உயரத்தில் அமைந்துள்ள முகப்பில் 15 செ.மீ. உள் தள்ளி நான்கு தூண்கள் எழு கின்றன. மையத் தூண்கள் இரண்டும் முழுத்தூண்களாகவும் பக்கத் தூண்கள் அரைத் தூண்களாகவும் உள்ள இம்முகப்பின் தென்வடல் நீளம் 6·87 மீட்டர். அகலம் 88 செ.மீ. மையத்தூண்கள் வழக்கம் போலச் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலும், பக்க அரைத் தூண்கள் பிரம்மகாந்தமாகவும் காட்டப்பட்டுள்ளன. முதற் குடை வரையைப் போலவே மையத்தூண்களின் கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தை விட அளவில் பெரியதாக இருந்தாலும் வேறுபாடுகள் முதற் குடை வரை அளவுக்கு இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. மேற்சதுரத் தின் தலைப்பிலிருந்து கிளைக்கும் போதிகைகளின் கீழ்க்கைகளைவிட மேற்கைகள் நீளமாக உள்ளன. கீழ்க்கைகள் மேற்கைகளாகத் திரும்பும் இடத்தில் முதற் குடைவரையைப் போல் அல்லாமல் விரி கோணத்தில் திரும்புகின்றன. போதிகைகளின் மேல் அமர்ந்துள்ள உத்திரம் வழக்கமான பல்லவர் முறையில் போதிகையின் கனத்திற்குக் காட்டப்பட்டுள்ளது. உத்திரத்தின் மீது பிதுக்கமாக தென்வடலாக ஓடும் வாஜனம்[12] முகப்பின் முழு நீளத்திற்கும் காட்டப்பட்டுள்ளது. குடையப்பட்ட பாறையின் அகன்ற மேற்புறம் சமன் செய்யப்பட்டு வடிவமைக்கப்படாத கபோதமாகக் காட்டப்பட்டுள்ளது. பொதுவாக முழுத்தூண்களோடு ஒப்பிடும் போது அளவில் சிறுத்துக் காணப்படும் அரைத்தூண்களின் கிழக்குப் பக்கங்கள் இங்கு முழுத்தூண்களைவிட அளவில் பெரியனவாய் நன்கு அகன்று காட்சியளிக்கின்றன. இவற்றின் அகலம் வடபுறத்தே 1·12 மீட்டர்; தென்புறத்தே 1·15 மீட்டர்.

உத்திரம், தூண்களின் மேற்சதுரங்கள், போதிகைகள் ஆகிய வற்றில் முதற் குடைவரை போலவே சுண்ண மற்றும் வண்ணப் பூச்சு களின் எச்சங்கள் காணக்கிடக்கின்றன. பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ணங்களில் தோரணம் போல் காட்டப்பட்டிருக்கும் இவ்வண்ண வரைவுகள் இக்குடைவரை வழிபாட்டில் இருந்த காலத்தில் எழுதப் பட்டவையாகலாம்.

முகப்பையடுத்துள்ள மண்டபம் அதன் நடுப்பகுதியிலுள்ள தூண் வரிசையால் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டாம் வரிசைத் தூண்களுக்கும் முகப்புத் தூண்களுக்கும் இடையிலுள்ள மண்டபப் பகுதியை முகமண்டபமென்றும், இரண்டாம் வரிசைத் தூண்களுக்குப் பின்னுள்ள பகுதியை உள்மண்டபமென்றும் அழைக் கலாம்.

முகப்பையடுத்துள்ள முகமண்டபம் தென்வடலாக 6·87 மீட்டர் நீளத்திற்கும் கிழக்கு மேற்காக 1·31 மீட்டர் அகலத்திற்குமாய்ப் பரவி யுள்ளது. நன்கு பொளியப்பட்டு வழவழப்பாக்கப்பட்டுள்ள முக மண்டபத்தின் தரையும் முகப்புத் தரையும் ஒரே மட்டத்தில் உள்ளன. முகமண்டபத்தின் தென் சுவரும் கூரையும் வெறுமையாக உள்ளன. வட சுவரில் முதலாம் இராசராசரின் கல்வெட்டு உள்ளது.[13] உத்திரத் தின் மேல், பிதுக்கமாக ஓடும் வாஜனம் முகமண்டபக் கூரையின் நாற் புறமும் காட்டப்பட்டுள்ளது.

நன்கு செதுக்கி வழவழப்பாக்கப்பட்டுள்ள உள்மண்டபத்தின் தரை, முகமண்டபத் தரையமைப்பிலிருந்து 11 செ.மீ. உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. முகப்பிலுள்ளாற் போலவே இங்கும் மையப் பகுதியில் இரு முழுத்தூண்களும் பக்கங்களில் இரு அரைத்தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. தரையின் விளிம்பிலிருந்து சற்று உட்தள்ளி எழும் இத்தூண்கள் அமைப்பில் முகப்புத் தூண்களைப் பெரிதும் ஒத் துள்ளன. உத்திரத்தின் மேல் காட்டப்பட்டிருக்கும் வாஜனம் உள் மண்டபத்தின் பக்கச் சுவர்களின் மேலும் கூரையையொட்டி ஓடுகிறது. உள்மண்டபத்தின் கூரையும் வடபுறச் சுவரும் வெறுமையாக உள்ளன. தென்புறச் சுவரில் பரகேசரிவர்மரின் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.[14]

உள்மண்டபத்தின் பின்சுவரில் மூன்று கருவறைகள் குடையப் பட்டுள்ளன. இவற்றின் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பாத பந்த அமைப்பிலான தாங்குதளம் காட்டப்பட்டுள்ளது. ஜகதி, எண்பட் டைக் குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை, மேற்கம்பு[15] என் றமைந்துள்ள இத்தாங்குதளத்தின் கீழ்ப்பகுதியையொட்டி மைய, வட கருவறைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்மண்டபத் தரை இலேசாக

உயர்ந்து உபானம் போல் காட்சியளிக்கிறது. பாதபந்தத் தாங்குதளத்தின் மேற்கம்பைத் தழுவியெழும் கருவறை முன்சுவரில் அரைத்தூண்களும் ஆழமற்ற கோட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. இக்கோட்டங்கள் ஒவ்வொரு கருவறை வாயிலின் இருபுறத்தேயும், பக்கத்திற்கொன்றென வெட்டப்பட்டுள்ளன. கோட்டங்களுக்கு அணைப்பாகவும், கருவறை வாயிலையொட்டியும் பிரம்மகாந்த அரைத்தூண்கள் அமைந்துள்ளன. இத்தூண்களின் பாதங்கள் தாங்குதளக் கண்டப் பகுதியில் தொடங்குகின்றன. தென்வடலாக இத்தூண்களில் நான்காவதும் ஏழாவதும் சற்று அகலமாயிருக்க ஏனையவை ஒரே அளவினவாக உள்ளன. இவ்அரைத்தூண்களின் உச்சியில் காணப்படும் போதிகைகளின் கீழ்க்கைகள் மேற்கைகளைவிடப் பெரியன. இப்போதிகைகள் சென்றிணையும் உத்திரம் அளவில் சிறியதாக உள்ளது. உத்திரத்தின் மேல் சிறிய அளவிலான வாஜனமும்[16] வலபியும் பின்சுவர் முழுவதுமாய் ஓடுகின்றன. இவற்றின் மேல் நன்கு வடிவமைக்கப்பட்ட வளைவான கூடுகளற்ற கபோதம் காட்டப்பட்டுள்ளது.

கருவறை வாயில்களையடைய உள்மண்டபத் தரையிலிருந்து மூன்று கருவறைகளுக்கும் படிகள் காட்டப்பட்டுள்ளன. வட, தென் கருவறை வாயில்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று படிகள் உள்ளன. கீழ்ப்படி அரை நிலா வடிவத்தில் இருக்க, மேற்படி வாயிலின் கீழ் நிலையாய் அமைந்துள்ளது. இப்படிக்கட்டுகளின் இருபுறத்தேயும் யானைத் துதிக்கை போன்ற பக்கச் சுவர். நடுக் கருவறைக்கு இரண்டு படிகளே உள்ளன. கீழ்ப்படி இருந்து அழிந்தமைக்கான சான்றுகூட இல்லை.

ஒவ்வொரு கருவறை வாயிலையும் பக்கத்திற்கொருவராக இரண்டு வாயிற்காப்போர் இவர்களுக்காகவே அமைக்கப்பட்டிருக்கும் ஆழமற்ற கோட்டங்களில் நின்றபடி காவல் செய்கின்றனர். கால் கடுக்க நிற்கும் இவர்களின் பாதங்களுக்காகவே பட்டிகை மீது மேற்கம்பை ஊடறுத்து அளவான சிறு தளம் வெட்டியிருக்கிறார்கள். இந்தப் பாதந்தாங்கித் தள அமைப்பு[17] மையக் கருவறையின் இடக்காவலருக்கும், வட கருவறையின் வலக்காவலருக்கும் பட்டிகைச் சிதைவு காரணமாகத் தற்போது இல்லாமலிருக்கிறது. வட கருவறையின் இடக்காவலர் பட்டிகையின் மீதே பாதம் வைத்துத் தனித் தாள்தாங்கியின்றி நிற்கிறார்.

உள்மண்டபத் தரையிலிருந்து 58 செ. மீ. உயரத்தில் அமைந்துள்ள இக்கருவறைகளின் உட்சுவர்களும் கூரைகளும் வெறுமையாக உள்ளன. வட, தென் கருவறைகளின் தரை, அவற்றின் வாயில் கீழ்நிலையைவிட முறையே 4 மற்றும் 6.5 செ. மீ. தாழ்வாக உள்ளன.

மையக் கருவறையின் தரையமைப்பு கீழ்நிலையின் மட்டத்தில் அமைந்துள்ளது. உத்திரமே மேல்நிலையாக அமைந்துள்ளது.

தென் கருவறை வாயிலின் அகலம் 66 செ. மீ. கருவறையின் உட்பகுதி ஒரு மீட்டர் பக்கம் கொண்டு 1.67 மீட்டர் உயரத்திற்குக் குடையப்பட்டுள்ளது. கருவறைப் பின்சுவரையொட்டிக் காணப்படும் ஆழமான குழி இங்கு நிறுவப்பட்டிருந்த திருமேனியின் கீழ்ப்பகுதியைப் பொருத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

மையக் கருவறையின் வாயில் 66 செ. மீ. அகலத்தில் உள்ளது. உட்புறத்தே தென்வடலாக 1.37 மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக 1.07 மீட்டர் அகலமும் கொண்டு 1.78 மீட்டர் உயரத்திற்கு அமைந்துள்ள இக்கருவறையின் நடுவில் தரை மீது கிடத்தப்பட்டுள்ள ஒரு சதுரப் பாறையின் மேல் லிங்கத்திருமேனி காட்சியளிக்கிறது. ஆவுடையாரின் கோமுகப் பகுதி உடைந்துள்ளது. பாறைக்குக் கீழே குழி இருப்பதைப் பார்க்க முடிகிறது. இக்கருவறையின் வாயிலருகே இருபுறமும் சதுரமான குழிகள் கூரையிலும் தரையிலுமாய் வெட்டப்பட்டுள்ளன. மரத்தால் வாயில்நிலை நிறுத்திக் கதவுகள் அமைப்பதற்காகப் பிற்காலத்தே இக்குழிகள் வெட்டப்பட்டிருக்கலாம். இக்கருவறையிலிருந்து நீர் வெளியேறுவதற்காகப் படிக்கட்டுகளின் வழியே கால் வெட்டியிருக்கிறார்கள். இது உள்மண்டப, முகமண்டபத் தரைகளில் 4·44 மீட்டர் நீளத்திற்கு ஓடி முகப்புக்கு முன்னுள்ள தரையில் முடிகிறது.

வட கருவறையின் வாயில்தான் மூன்று வாயில்களிலும் அகலமான வாயிலாக அமைந்துள்ளது. 71 செ.மீ. அளவுள்ள இவ்வாயிலின் உட்புறத்தே 1·69 மீட்டர் உயரத்திற்கு அமைந்துள்ள கருவறையின் தென்வடல் நீளம் 1·18 மீட்டர். கிழக்கு மேற்காக இதன் அகலம் 93 செ. மீ. பின்சுவர் அருகே இறைத்திருமேனி நிறுவலுக்காகச் சதுரமான குழியமைப்பு உள்ளது. இப்போது மையக் கருவறை தவிர ஏனைய இரண்டு கருவறைகளிலும் தெய்வத் திருமேனிகள் இல்லை.

மூன்றாம் குடைவரை

வட குன்றுத் தொடரின் தென்பகுதி உச்சியில் அமைக்கப்பட்டுள்ள இக்குடைவரையை அடையப் படிக்கட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. மிகப் பெரிய அளவினதாகத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட மிகச் சில குடைவரைகளுள் இதுவும் ஒன்றாகும். ஆர்க்காட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் விளாப்பாக்கத்திற்கருகே உள்ள திருப்பாண்மலையில்[18] காணப்படும் முடிவடையாத குடைவரை முன்தோற்றத்திலும் அளவிலும் ஏறத்தாழ இக்குடைவரையை ஒத்துள்ளது.

குன்றின் உச்சியில் நல்ல சரிவான பகுதியைத் தேர்ந்தெடுத்துப் பணி நடந்திருப்பதால் முகப்புக்கு முன்னால் மிகப் பெரிய தரையமைப்பு கிடைத்திருக்கிறது. கிழக்கு மேற்காக 1·84 மீட்டர் அகலத்திற்கும் தென்வடலாக 14·34 மீட்டர் நீளத்திற்குமாய்ப் பரந்திருக்கும் இத்தரை யமைப்பின் தென்புறம் 16·5 செ. மீ. அளவுக்கு வட பகுதியைவிட உயர்ந்துள்ளது. இப்படி உயர்ந்திருக்கும் பகுதியின் நீளம் 3.94 மீட்ட ராகும். தரையமைப்பின் பெரும் பகுதி சீராகச் சமன் செய்யப்பட்டுள் ளது. வடபுறத்தே ஒரு சிறு பகுதி மட்டும் அரைகுறையாகச் சமன் செய்யப்பட்டுள்ள நிலையில், தரையைச் சமன் செய்யப் பல்லவர் காலச் சிற்பிகள் மேற்கொண்ட தொழில் நுட்பத்தைப் புரிந்துகொள்ள முடி கிறது. பாறையின் மேற்பரப்பைச் செதுக்கக் கையாண்ட அதே முறை யைத்தான் தரையைச் செதுக்கவும் கையாண்டிருக்கிறார்கள். சிறு சிறு சதுரங்களாகப் பரப்பை வகுத்துக்கொண்டு சதுரங்களைச் சுற்றிலும் உளியால் செதுக்கித் தேவையான ஆழத்தைப் பெற்றுப் பின் சதுரங் களைப் பிளந்தெறிந்து பரப்பைச் சமன் செய்துகொள்ளும் இந்தத் தொழில் நுட்பமே மாமல்லபுரத்திலும் கையாளப்பட்டிருப்பதைப் புலிப் புதர் மண்டபப் பாறைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகளின் சுவடுகள் காட்டும்.

மற்றக் குடைவரைகளிலிருந்து அளவில் மட்டுமல்லாமல் அமைப் பிலும் இக்குடைவரை பெரிதும் வேறுபட்டுள்ளது. பொதுவாகக் குடைவரைகளை அமைப்பதற்குப் பாறையின் ஒரு புறத்தைக் குடைந்து உள் செல்வது மரபு. இப்படிச் செய்யும்போது பாறையின் ஒருபுறம் செதுக்கமைப்பும் மற்ற மூன்று புறங்களும் இயற்கையான அதன் தோற்றமும் பார்வைக்குக் கிடைக்கும். ஆனால் இங்கோ வழக்கத் திற்கு மாறாகப் பாறையின் கிழக்கு மற்றும் தெற்கு முகங்களில் குடைந்திருக்கிறார்கள். கிழக்குமுகக் குடைவு முழுமையடைந்து குடைவரையின் முன்தோற்றமாக மலர்ந்துள்ளது. தென் முகக் குடைவு என்ன காரணத்தாலோ முழுமையடையாது நிற்கிறது. இப் பகுதியின் முகப்பாக நடுவில் இரண்டு தூண்களும் தென்கிழக்கு மூலை யில் ஒரு தூணும் பிரம்மகாந்தமாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் எதையும் முழுத்தூண் என்று சொல்ல முடியாதபடி இவற்றின் மூன்று பக்கங்களே பார்வைக்குக் கிடைக்கின்றன. தென்மேற்கு மூலையில் வடிவம் பெறாது போதிகையை மட்டும் நீட்டியபடி நிற்கும் பாறை மற்றொரு அரைத்தூணுக்காக விடப்பட்ட பகுதியாகலாம்.[19] இதை யொட்டிப் பிளக்கப்பட்ட ஆனால் சமன் செய்யப்படாத குன்றின் சரிவு.

முகப்புத் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதிகள் பின்னாலுள்ள பாறைச்சுவர் பிளக்கப்படாமையால் அங்கணங்களாக உருப்பெறாமல் ஆழமான கோட்டங்களாகியுள்ளன. இவற்றுக்கு முன்புறத்தே குறுகிய

சமன் செய்யப்படாத தரையமைப்பு காணப்படுகிறது. தமிழகத்தி லுள்ள பல்லவர் குடைவரைகளுள் முன்புறம் மட்டுமல்லாமல் பக்கப் பகுதியும் குடையப்பட்ட நிலையில் காட்சி தரும் குடைவரை இது ஒன்றுதான்.[20]

குடைவரையின் கிழக்கு முகப்பு, முன்னாலுள்ள தரையைவிட 15 செ. மீ. உயரத்திலுள்ளது. இந்த உயரம் ஆங்காங்கே வேறுபடு கிறது. வட பகுதியில் உள்ள அரைத்தூணுக்கும் அதையடுத்துள்ள முழுத்தூணுக்கும் இடைப்பட்ட பகுதியில் முகப்புத் தரை முன் தரை யோடு அய்க்கியமாகுமளவுக்குச் சிதைக்கப்பட்டுள்ளது.

இம்முகப்பில் ஐந்து முழுத்தூண்களும் வட, தென் மூலைகளில் பக்கத்திற்கொன்றாக இரண்டு அரைத்தூண்களும் செதுக்கப்பட் டுள்ளன.[21] தென்புற அரைத்தூண் பிரம்மகாந்தமாக வடபுறத்தி லொன்றும் மேற்கிலொன்றுமாகப் போதிகைகளைக் கொண்டமைந் துள்ளது. இந்த அரைத்தூண் குடைவரையின் கிழக்கு முகத்திற்குத் தென்னெல்லையாகவும், தெற்கு முகத்திற்குக் கிழக்கெல்லையாகவும் அமைந்து மூன்று புறங்கள் முழுமையாய்த் தெரிய மேற்கில் மட்டும் பாதியளவு மறைந்து அரைத்தூணுக்குரிய இலக்கணத்திலிருந்து மாறு பட்டு முழுத்தூணாகவும் இல்லாமல் விதிவிலக்காக நிற்கிறது.

இதையடுத்து அமைந்துள்ள முழுத்தூண், பணி முழுமையடையாத நிலையில் பிரம்மகாந்தமாக விடப்பட்டுள்ளது. அடுத்துள்ள நான்கு தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பைக் கொண்டுள்ளன. இவற்றுள் மூன்றாவது முழுமையடையவில்லை. ஒவ்வொரு தூணி லும் மேல், கீழ்ச் சதுரங்கள் பெரும்பாலும் அகலத்தில் ஒரே அளவின வாகவும் அல்லது மிகச் சிறு வேறுபாடுகளுடனும் இருக்க, உயரம் மட்டும் சற்று முன்பின்னாக அமைந்துள்ளது. ஒரு தூணின் மேற் சதுரத்தைவிடக் கீழ்ச்சதுரம் 12 செ.மீ. அதிக உயரமுடையதாகக் காட்டப்பட்டுள்ளது. மற்ற தூண்களில் இந்த உயர வேறுபாடு 10 செ.மீ. ஆக உள்ளது. சதுரங்களின் அகல வேறுபாடு மிகைநிலையில் 2 செ. மீ. ஆக உள்ளது.

இத்தூண்களின் போதிகை அளவுகளில் சிறு சிறு வேறுபாடுகள் இருந்தபோதும் பல்லவ மரபையொட்டி அமைந்துள்ளன. இவற்றின் கீழ்க்கைகள் நன்றாக வளைந்து மேற்கைகளாகி உத்திரத்தைத் தாங்கு கின்றன. சில போதிகைகளில் மேற்கையும் சிலவற்றில் கீழ்க்கையும் நீளமாய்க் காட்டப்பட்டுள்ளன.

இம்முழுத்தூண்களையடுத்து அமைந்துள்ள அரைத்தூண் பிரம்ம காந்தமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் கிழக்கு முக அகலம் 28

செ. மீ. இதையடுத்து மேலிருந்து கீழ் நோக்கி அகன்று வரும் குடைவரையின் பக்கச் சுவர். இதன் நடுப்பகுதி அகலம் 87 செ.மீ. இதற்குச் சற்றுத் தள்ளி வடபுறத்தே சரிந்து முன் தள்ளி நிற்கும் குன்று, அரைத் தூண்வரை குடைவரையின் பார்வைக்காக நன்கு பிளக்கப்பட்டுள்ளது. பாளம் பாளமாக உடைத்தெடுக்கப்பட்டிருப்பதால் அடுக்குகளாய்த் தோன்றும் இதன் கீழ்ப்பகுதி முகப்புத் தரையின் முன்னால் மற்றொரு கரடு முரடான தரையமைப்பாய் உயர்ந்துள்ளது.

முகப்புத்தூண்களின் மேல் நிற்கும் உத்திரத்தின் மையப்பகுதியிலும், போதிகைகளுக்கு இடைப்பட்ட உத்திரப் பகுதியிலுமாய்ப் பத்து சதுரமான துளைகள் வெட்டப்பட்டுள்ளன. இவை குடைவரைக்கு முன் பந்தலிட விரும்பியவர்கள் கம்புகளை நுழைப்பதற்காகப் பிற்காலத்தே தோற்றுவித்தவையாக இருக்கலாம். இந்தத் துளைகள் தென்புறத்தே உள்ள முதலிரு தூண்களின் மேலுள்ள உத்திரத்தில் வெட்டப்படவில்லை. உத்திரத்தின் மேல் பிதுக்கமாக ஓடும் வாஜனமும் இந்தத் தூண்களில் இரண்டாம் தூணின் இடப்புறப் போதிகையோடு நின்றுவிடுகிறது. இத்தூண்கள் முழுமையடையாமையே இதற்குக் காரணமாகலாம்.

வாஜனத்திற்கு மேலே உள்ள பாறைப்பகுதி சமன் செய்யப்பட்ட நிலையில் கபோதப் பயன்பாட்டைத் தருகிறது. இதன் கிழக்கு முகம் எந்தவிதமான அலங்கரிப்புமின்றி பாறையாகவே விடப்பட்டுள்ளது.

வாஜனம், உத்திரம், போதிகைகள் மீது வண்ணப் பூச்சின் எச்சங்கள் இன்றும் காணப்படுகின்றன. முதலிரண்டு குடைவரைகளைப் போல் இங்கும் பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ணப் பட்டைகளே தீட்டப் பெற்றுள்ளன. சில தூண்களின் மீது புலிவரி போலக் கருப்புக்கோடுகளும் சிலவற்றின் மீது வளைவுக் கோடுகளும் வரையப் பெற்றுள்ளன.

முகப்பையடுத்துள்ள நீளமான மண்டபம் உட்புற வரிசைத் தூண்களால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முகப்புக்கும் இத்தூண் வரிசைக்கும் இடைப்பட்ட பகுதியை முகமண்டபமென்றும் இரண்டாம் வரிசைத் தூண்களிலிருந்து தொடரும் பின்பகுதியை உள்மண்டபமென்றும் அழைக்கலாம். முகமண்டபம் தென்வடலாக 10·78 மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக 2·17 மீட்டர் அகலமும் கொண்டமைந்துள்ளது. முகமண்டபத்தின் தரையும் கூரையும் வெறுமையாக உள்ளன. கூரையை ஒட்டிக் கிழக்கிலும் மேற்கிலும் மண்டபத்தின் முழு நீளத்திற்கும் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் தென், வட சுவர்களில் கருவறைகள் குடையப்பட்டுள்ளன.[22] இவ்விரண்டிலுமே இப்போது தெய்வத் திருமேனிகள் இல்லை.



முதற் குடைவரை



இரண்டாம் குடைவரை



மூன்றாம் குடைவரை



முற்றுப் பெறாத நான்காம் குடைவரை

வடபுறத்தே உள்ள கருவறை முகமண்டப, உள்மண்டப அரைத் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் குடையப்பட்டுள்ளது. முகமண்டபத் தரையிலிருந்து 63 செ. மீ. உயரத்தில் அமைந்திருக்கும் இதன் நுழைவாயிலுக்குத் தாங்குதளம் காட்டப்படவில்லை. படிகள் இருந்து அழிக்கப்பட்டிருக்கலாமென்பது போலச் சந்திரக் கல்லின் சுவடுகள் காணப்படுகின்றன. நுழைவாயிலின் அகலம் 1·44 மீட்டர். கருவறை கிழக்கு மேற்காக 1·18 மீட்டர் அகலமும் தென்வடலாக 1·41 மீட்டர் நீளமும் கொண்டமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் கூரை மற்றும் பக்கச் சுவர்கள் வெறுமையாக உள்ளன. பின்சுவருக்கு அருகே 17 செ.மீ. ஆழத்தில் 62 செ.மீ. நீளம், 24 செ.மீ. அகலத்திற்கு ஒரு குழி வெட்டப்பட்டுள்ளது. இறைத்திருமேனியின் கீழ்ப் பகுதியைப் பெறுவதற்காக இது வெட்டப்பட்டிருக்கலாம். கருவறை வாயிலின் இருபுறமும் மேலே கூரையில் இரு சதுரமான துளைகள் காணப்படுகின்றன. இவை வாயில்நிலை அமைக்கக் கருதி வெட்டப்பட்டிருக்கலாம். கருவறையின் முகப்பில் கபோதம் மட்டும் காட்டப்பட்டுள்ளது.

தென் கருவறை வாயில் முகமண்டபத் தரையிலுள்ள சந்திரக் கல்லிலிருந்து 46 செ. மீ. உயரத்தில் காட்டப்பட்டுள்ளது. தாங்குதளம் பெறாமல் மேற்படிக்கட்டுகள் இன்றி வெறும் சந்திரக்கல்லை மட்டும் கொண்டு அமைந்துள்ள இதன் வாயில் அகலம் 1.31 மீட்டர். கூரையும் பக்கச் சுவர்களும் வெறுமையாக இருக்கத் தரை சமன் செய்யப்பட்டு வழவழப்பாக்கப்பட்டுள்ளது. கருவறையின் கிழக்குச் சுவர் பாதிக்கு மேல் உடைக்கப்பட்டுத் திறப்பாக உள்ளது. இங்கும் பின்சுவரையொட்டித் தெய்வத்திருமேனியை நிறுத்த ஒரு குழியும், கருவறைக் கூரையில் வாயிலின் இருபுறமும் சதுரக் குழிகளும் காணப்படுகின்றன. கருவறையின் முகப்பில் கூரையே மேல்நிலையாகி உத்திரம் போலச் செயற்படுகிறது. இதன் மேல் வாஜனமும் கபோதமும் அடுத்தடுத்துப் பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளன [23] கபோதம் வளைக்கப்பட்டிருந்தாலும் முழுமையான அமைப்பு பெறவில்லை. வட, தென் கருவறைக் கபோதங்களின் மீது முகமண்டபக் கூரையிலோடும் வாஜனம் முடிகிறது.

உள்மண்டபத்தின் தொடக்கத்தில், மையப்பகுதியில் நான்கு முழுத்தூண்களும், பக்கங்களில் இரண்டு அரைத்தூண்களும் அமைந்துள்ளன. இவை உள்மண்டபத் தரையமைப்பிலிருந்து 14.5 செ. மீ. உட்தள்ளி எழுகின்றன. தென்வடலாக 9.92 மீட்டர் நீளமும் கிழக்கு மேற்காக 1.79 மீட்டர் அகலமும் கொண்டமைந்துள்ள உள்மண்டபத்தின் தரை, முகமண்டபத் தரையிலிருந்து 11-13 செ. மீ. உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் பின்சுவரில் ஐந்து கருவறைகளும் பக்கச் சுவர்களில் இரண்டு கருவறைகளும் குடையப்பட்டுள்

ளன. இவையனைத்துமே தற்போது தெய்வத்திருமேனிகளின்றி உள்ளன.

தென்புறமுள்ள அரைத்தூண் பிரம்மகாந்தமாக 70·5 செ.மீ. அகலத்தில் (வடமுகம்) அமைந்துள்ளது. இதன் பின்பகுதி முகமண்டபத் தென் கருவறைக்கு மேற்குச் சுவராகவும், உள்மண்டபத் தென் கருவறைக்குக் கிழக்குச் சுவராகவும் அமைந்துள்ளது. இதையடுத்து அமைந்துள்ள மையத்தூண்கள் நான்கும் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ளன. இவற்றுள் முதற் தூண் சதுரங்கள் மட்டும் ஏறத்தாழ ஒரே அளவினதாக உள்ளன. ஏனைய மூன்று தூண்களின் கீழ், மேல் சதுரங்கள் பெருமளவு மாறுபடுகின்றன. இத்தூண்களின் போதிகைகள் முகப்புத் தூண்களைப் போலவே வளைந்து அமைந்துள்ளன. போதிகைக் கைகளின் அளவும் நீளமும் தூணுக்குத் தூண் மாறுபடுகின்றன. சிலவற்றில் கீழ்க்கை நீளமாகவும் சிலவற்றில் மேற்கை நீளமாகவும் அமைந்துள்ளன. இக்கைகள் தாங்கும் உத்திரத்தின் கனமும் ஒரே அளவினதாக இல்லை. உத்திரத்தின் மேல் பிதுக்கமாகக் கிழக்கிலும் மேற்கிலும் வாஜனங்கள் நீட்டப்பட்டுள்ளன. கிழக்கு வாஜனம் தென் கோடியிலும் மேற்கு வாஜனம் இடையிலும் சிதைந்துள்ளன.

உள் மண்டபக் கூரை வெறுமையாக, ஆங்காங்கே சுதையெச்சங்களுடன், சமனற்ற பரப்பு கொண்டமைந்துள்ளது. கருவறைகளுக்கு முன் அகன்றும் இடைப்பட்ட பகுதிகளில் தூண்கள் அமர்ந்திருப்பதால் குறுகியும் காணப்படும் தரை நன்றாய்ப் பொளியப்பட்டுச் சமன் செய்யப்பட்டுள்ளது.

கருவறைகளுக்கு முன் மக்கள் நிற்க ஏதுவாக இடமளித்துத் தூண்களைக் கருவறைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் அமைத்திருப்பதும் முகப்புத் தூண்களையும் உள்மண்டபத் தூண்களையும் ஒரே வரிசையில் எடுத்திருப்பதும் சிற்பிகளின் திட்டமிடும் திறனையும் அதைச் செவ்வனே நிறைவேற்றிய பாங்கையும் உணர்த்த வல்லன.

உள்மண்டபத் தரையிலிருந்து 62 செ. மீ. உயரத்தில் காட்டப்பட்டுள்ள வட சுவர்க் கருவறை வாயிலின் அகலம் 79.5 செ.மீ. வாயிலுக்கு இரு பக்கத்திலும் நிலைகள் காட்டியுள்ளனர். கருவறையின் கூரையே இந்நிலைகளின் மேல், தட்டையான சிறு உத்திரம் போல் இழுத்துவிடப்பட்டுள்ளது. இதற்கு மேல் வடிவமைக்கப்பட்ட கபோத வளைவு. கருவறையின் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. தரையில் பின்சுவரையொட்டி 55 செ. மீ. நீளம், 21 செ. மீ. அகலம், 15 செ. மீ. ஆழமுள்ள குழியொன்று தெய்வத்திருமேனியின் நிறுவலுக்

காக வெட்டப்பட்டுள்ளது. வாயிலையொட்டி மேலும் கீழும் பக்கத்திற் கொன்றாக இருபுறமும் சதுரக் குழிகள்.

தென் கருவறை உள் மண்டபத் தரையிலிருந்து 60 செ.மீ. உயரத்தில் உள்ளது. இதன் முன் ஒரு படி காட்டப்பட்டுள்ளது.[24] வட கருவறையைப் போலவே அமைந்துள்ள இதன் வாயில் அகலம் 73 செ. மீ. இதன் கிழக்கு நிலை தென் கருவறையைவிட அகலம் குறைந்ததாகச் சிதைந்து காணப்படுகிறது. கருவறைப் பின்சுவரின் அருகே தரையில் உள்ள குழி 64 செ. மீ. நீளம், 20 செ. மீ. அகலம், 15 செ. மீ. ஆழம் கொண்டமைந்துள்ளது.

பின்சுவர்க் கருவறைகள் பாதபந்தத் தாங்குதளம் கொண்டுள் ளன. 14.5 செ. மீ. அகலமுள்ள உபானத்தின் மீது (உபானத்தின் அகலம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது) அமைந்துள்ள இத்தாங்கு தளம் கருவறை வாயில்களுக்கு இடைப்பட்ட சுவரின் கீழ் மட்டும் காட்டப்பட்டுள்ளது. பட்டிகையின் மேல் காட்டப்பட்டுள்ள கம்பு ஒழுங்கின்றி அமைந்துள்ளது.[25] சுவரில் அரைத்தூண்கள் இல்லாத போதும் கண்டப் பகுதியில் அவற்றிற்கான பாதங்கள் காட்டப்பட்டுள் ளன. சுவரின் உச்சியில் உத்திரம் தென்வடலாகச் சுவரின் முழு நீளத்திற்கும் கருவறைகளின் முகப்புகளையும் அலங்கரித்தபடி ஓடு கிறது. இதன் மேல் ஆங்காங்கே சிதைந்த கபோதம் நன்கு வளைக் கப்பட்டுக் கீழிறக்கப்பட்டுள்ளது. இக்கபோதத்தின் தொடர்ச்சியே வட, தென் கருவறைகளின் மேல் படர்ந்துள்ளது. முதல் மற்றும் மூன்றாம் கருவறை வாயில்களின் முன்னால் கீழ்மட்டத்தில் சந்திரக் கல்லும் மேலே ஒரு படியும் காட்டப்பட்டுள்ளன. மற்ற மூன்றிற்கும் சந்திரக்கல்லின் மேலே இரண்டு படிகள். கடைசி இரண்டு கருவறை களின் மேற்படிகள் உடைத்துச் சிதைக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகளின் இருபுறமும் அணைவாக யானைத்துதிக்கை போன்ற பிடிச்சுவர் உள்ளது. இந்தத் துதிக்கையின் சுருட்டல் சந்திரக்கல்லின் இருபுறமும் அமைந்துள்ளது. இறுதி இரண்டு கருவறைகளின் இருபுறமும் இப் பிடிச்சுவர் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுள்ளது.[26]

இக்கருவறைகள் உட்புறத்தே வெறுமையாக உள்ளன. வாயி லுக்கருகே மேலும் கீழும் சதுரக் குழிகள் வாயில் நிலைகளுக்காகப் பிற் காலத்தில் வெட்டப்பட்டுள்ளன. பின்சுவருக்கருகே நீளமான குழி யொன்று ஐந்து குடைவரைகளிலும் வெட்டப்பட்டுள்ளது. முதல் மற் றும் இறுதிக் குடைவரைகளில் மட்டும் இது மிக நீளமாக ஏறத்தாழப் பின்சுவர் அகலத்திற்கு அமைந்துள்ளது.[27] பின்சுவர்க் கருவறைகளின் அளவுகள்

தெற்கிலிருந்து வடக்காகக் கருவறை எண்	கிழக்கு மேற்கில் அளவு	தென்வடல் அளவு	உயரம்	வாயில் அகலம்
முதற் கருவறை	1·04 மீ.	1·31 மீ.	1·66 மீ.	69·5 செ.மீ.
இரண்டாம் கருவறை	92 செ.மீ.	95 செ.மீ.	1·71 மீ.	69 செ.மீ.
மூன்றாம் கருவறை	1·02 மீ.	94 செ.மீ.	1·65 மீ.	67·5 செ.மீ.
நான்காம் கருவறை	1·10 மீ.	1·13 மீ.	1·69 மீ.	69·5 செ.மீ.
ஐந்தாம் கருவறை	1·00 மீ.	1·24 மீ.	1·66 மீ.	69·5 செ.மீ.

நான்காம் குடைவரை

வட தொடரின் சரிவிற்குப் பிறகு தொடங்கும் தென் தொடரின் முதல் எழுச்சியின் உச்சியில் இக்குடைவரை குடையப்பட்டுள்ளது. நில மட்டத்திலிருந்து குடைவரையை அடைய மூன்றாம் குடைவரையைப் போலவே இதற்கும் மலைப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மூன்று குடைவரைகளைப் போல் அல்லாமல் இங்கு இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையினர் குடைவரைக்கு முன்னாலுள்ள பாறைத் தளத்தைச் சமப்படுத்திப் பூச்சு தந்து பரந்து விரிந்த தரையமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

குடைவரை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சரிவான பாறையில் குடைந்திருப்பதால் முகப்புக்கு முன்னால் அகலமான தரைப்பரப்பு கிடைத்துள்ளது. சீரமைக்கப்பட்டிருந்த போதும் சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் மேடு பள்ளமாகக் காட்சியளிக்கும் இதன் தென்வடல் நீளம் 6·80 மீட்டர். அகலம் 1·50 மீட்டர்.

முகப்பின் மையத்தில் இரண்டு முழுத்தூண்களும் பக்கங்களில் இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. முழுத்தூண்களில் முதல் தூணைச் சதுரம், கட்டு, சதுரமெனப் பிரிக்கும்பணி தொடங்கிய நிலையில் விடப்பட்டுள்ளது.[28] கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தைப் போல ஒன்றரை மடங்கு உயரமாக உள்ளது. இரண்டாம் முழுத்தூண் பிரம்மகாந்தமாகவே விடப்பட்டுள்ளது. அரைத்தூண்கள் இரண்டும் வழக்கம் போல்

பிரம்மகாந்தமாகவே உள்ளன. போதிகைகள் வளைந்து மேல் நோக்கிச் சென்று உத்திரத்தைத் தொடுகின்றன. தென்புற அரைத் தூணின் போதிகைக்குக் கீழ்க்கையே காட்டப்படாதது போல அத்தனைச் சிறியதாய் வெளிப்பட்டு வளைந்து மேற்கை ஆகியுள்ளது. வடபுற அரைத்தூணின் போதிகைக் கைகள் விரிகோணத்தில் உள்ளன. உத்திரம், வாஜனம் இரண்டுமே சரியாக வடிவமைக்கப்படவில்லை. வாஜனத்திற்கு மேலே கபோதத்திற்குக் கீழே காட்டப்பட்டிருக்கும் பகுதி, வலபியாக உருவாக்க விடப்பட்ட பாறைப் பகுதியாகலாம். முகப்புக் கூரையின் கீழ்ப்பரப்பு சீரமைக்கப்பட்டுக் கபோதமாகக் காட்டப் பட்டுள்ளது.

அரைத்தூண்களை அடுத்த வெளிப்பக்கச் சுவர்கள் பேரளவினவாய் மேலிருந்து கீழே அகலமாக இறங்குகின்றன. இவற்றுள் தென் சுவரின் அகலம் 1·18 மீட்டர். வட சுவரின் அகலம் 1·22 மீட்டர்.

முகப்புத் தூண்களையடுத்துக் காணப்படும் முகமண்டபம் தென் வடலாக 7·34 மீட்டர் நீளத்திற்கும் கிழக்கு மேற்காக 77 செ.மீ. அகலத்திற்குமாய்க் குடையப்பட்டுள்ளது. இதன் தரை, கூரை, பக்கச் சுவர்கள் அனைத்தும் வெறுமையாக இருப்பதுடன் சமனற்ற நிலையில் சற்றுக் கரடு முரடாக உள்ளன. பின்சுவர் நேராக இல்லாமல் சற்று வளைவாகக் குடையப்பட்டுள்ளது. இச்சுவரில் மூன்று கருவறைகள், அவற்றுக்கான படிக்கட்டுகள் உருவாக்கும் பணி திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படாமல் விடப்பட்டுள்ளது.

சிற்பங்கள்

மாமண்டூர் நரசமங்கலக் குடைவரைகள் நான்கில் இரண்டாம் குடைவரையில் மட்டுமே சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்குடை வரையில் உள்ள மூன்று கருவறைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் இருவரென ஆறு காவலர்கள் சுவர்க் கோட்டங்களில் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் கருவறை வாயில்களைப் பக்கத்திற் கொருவராகக் காவல் செய்த வண்ணம் காட்சி தருகின்றனர்.

வாயிற்காவலர்கள்

இவர்களுள் தென் கருவறைக் காவலர்கள் முனிவர்கள். இடைக் கச்சம் வைத்துக் கட்டிய கீழாடை கணுக்கால்வரை நீண்டுள்ளது. இருவருமே நேர் நோக்கி நின்றாலும்[29] வலப்புறத்தார் இரு வளைவுக் கோலம்[30] காட்டுகிறார். சடா மகுடமும் மழித்தல் விரும்பாது வளர்த்த நீள் தாடியும் மீசையும் சற்றே நீண்ட அவர்கள் முகத்திற்கு எழிலூட்டு கின்றன. இருவருமே துணியாலான முப்புரிநூல் அணிந்திருந்தாலும்

இடப்புறத்தாருக்கு மட்டும் அந்நூல் வலக்கை மேலேறிச் செல்கிறது.[31] இருவரது பாதங்களுக்கும் பாதந் தாங்கிகள் காட்டப் பட்டுள்ளன. வலப் புறத்தார் வலப்பாதத்தைச் சமமாகவும் இடப்பாதத்தைத் திரஸ்ரய மாகவும் கொள்ள, இடப்புறத்தார் இடப்பாதத்தைச் சமமாகவும், வலப் பாதத்தைத் திரஸ்ரயமாகவும் கொண்டுள்ளார். கருவறை நோக்கிய கைகள் மலர் மொட்டு கொண்டிருக்க, வெளிக்கைகள் வலப்புறத் தாருக்கு ஊரு அஸ்தமாகவும் இடப்புறத்தாருக்கு மார்பருகே அமைந்த கடகமாகவும் காட்டப்பட்டுள்ளன. இக்காவல் முனிவர்களைக் கொண்டு இக்கருவறையின் தெய்வம் நான்முகனாக இருக்கலாமென அறிஞர் கூ. ரா. சீனிவாசன் ஊகித்திருப்பதைச்[32] சரியெனக் கொள்ள முடியவில்லை. மாமல்லையிலுள்ள மும்மூர்த்திக் குடைவரையில் முருகன் கருவறைக்கு முன்னாலும் வாயிற்காப்போராக முனிவர்களே காட்டப்பட்டிருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

மையக் கருவறையின் காவலர்கள் இருவரும் பூரிமம் பதித்த சடா மகுடர்களாய்க் கட்டுக்குள் அடங்காத சடைக் கற்றைகள் முகத்தின் இருபுறமும் புரிகளாய்த் திரண்டிருக்கப் பெரும் பனையோலைக் குண்ட லங்களுடன், உருள் தடிகளின் மீது கைகளைத் தாங்கலாய் நிறுத்திக் கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றனர். இருவருமே அரையாடை அணிந்து ஆடையின் முடிச்சுத் தொங்கல்கள் பக்கவாட்டில் நெகிழ, மேற்கைகளில் கங்கணங்கள், மணிக்கட்டுகளில் வளைகள், கழுத்தில் அட்டிகை எனப் பல்வகை அணிகள் பூண்டு இருவளைவுக் கோலத்தில்[33] எழிலுறக் காட்சி தருகின்றனர். இருவரின் வெளிக்கைகளும் ஊரு முத்திரையில் உள்ளன.[34] இருவரது முப்புரி நூல்களுமே வல மேற் கையின் மீதேறிச் செல்கின்றன. இடக்காவலரின் வலப்பாதம் திரஸ்ரயத்திலிருக்க இடப்பாதம் சமமாக உள்ளது. வலக்காவலர் கால்களை ஸ்வஸ்திகமாக்கியுள்ளார். வலக்காலின் பின்னே இடப் பாதம் உத்கட்டிதத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. வலப்பாதத்துக்குத் தனித் தாங்கல் காட்டப்பட்டுள்ளது இவருடைய முகம் கருவறையை நோக்கித் திரும்பியிருக்க இடக்காவலர் சற்றே நேர்ப் பார்வையராய் மலர்ச்சி பொங்க இதழ்களில் நகை நெளிய பட்டிகைச் சிதைவால் பாதங்களிழந்து நிற்கிறார்.

மூன்றாம் கருவறையின் காவலர்கள் முவ்வளைவுக் கோலத்தில்[35] நேர்ப் பார்வையினராய் நிற்கின்றனர். இருவரது உட்கைகளும் போற்றி முத்திரையில் இருக்க[36] வெளிக்கைகள் ஊரு அஸ்தமாக உள்ளன. உருண்டு திரண்ட முப்புரி நூல் இவர்தம் மேற்கைகளில் ஏறிப் பின் செல்கிறது. சடைக்கற்றைகளும் பனையோலைக் குண்ட லங்களும் மையக் காவலரினும் அளவில் சிறியவை. இவர்களது கிரீட மகுடங்களும் கழுத்தணிகளும் குறிப்பிடத்தக்கவை. மையக் காவலர்

போலவே இடுப்பாடை. இருவர் முகங்களும் சற்று நீளமானவை. ஆனால் அழகு குன்றாதவை. வலக்காவலரின் பாதங்கள் பார்சுவத்தில் இருந்திருக்க வேண்டும். பட்டிகைச் சிதைவால் இவர் பாதங்களை இழந்துள்ளார். இடக்காவலர் இரண்டு பாதங்களையும் சற்றே அகன்றார் போல் சமத்திலும் திரஸ்ரயத்திலுமாய் நிறுத்தியுள்ளார்.

இலிங்கத் திருமேனி

இரண்டாம் குடைவரையின் மூன்று கருவறைகளுள் நடுக் கருவறையில் மட்டுமே லிங்க வடிவில் தெய்வத் திருமேனி காணப்படுகிறது. அதிக வேலைப்பாடில்லாத வழவழப்பான லிங்கம் வட்டமான ஆவுடையாரில் பொருத்தப்பட்டுள்ளது. இடப்புறம் அமைந்துள்ள கோமுகம் முற்றிலுமாகச் சிதைந்துள்ளது.

கல்வெட்டுகள்

இங்குள்ள நான்கு குடைவரைகளில் முதலிரண்டில் மட்டுமே கல்வெட்டுகள் கிடைக்கின்றன. முதற் குடைவரையில் முதலாம் மகேந்திரவர்மரின் கிரந்தக் கல்வெட்டும் ஒரு வரியிலமைந்த ஸ்வரக் கல்வெட்டொன்றும் காணப்படுகின்றன. இரண்டாம் குடைவரையில் சோழர்களின் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன. இவை அனைத்துமே அறிஞர்களால் ஏற்கனவே கண்டறியப்பட்டவை.

முதற் குடைவரைக் கல்வெட்டுகள்

இக்குடைவரையில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. ஒன்று முகப்புக்கு முன்னுள்ள தென்பக்கச் சுவரின் கீழ்ப்பகுதியிலும் மற்றொன்று முகமண்டபத்தின் தென் சுவரிலுமாய்க் காணப்படுகின்றன. முதற் கல்வெட்டு ஒரே வரியிலமைந்த சில கிரந்த எழுத்துக்களால் ஆனது. இவ்வெழுத்துக்கள் படிக்க முடியாத அளவுக்குப் பொரிந்துள்ளன. திரு. கூ. ரா. சீனிவாசன் இவற்றை ராகமொன்றின் ஸ்வர பேதங்களாக இருக்கலாமென்று குறித்துள்ளார்.[37]

பதினேழு வரிகளாலான இரண்டாம் கல்வெட்டு[38] முகமண்டபத்தின் தென்புறச் சுவர் முழுமையும் பரவியுள்ளதென்று திரு. கூ. ரா. சீனிவாசன் குறிப்பிடுகிறார்.[39] ஆனால் கல்வெட்டு, சுவரின் மூன்றில் இரு பகுதிகளில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. எழுத்துக்கள் ஒரே அளவினதாகவும், வரிகள் சரியான இடைவெளி விட்டும் கலையுணர்வோடு வெட்டப்பட்டுள்ளன. பதினேழு வரிகள் உள்ள இந்தக் கல்வெட்டில் முதல் எட்டு வரிகளும், பத்து மற்றும் பதினோராம் வரிகளும் படியெடுத்த காலத்திலேயே பெருமளவு சிதைந்திருந்ததைத்

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் வெளியிட்டிருக்கும் மசிப் படியால் அறிய முடிகிறது.[40] இப்போது மேலும் சில எழுத்துக்கள் முறையான பராமரிப்பின்மையால் அடையாளம் தெரியாதபடி சிதைந்து விட்டன.

இக்கல்வெட்டில் மகேந்திரவர்மரின் சிறப்புப் பெயர்களான சத்ரு மல்லன், நித்யவிநீதன், சத்யசந்தன் என்பன கிடைத்துள்ளன. முதல் வரியில் காணப்படும் கந்தர்வ சாஸ்திரம் இசை நூலைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.[41] திரு. மயிலை சீனி வேங்கடசாமி இதைக் கொண்டு மகேந்திரவர்மர் கந்தர்வ சாஸ்திரத்தில் வல்லவராக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.[42] இதே இசை நூலை அப்பரடிகளும் தம் திருவீழிமிழலைப் பதிகத்தில் குறித்துள்ளமை இங்கு நினைக்கத் தகுந்தது.

''கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண் ''.[43]

இப்பதிகத்திற்கு உரையெழுதிய திரு. சி. அருணை வடிவேலனார் 'கந்திருவம்' இசையிலக்கண நூலைக் குறிப்பதாகக் கூறுகிறார்.[44] அப்பரடிகள் மகேந்திரவர்மரின் சமகாலத்தவர் என்பது பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ள உண்மையாகும். இலக்கியத் திற்குக் கல்வெட்டும் கல்வெட்டிற்கு இலக்கியமும் தாங்கலாக நிற்கும் இந்தச் சிறப்பு தமிழ் இலக்கியங்களின் உண்மைத் தன்மையை உணர்த்த வல்லதொரு சான்றாகும்.

இக்கல்வெட்டின் ஒன்பதாம் வரி இசையொலிகளைக் குறிப்பதாக வும் பன்னிரண்டு, பதின்மூன்றாம் வரிகள் இசையில் முன்பு பெற முடியாதிருந்த நிலைகளைப் பெற மகேந்திரவர்மர் கொண்டிருந்த ஆர்வத்தையும், வீணையில் மட்டுமே செய்ய முடிந்த சில ஒலிக்குறிப்பு களை குரலிசையிலும் கொண்டு வரமுடியுமென்று தீர்மானத்தோடும் உற்சாகத்தோடும் செயற்பட்ட தீரத்தையும் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.[45]

மகேந்திரவர்மர் அவர் காலத்தில் வழங்கி வந்த ஓவிய நூலொன் றிற்குத் தட்சிண சித்திரமென்ற பெயரில் உரையெழுதிய தகவலையும் இக்கல்வெட்டால் பெறமுடிகிறது.[46] இந்த ஓவிய நூலைத்தான் மணிமேகலை ஓவியச் செந்நூலாகக் குறிக்கிறது போலும்.[47] இந்த ஓவியச் செந்நூலை அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகிறார்.[48]

மணிமேகலை ஓவியச் செந்நூலைக் குறிப்பது போலவே அதற்கான உரைநூலொன்றையும் குறிக்கிறது.

''ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை''

இந்த உரைநூல் மகேந்திரரால் எழுதப்பட்டதா அல்லது அவருக்கு முன்னரே இருந்த மற்றொரு உரைநூலா என்பதை அறியக்கூடவில்லை. மணிமேகலை குறிப்பது மகேந்திரர் எழுதிய உரைநூலெனில், மணிமேகலையின் காலம் மகேந்திரருக்குப் பிற்பட்டதென்று கொள்ள நேரும்.

இக்கல்வெட்டின் பன்னிரண்டாம் வரியிலுள்ள 'வர்ண சதுர்த்த' என்ற சொற்கள் ஓவியத்தில் மகேந்திரருக்குள்ள திறமையையும் ஈடுபாட்டையும் சுட்டுவதாகக் கொள்ளலாம்.[49] அதனால்தானோ என்னவோ தம்மைச் சித்திரகாரப்புலி என்றழைத்துக் கொள்வதில் மகேந்திரவர்மர் மகிழ்ந்திருக்கிறார்.

மகேந்திரர் இலக்கிய ஈடுபாடுடையவராகவும் விளங்கியதை இக்கல்வெட்டின் மூன்றாம் வரியிலுள்ள வால்மீகியின் பெயரும், ஆறாம் வரியிலுள்ள வியாசரின் பெயரும் தெளிவாக்குகின்றன.[50] மத்தவிலாசப் பிரகசனம், பகவதஜ்ஜுகம் என்னும் நூல்களின் பெயர்களும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதால் இவற்றை எழுதியவர் மகேந்திரவர்மரே என்று திரு. டி. வி. மகாலிங்கம் கருதுகிறார்.[51] இவை இரண்டுமே மிகச்சிறந்த எள்ளல் நாடக நூல்களாகும். இவற்றுள் மத்தவிலாசப் பிரகசனம் 1917 இல் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டதாக மயிலை சீனி. வேங்கடசாமி தெரிவிக்கிறார்.[52] இதன் தமிழாக்கம் மத்தவிலாச அங்கதம் என்ற பெயரில் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தால் 1981 இல் வெளியிடப்பட்டுள்ளது.[53]

பதினாறு, பதினேழாம் வரிகளின் திரண்ட பொருள் திருமாலின் சிறந்த அடியாராக மகேந்திரரைக் காட்டுவதாகக் கூறும் திரு. கூ. ரா. சீனிவாசன் இக்கல்வெட்டுள்ள குடைவரையின் கட்டுமானம் மகேந்திரவாடி குடைவரையை ஒத்திருப்பதாகக் கூறி இவ்விரண்டு கருத்துக்களின் அடிப்படையில் இது திருமால் கோயிலாக இருந்திருக்கலாமென ஊகிக்கிறார்.[54] ஆனால் திரு. டி. வி. மகாலிங்கம் எந்தச் சான்றும் தராமல் இக்குடைவரையை மகேந்திர விஷ்ணு கிருஹம் என்றே பெயரிட்டு அழைப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.[55]

மிக அரிய பல வரலாற்றுத் தகவல்களைத் தரும் இந்தக் கல்வெட்டு பல்லவர் வரலாறு பேசும் நூல்கள் சிலவற்றுள் உரிய இடத்தைப் பெறாமல் போனது வருந்தத்தக்கதாகும்.

இரண்டாம் குடைவரைக் கல்வெட்டுகள்

இக்குடைவரையில் இருந்து இரண்டு கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் முதலாம் இராசராசரின் பதினாறாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு முகமண்டபத்தின் வட சுவரிலும், பரகேசரிவர்ம ரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்மண்டபத்தின் தென் சுவரிலும் காணப்படுகின்றன. இரண்டுமே விளக்குக் கொடை களைப் பற்றிப் பேசுகின்றன. பரகேசரிவர்மரின் கல்வெட்டு[56] இக் குடைவரைக் கோயிலைச் சித்திர மேகத் தடாகத்தின் கீழ் அமைந்துள்ள நரசிங்கமங்கலத்து வாலீசுவரமென்று அழைக்கிறது. மன்றாடி சாத்த குட்டி வீரனும் ஆதி புசங்கச் செட்டியாரின் மகன் நாட்டடியளும்[57] ஆளுக்குக் கால் விளக்கென, அரை விளக்கிற்காக நாற்பத்தைந்தரை சாவா மூவாப் பேராடுகளை இக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர்.

நாட்டடியளின் தந்தை வாணகப்பாடியைச் சேர்ந்த பெண்ணை வடகரைத் திருவண்ணாமலையைச் சேர்ந்த வணிகராகக் குறிக்கப்படு கிறார். கொடையாக அளிக்கப்பட்ட ஆடுகளால் கிடைக்கும் வருமானம் கொண்டு இக்கோயிலில் பகல் நேரத்தே இந்த அரைவிளக்கு எரிக்கப் பட்டதாகக் கூறும் கல்வெட்டு, இவ்வாடுகளுக்குத் தீங்கு நினைப்பவர், கங்கை முதல் குமரி வரை செய்த பாவமனைத்தும் கொள்வாரென எச்சரிக்கிறது. இக்கல்வெட்டுக்குரிய பரகேசரிவர்மர் உத்தம சோழ ராகலாம்.

முதலாம் இராசராசரின் மெய்க்கீர்த்தியோடு விளங்கும் பதினா றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[58] இக்கோயில் இருக்கும் இடத்தின் அந்நாளைய பெயர்களைப் பட்டியலிடுகிறது. ருத்ர வாலீசுவரமென்று அழைக்கப்படும் இக்குடைவரை காலியூர்க் கோட்டத்துச் சித்திர மேகத் தடாகத்தின் கீழ் திருஏகம்பத்துள் உத்தம சோழ ஈசுவரப்புறத்தின் நரசிங்கமங்கலத்தில் இருப்பதாகக் கல்வெட்டு குறிக்கிறது. பரகேசரி வர்மரின் கல்வெட்டில் இல்லாத மூன்று இடப் பெயர்கள் இக்கல்வெட் டால் நமக்குக் கிடைக்கின்றன. காலியூர்க் கோட்டம் பல கல்வெட்டு களில் இடம் பெற்றுள்ள நாட்டுப் பிரிவாகும். இக்குடைவரை அமைந் துள்ள நரசிங்கமங்கலம் என்னும் சிற்றூர் காலியூர்க் கோட்டம் என்னும் நாட்டுப் பிரிவில் அடங்கியிருந்ததை இக்கல்வெட்டால் அறிகிறோம். திருஏகம்பம், உத்தம சோழ ஈசுவரப்புறம் என்னும் இரு பிரிவுகளும் இப்பகுதியிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ள வேறெந்தக் கல்வெட்டுக் களிலும் குறிக்கப்படாமையின் இவை பற்றி மிகுதியாக அறியக்கூட வில்லை. எனினும் கல்வெட்டு சொல்லாட்சி கொண்டு நோக்கும்போது நரசிங்கமங்கலம் உத்தம சோழ ஈசுவரப்புறத்துக்குள் அடங்கிய ஊராக வும், உத்தம சோழ ஈசுவரப்புறம் திருஏகம்பத்துக்குள்ளும் திருஏகம்பம் காலியூர்க் கோட்டத்தின் கீழும் இடம் பெற்றிருந்த நிலைகளை ஊகிக்க லாம்.

தீயங்குடையான்[59] அம்பனிராமன் நாற்பத்தாறு சாவா மூவாப் பேராடுகளை இக்கோயிலுக்கு வழங்கி, அவை கொண்டு அரைவிளக் கொன்றினை இரவில் எரிக்க ஏற்பாடு செய்த தகவலை இக்கல் வெட்டால் பெறுகிறோம். இக்கல்வெட்டும் ஆடுகளுக்குத் தீங்கு நினைப்பாரைக் கடுமையாக எச்சரிக்கிறது. இந்த எச்சரிக்கைகளை யார் பொருட்படுத்தினார்கள்? பொருட்படுத்தியிருந்தால் இந்தக் குடைவரை இன்று இந்த நிலைக்கு ஆளாகியிருக்குமா ?

மலை மேலுள்ள கற்றளிகள்

மூன்றாம் குடைவரை வெட்டப்பட்டுள்ள குன்றின் உச்சியில் ஒரு கற்றளியும் அதன் வடபுறத்தே சற்றுத் தாழ்வான பகுதியில் மற்றொரு கற்றளியும் காணப்படுகின்றன. தாழ்வான பகுதியிலுள்ள கற்றளி முன்மண்டபம், உள்மண்டபம், கருவறை என்ற கட்டுக்கோப்பில் கிழக்கில் வாயில் கொண்டு அமைந்துள்ளது. நான்கு பிற்காலத் தூண்களால் தாங்கப்படும் முன்மண்டபத்தின் நடுவில் பலித்தளமொன்று உள்ளது. இதன் மீது சிறுசிறு யானை வடிவங்கள், கல்லால் ஆனவை இருத்தப்பட்டுள்ளன. கருவறையில் பைரவர் தெற்கு நோக்கி நின்ற கோலத்தில் சுடர்முடியும் நாய் ஊர்தியுமாய்க் காட்சிதருகிறார். இவரின் பின் கைகள் சேதப்பட்டுள்ளன. முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்பு காட்ட இடக்கை தலையோடு கொண்டுள்ளது. பாத பந்தத் தாங்குதளத்தோடு அமைந்துள்ள இக்கோயிலின் முன்மண்டபச் சுவரில் கல்வெட்டுத் துணுக்கொன்று சிக்கியுள்ளது.

மலையுச்சியிலுள்ள கோயிலை ஊரார் சிவன் கோயிலென்று அழைக்கிறார்கள்.[60] முகமண்டபமும் கருவறையுமாய் அமைந்திருக்கும் கிழக்கு நோக்கிய இக்கோயில் பாதபந்தத் தாங்குதளத்துடன் அமைந் துள்ளது. தாங்குதளத்திற்குக் கீழே சிறு கம்பும் உபானம் மற்றும் துணை உபானமும் காட்டப்பட்டுள்ளன. கருவறையின் வடபுறம் உள்ள சிம்ம முக நீர்வழி திருமுழுக்கு நீரை வெளிக் கொணருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு முன்னால் நந்தி, பலித்தளம், கொடித்தளம் அமைய அவற்றுக்குப் பின்னால் ஒரு மேடையமைத்துக் கல்லொன்று நாட்டப்பட்டுள்ளது. கருவறையில் சிவபெருமான் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். முகமண்டபத்தின் உட்புறக் கோட்டத்துள் இருக்கும் அம்மன் திருமேனி தெற்கு நோக்கி உள்ளது. முன் கைகள் காப்பு அருட்குறிப்புகள் காட்டப் பின் கைகளில் மலரும் பாசமும் கொண்டுள்ள அம்மை மிகப் பிற்பட்ட காலத்து நிறுவலாவார்.

இக்கோயிலின் தாங்குதளத்தில் மூன்று கல்வெட்டுகள் இருக் கின்றன. ஊரொன்றை விற்பனை செய்த தகவலை முதற் கல்வெட்டும் அந்த விற்பனைத் தொகையைப் பங்கீடு செய்து கொண்ட விவரத்தை

இரண்டாம் கல்வெட்டும் எடுத்துரைக்கின்றன. இவ்விரண்டு கல்வெட்டுகளையும் இரண்டு வேறுபட்ட கால கட்டங்களில் படியெடுத்திருக்கும் கல்வெட்டுத் துறையினர் ஒன்றின் பாடத்தையும்,[61] மற்றொன்றின் சுருக்கத்தையும்[62] பதிப்பித்து இரண்டுமே அரை குறையான கல்வெட்டுகள் என்று அறிவித்துள்ளனர். ஆனால் இரண்டுமே முழுமையான கல்வெட்டுகளாகும். துறையினர் இவ்விரண்டின் தொடக்கப்பகுதிகளை மட்டுமே படியெடுத்து வெளியிட்டுள்ளனர். இவற்றின் முழுப் பாடங்களை இதே இதழில் வெளியாகியுள்ள விட்டுப்போன தொடர்ச்சிகள் பகுதியில் காணலாம்.[63] மூன்றாம் கல்வெட்டு புதிய கல்வெட்டாகும். இதை இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ள புதிய கல்வெட்டுகள் பகுதியில் பார்க்கலாம். மலை மேலுள்ள இந்தச் சிவன் கோயிலைத்தான் அறிஞர் திரு. கூ. ரா. சீனிவாசன் தவறாகத் திருமனந்தீசுவரர் கோயிலென்று குறிப்பிட்டிருக்கிறார்.[64] திருமனந்தீசுவரர் கோயில் மாமண்டூரில், காஞ்சிபுரம் வந்தவாசிப் பெருவழியின் வலப்புறத்தே உள்ள சிவன் கோயிலாகும். இதை இங்குள்ள சம்புவரையரின் கல்வெட்டொன்று மாந்தீசுவரர் கோயிலென்று அழைக்கிறது.[65] மாந்தீசுவரர் மக்கள் வழக்கில் மனந்தீசுவரராகிக் கல்வெட்டறிக்கையிலும் அப்பெயராலேயே இடம் பெற்றிருக்கிறார்.

திரு. இல. தியாகராசன் தம்முடைய சம்புவரையர் வரலாறு என்ற நூலில் இத்திருமனந்தீசுவரர் கோயிலைக் குறிப்பிடுகிறார்.[66] இக்கோயிலின் தென்புறத் தாங்குதளத்திலிருந்து கல்வெட்டுத் துறையால் 1923இல் படியெடுக்கப்பட்ட இராசநாராயண சம்புவராயரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டைத் தம் நூலில் வெளியிட்டுள்ள இவர், 'இந்த ஒரு கல்வெட்டு தவிர இக்கோயிலில் வேறு கல்வெட்டுகள் இல்லை'[67] என்று கூறி அதன் அடிப்படையில் இக்கோயில் கி. பி. 1344இல் இச்சம்புவராயரின் ஏழாம் ஆட்சியாண்டில் கட்டப்பட்டதென்று கூறியுள்ளார்.

ஆனால் இக்கட்டுரையாசிரியர்களின் கள ஆய்வின்போது இக்கோயிலின் மேற்குத் தாங்குதளக் குமுதத்தில் முழுநீளக் கல்வெட்டொன்றும் தெற்கு மற்றும் வடக்குத் தாங்குதளப் பகுதிகளில் துணுக்குக் கல்வெட்டுகள் இரண்டும் கண்டறியப்பட்டன.[68] மையக்கோயிலின் வாயிலின் மேல்நிலையாகப் போடப்பட்டுள்ள கல்லிலும் எழுத்துக்கள் உள்ளன. இக்கல்வெட்டுகளுள் இரண்டு பதினோராம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளன. இத்தனைக் கல்வெட்டுகள் இக்கோயிலில் இருந்தும் திரு. இல. தியாகராசன் இக்கோயிலில் சம்புவராயர் கல்வெட்டு தவிர வேறு கல்வெட்டுகளே இல்லையென்று தம் நூலில் எழுதியிருப்பது வியப்பளிக்கிறது. காலத்தால் முற்பட்ட கல்வெட்டுகளின்

இருப்பு இக்கோயிலை இராசநாராயண சம்புவராயருக்கு முற்பட்ட கோயிலாகக் காட்டுவது நினைவு கொள்ளத்தக்கது.

திரு. கூ. ரா. சீனிவாசன் மாமண்டூரில் மண்டூகநாதர் கோயிலென்ற பெயரில் ஒரு கோயில் இருப்பதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[69] இக்கோயிலின் வடக்குத் தாங்குதளத்திலிருந்து படியெடுக்கப்பட்டதாக முதலாம் இராசராச சோழரின் இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி பதினேழில் கல்வெட்டுத்துறை பதிப்பித்துள்ளது.[70] இத்தொகுதியில் இக்கோயில் செய்யாறு வட்டத்து மாமண்டூரில் இருப்பதாகத் தகவலுள்ளது. ஆனால் செய்யாறு வட்டத்திலுள்ள மாமண்டூரில் மண்டூகநாதர் கோயிலென்ற பெயரில் ஒரு கோயிலே இல்லையென்று ஊர் மக்களும், திருமாந்தீசுவரர் கோயில் சிவாச்சாரியார், இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் பட்டாச்சாரியார், மலைமேல் கோயில் பூசாரி எம். கிருஷ்ணன் ஆகியோரும் கூறியபோது இக் கட்டுரையாசிரியர்களுக்குப் பெருங்குழப்பம் ஏற்பட்டது. இக்கல்வெட்டு 1904இல் படியெடுக்கப்பட்டுள்ளதாகப் பதினேழாம் தொகுதிக் குறிப்பு கூறியதால் அவ்வாண்டுக் கல்வெட்டறிக்கை ஆராயப்பட்டது. 1905ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் 1904இல் படியெடுக்கப்பட்டதாக 612ஆம் எண்ணிட்டுக் குறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டில் ஆட்சியாண்டு இல்லை.[71] மேலும் இக்கல்வெட்டுள்ள கோயில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாமண்டூரில் இருப்பதாக அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளது.[72] 1903 மற்றும் 1904ஆம் ஆண்டுகளில் கல்வெட்டாய்வாளர் திரு. ஹுல்ஷ் மற்றும் திரு. வி. வெங்கையா ஆகியோர் அரசின் தலைமைச் செயலருக்கு அனுப்பியிருக்கும் அறிக்கைகளில் தம்முடைய அடுத்த பயணத்திட்ட அறிக்கைகளை இணைத்துள்ளனர். இவ்விரண்டு அறிக்கைகளிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாமுண்டூர் குறிப்பிடப்பட்டுள்ளது.[73] 1905ஆம் ஆண்டறிக்கையில் திரு. வெங்கோபராவ் பார்த்துப் படியெடுத்த இடங்களுள் ஒன்றாய்ச் செங்கற்பட்டு மாவட்ட மாமுண்டூரைத் திரு. வி. வெங்கையா குறிப்பிட்டுள்ளார்.[74] இந்த அறிக்கையில்தான் 1904ஆம் ஆண்டு படியெடுக்கப்பட்ட கல்வெட்டாக மண்டூகநாதர் கோயில் கல்வெட்டு வெளியாகியுள்ளது.

திரு. வி. வெங்கையா காலத்தில் திரு. வெங்கோபராவால் செங்கற்பட்டு மாவட்ட மாமுண்டூரிலிருக்கும் மண்டூகநாதர் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டதே முதலாம் இராசராசரின் மேற்கண்ட கல்வெட்டு.[75] இதைத்தான் 1905ஆம் ஆண்டறிக்கை 1904ஆம் ஆண்டில் படியெடுக்கப்பட்ட 612ஆம் எண் கல்வெட்டாக வெளியிட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி

192797
JL
V211 mN93

களில் இடம் பெற்றபோது இக்கல்வெட்டுள்ள மண்டுகநாதர் கோயில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாமுண்டூரில் இருப்பதாகக் குறிப்பிடுவதற்குப் பதிலாகத் தவறுதலாகச் செய்யாறு வட்ட மாமண்டூரில் இருப்பதாகக் குறிப்பிட்டுவிட்டார்கள். கல்வெட்டுத் தொகுதியை மட்டும் பார்த்த திரு. கூ. ரா. சீனிவாசன் இக்கோயில் செய்யாறு வட்ட மாமண்டூரில் இருப்பதாகவே கருதி அதைச் சரிபார்த்துக் கொள்ளாமல் தம் நூலில் குறிப்பிட்டுப் போனார். இதில் இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி கல்வெட்டு படியெடுத்த காலத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் (1905) இந்தக் கல்வெட்டின் ஆட்சியாண்டு கிடைக்கவில்லை என்று குறிப்பு காட்டியிருப்பதும் அக்கல்வெட்டின் பாடம் வெளியிடப்பட்ட தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் (1964) ஆட்சியாண்டு இருபத்தேழு என்று குறிப்பிடப்பட்டிருப்பதும்தான். 1905இல் கல்வெட்டைப் படியெடுத்தவர்களுக்குக் கிடைக்காத ஆட்சியாண்டு 1964இல் அப்படியைப் பார்த்துப் பாடமெழுதிப் பதிப்பித்தபோது எப்படிக் கிடைத்ததென்பது வியப்புக்குரிய அதிசயமாகும்.

குடைவரைகளின் காலம்

மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகளை ஆய்வு செய்த திரு. கூ. ரா. சீனிவாசன் கல்வெட்டுள்ள முதலிரண்டு குடைவரைகளை மகேந்திரவர்மர் காலத்தனவாகவும் பின்னிரண்டை மாமல்லர் காலத்தனவாகவும் வகைப்பாடு செய்துள்ளார். முதற் குடைவரை முதலாம் மகேந்திரவர்மரின் கல்வெட்டைப் பெற்றிருப்பதால் அதன் கால நிர்ணயம் பற்றி எவ்விதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இரண்டாம், மூன்றாம் குடைவரைகள் மல்லையிலும் பிற இடங்களிலும் காணப்படும் பிற்காலக் குடைவரைகள் போன்று கட்டட வளர்ச்சி நிலைகளின் எந்தவொரு பண்பையும் பெற்றிராமையின், இவற்றையும் தொடக்கக் கால முயற்சிகளாகக் கொள்ளுதலே பொருத்தமாகும். மகேந்திரரும் மாமல்லரும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தவர்களாதலால் மகேந்திரன் பாணி, மாமல்லன் பாணி என்று பிரித்துக் காண்பது இயலக்கூடியதல்ல. அதனால் மாமண்டூர், நரசமங்கலம் குடைவரைகளைப் பல்லவப் பேரரசுக் காலத்தின் தொடக்க முயற்சிகளாகக் கொள்வதே சால்புடையது. அவ்வகையில் இவையனைத்தும் முதலாம் மகேந்திரவர்மர் காலத்தில் தொடங்கப்பட்டவையெனக் கொண்டால் அது தவறாகாது.

ஏற்புக் கோடல்

இக்கட்டுரைக்கான கள ஆய்வுகள் மேற்கொண்டபோது பல்லாற்றானும் துணை நின்று உள்ளன்போடு உதவிய திரு. ச. வேலுசாமி,

பேரா. முனைவர் திருமதி. தமிழரசி வேலுசாமி குடும்பத்தார், பேரா. மா. ரா. அரசு, திருமதி. சுந்தரி அரசு குடும்பத்தார், காஞ்சிபுரம் சித்த மருத்துவ அறிஞர் மரு. சி. தங்கதுரை குடும்பத்தார், செங்கற்பட்டு வட்ட மாமண்டூர் மலைமேற் கோயில் பூசாரி திரு. எம். கிருஷ்ணன், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் குடைவரைக் காவலர் திரு. கே. வெங்கடேசன் குடும்பத்தார், ஊர்ப் பெரியவர் திரு. அர்ச்சுனன் குடும்பத்தார், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேரா. கோ. வேணிதேவி மற்றும் அவர் இல்லத்தார் ஆகியோர்க்கு இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சு நிறைந்த நன்றி என்றும் உரியது.

அடிக்குறிப்புகள்

1. திரு. கூ. ரா. சீனிவாசனும் திரு. மயிலை சீனி. வேங்கடசாமியும் தம் நூல்களில் இவ்வூரை நரசபாளையம் என்று குறித்துள்ளனர். K. R. Srinivasan, Cave - Temples of the Pallavas, Archaeological Survey of India, New Delhi, 1964, p. 54. மயிலை சீனி. வேங்கடசாமி, மகேந்திரவர்மன், கழக வெளியீடு, 1959, பக். 70.
2. SII vol. 22, Part I, ins. 262 - 264.
3. தி. இராசமாணிக்கம், தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1989, பக். 9. K. R. Srinivasan, Cave - Temples of the Pallavas, p. iii.
4. திரு. தி. இராசமாணிக்கம் ஏழு கருவறைகள் என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 9.
5. கீழ்ச்சதுரங்களின் நான்கு முகங்களிலும் தாமரைப் பதக்கங்கள் இருப்பதாக முதலில் கூறும் திரு. கூ. ரா. சீனிவாசன் அதே பத்தியில் ஒரு வரி தள்ளி மேற்கு முகம் தவிரப் பிற முகங்களில் மட்டுமே இப்பதக்கங்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறித் தமக்குத் தாமே முரண்படுகிறார். Cave - Temples of the Pallavas, p. 69.
6. Ibid., p. 70.
7. திரு. கூ. ரா. சீனிவாசன் இப்பகுதியை அர்த்த மண்டபம் என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். Ibid., p. 69.
8. SII vol. 4, ins. 136.
9. திரு. கூ. ரா. சீனிவாசனும், திரு. தி. இராசமாணிக்கமும் முப்பட்டைக் குமுதம் என்று குறிப்பிட்டுள்ளனர். Cave -

Temples of the Pallavas, p. 70; தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 12-13.

10. திரு. தி. இராசமாணிக்கம் தாங்குதளத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'வரி, வரிமானம், முப்பட்டைக் குமுதம் ஆகியவற்றைக் கொண்ட அதிட்டானம்' என்று எழுதுகிறார். வரி, வரிமானம் என்ற சொற்களுக்கு என்ன பொருள் என்று விளங்கவில்லை. அவர் சொல்லியிருக்கும் வரிசையைப் பார்த்தால் முப்பட்டைக் குமுதத்திற்குக் கீழே வரி, வரிமானம் என்று இரண்டு உறுப்பு களைக் குறிப்பது போலுள்ளது. ஆனால் குடைவரையில் குமுதத்திற்குக் கீழே ஜகதி மட்டுமே உள்ளது. திரு. இராச மாணிக்கம் குமுதத்திற்கு மேலுள்ள உறுப்புகளைத் தாங்கு தளத்திற்குள் சேர்த்துக் கொள்ளாமல் விட்டது ஏனென்று தெரிய வில்லை. இவர் குறிப்பிடுவது போல் குமுதமும் முப்பட்டையுடன் இல்லை. தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 12-13.

திரு. கூ. ரா. சீனிவாசன் பட்டிகைக்கு மேல் வரும் கம்பைப் பிரதி என்று குறிப்பிட்டுள்ளார். Cave - Temples of the Pallavas, p. 70.

இது சரியல்ல. பிரதி என்ற சொல் பிரதி வரியில் காட்டப்படும் யாளி முகங்களடங்கிய தொகுப்பைச் சுட்டவே பயன்படுத்தப்படுகிறது. மயமதம், முதல் பாகம், தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு, 1966, பக். 173.

11. திரு. கூ. ரா. சீனிவாசன் வாஜனத்தைக் குறிக்கவில்லை. Cave - Temples of the Pallavas, p. 70.

12. திரு. கூ. ரா. சீனிவாசன் இதை வலபி என்று குறிப்பிட்டுள் ளார். குடைவரைகளில் பொதுவாக வலபி என்னும் உறுப்பு வாஜனத்திற்கும் கபோதத்திற்கும் இடையில்தான் காட்டப்படு கிறது. வடிவமைப்பிலும் இதற்கும் வாஜனத்திற்கும் வேறு பாடுண்டு வாஜனம் கம்பு போல அமைய [சதுரப்பட்டி] வலபி வளைந்த பரப்புடன் அமையும். முதற் குடைவரையில் இதே உறுப்பை வாஜனம் என்று பெயரிட்டிருக்கும் திரு. கூ. ரா. சீனிவாசன் இந்தக் குடைவரையில் இதை வலபி என்பது பொருந்துவதாக இல்லை. அதனால்தான் அடுத்த பக்கத்தில் அவரே அது வழக்கமான வலபி போல் இல்லையென்று குறிப் பிட்டிருக்கிறார். Ibid., pp. 56-57 and 69.

13. SII. Vol. 4, ins. 137. இக்கல்வெட்டு வடபுறமாக உள்ள அரைத்தூணில் காணப்படுவதாகத் திரு. தி. இராசமாணிக்கம் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில் கள், பக். 11.

14. SII Vol. 4, ins. 138.

15. திரு. கூ. ரா. சீனிவாசன் இதைப் பிரதி என்று குறிப்பிட்டுள் ளார். Cave-Temples of the Pallavas, p. 57.

16. திரு. கூ. ரா. சீனிவாசன் வாஜனத்தைக் குறிக்கவில்லை. Ibid., p. 57.

17. திரு. கூ. ரா. சீனிவாசன் இது பற்றித் தகவலேதும் தரவில்லை. Ibid., pp. 57-58.

18. இக்குடைவரை 9.1.93 அன்று கள ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டது. இக்குடைவரையைப் பார்க்க விரும்புவோர் ஆர்க் காட்டிலிருந்து பாண் மலைக்கு வழி கேட்டுச் செல்வது சிறந்தது. விளாப்பாக்கம் வழியே பாண் மலைக்குச் செல்வது சுற்று என்ப தோடு, பாதையும் சரியில்லை.

19. திரு. தி. இராசமாணிக்கம் இவற்றை 'இரு தூண்கள் மற்றும் இரு அரைத்தூண்கள்' என்று குறித்திருப்பதும் திரு. கூ. ரா. சீனிவாசன் இவற்றை முழுத்தூண்களாகக் கருதியிருப்பதும் சரியல்ல. தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 10, Cave-Temples of the Pallavas, p. 120.

20. திரு.கூ.ரா.சீனிவாசன் இக்குடைவரையின் அமைப்பை மாமல்ல புரத்தில் உள்ள பஞ்சபாண்டவர் மண்டபத்தோடு ஒப்பிட்டுள் ளார். Cave-Temples of the Pallavas, p. 120. பஞ்ச பாண்டவர் மண்டபத்தில், அதன் பின்சுவரில் கருவறையின் இருபுறத்தேயும் உள்ள பகுதிகள் மட்டுமே குடையப்பட்டுள்ளன. மண்டபத்தின் தென், வட சுவர்களில் எந்த மாற்றமும் இல்லை. குடைவு முழுமையடைந்திருந்தால் மண்டபத்திற்குள் நுழை பவர்கள் கருவறையைச் சுற்றி வலம் வந்திருக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் கருவறைக்கு ஓர் உள் திருச்சுற்று கிடைத்திருக்கும். நரசமங்கலக் குடைவரையில் மண்டபத்தின் தென் சுவர் குடையப்பட்டுள்ளது. இச்சுவரில் இப்போதிருக் கும் இரண்டு ஆழமான கோட்டங்களும், குடைவு முடிவடைந் திருந்தால் மண்டபத்திற்கான இரு தென்முக வாயில்களாக மாறியிருக்கும். அந்நிலையில் குடைவரைக்குள் கிழக்கு முக மாக நுழைபவர்கள் தென்புறமாக வெளியேறி வெளிச்சுற்று வந்து வடபுறமாக உள் நுழைந்திருப்பார்கள்.

இரண்டு குடைவரைகளிலுமே நோக்கம் திருச்சுற்று அமைப்பதுதான் என்றாலும், அந்தச் சுற்றை அமைக்கக் கையாண்ட முறையும், அமைவிடமும் மாறுபட்டுள்ளன. அதனால்தான் நரசமங்கலக் குடைவரையின் தென்புற அகழ்வு தனித்துவம் பெறுகிறது.

21. திரு. கூ. ரா. சீனிவாசன் ஏழையுமே முழுத்தூண்களாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதே பத்தியின் ஒரு பகுதியில் வட கோடியில் இருப்பதை அரைத்தூண் என்றும் குறிப்பிடுகிறார். இதுபோன்ற முரண்பாடுகள் இவரது மாமண்டூர்க் கட்டுரையில் ஆங்காங்கே காணப்படுகின்றன. Cave-Temples of the Pallavas, p. 120.

22. இவற்றைக் கோட்டங்களென்று திரு. கூ. ரா. சீனிவாசனும் அவரை அடியொட்டி திரு. தி. இராசமாணிக்கமும் குறிப்பிட்டிருப்பது சரியல்ல. Cave-Temples of the Pallavas, pp. 120-121; தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 10.

23. திரு. கூ. ரா. சீனிவாசன் இவற்றைக் குறிக்கவில்லை. Cave-Temples of the Pallavas, pp. 118-122.

24. திரு. கூ. ரா. சீனிவாசன் உள்மண்டபக் கருவறைகளுக்குப் படிக்கட்டுகள் இல்லையென்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். Ibid., p. 121.

25. திரு. கூ. ரா. சீனிவாசன் இக்கம்பைக் குறிக்கவில்லை. Ibid., p. 121.

26. திரு. கூ. ரா. சீனிவாசன் அனைத்துப் படிகளுக்கும் பிடிச்சுவர் இருப்பதாகக் கூறியிருக்கிறார். Ibid., p. 121.

27. இக்குழிகள் குடைவரையின் அனைத்துக் கருவறைகளிலும் ஏறத்தாழப் பின்சுவர் நீளத்திற்கு வெட்டப்பட்டிருப்பதாகத் திரு. கூ. ரா. சீனிவாசன் குறித்திருக்கிறார். Ibid., p. 121.

28. திரு. தி. இராசமாணிக்கம் 'தூண்களும் அரைத்தூண்களும் எட்டுப் பட்டையாகவும், சதுரங்களாகவும் பகுக்கப்படவில்லை' என்று தவறாகக் குறித்துள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 10.

29. திரு. கூ. ரா. சீனிவாசன் முனிவர்கள் கருவறை நோக்கி நிற்பதாக எழுதியுள்ளார். Cave-Temples of the Pallavas, p. 58. அதே நூலில் படத்தொகுதியும் காண்க. Plate No. VI a and b.

30. திரு. தி. இராசமாணிக்கம் இரு சிற்பங்களுமே சமபங்க நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 11.

31. இருவருக்குமே முப்புரி நூல் வலக்கை மேலேறிச் செல்வதாகத் திரு. கூ. ரா. சீனிவாசன் சொல்கிறார். சிற்பங்களில் அப்படியில்லை. Cave-Temples of the Pallavas, p. 58.

32. Ibid., p. 58. திரு. தி. இராசமாணிக்கம் திரு. கூ. ரா. சீனிவாசனின் இக்கருத்தைத் தம் கருத்து போலக் கூறியுள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 11.

33. இவ்வாயிற்காப்போர் திரிபங்க நிலையில் நிற்பதாகத் திரு. தி. இராசமாணிக்கம் எழுதியிருப்பது சரியல்ல. மேற்படி., பக். 11.

34. திரு. தி. இராசமாணிக்கம் இவற்றைக் கடி முத்திரை என்று குறித்திருப்பது பொருந்தாது. மேற்படி., பக். 12. கடி முத்திரையில் கை இடுப்பில் அமரும். ஊரு முத்திரையில்தான் கை தொடையின் மேலமரும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை-25, 1978, பக். 40-41.

35. இக்காவலர்கள் சமபங்க நிலையில் இருப்பதாகத் திரு. தி. இராசமாணிக்கம் பிழையாகக் குறிப்பிட்டுள்ளார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 12.

36. இக்கைகள் வணக்கத்தைக் குறிப்பதாகத் திரு. தி. இராசமாணிக்கம் எழுதியிருப்பது சரியல்ல. வணக்கத்தைக் குறிக்கும் முத்திரை அஞ்சலியாகும். அம்முத்திரையில் இரு கைகளும் மார்புக்கு நேராகக் கூப்பிய நிலையில் காட்டப்படும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், பக். 42.

37. K. R. Srinivasan, Cave-Temples of the Pallavas, p. 70, அடிக்குறிப்பு காண்க. இக்கல்வெட்டைத் தமது கட்டுரையில் திரு. தி. இராசமாணிக்கம் குறிப்பிடவில்லை. தென்னகக் குடைவரைக் கோயில்கள், பக். 9-13.

38. SII vol. 4, ins. 136.

39. K. R. Srinivasan, Cave-Temples of the Pallavas, p. 70.

40. SII vol. 4, Plate III, facing p. 12.

41. T. V. Mahalingam, Kanchipuram in Early South Indian History, Asia Publishing House, Madras, 1968, p. 73. மயிலை சீனி. வேங்கடசாமி, மகேந்திவர்மன், பக். 71-72.

42. மயிலை சீனி. வேங்கடசாமி, மகேந்திரவர்மன், பக். 71-72.
43. ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1963, பக். 374.
44. மேற்படி., பக். 375.
45. T. V. Mahalingam, Kanchipuram in Early South Indian History, p. 73. திரு. டி. வி. மகாலிங்கம் தம் நூலில் இத் தகவலைத் தருமிடத்து அடிக்குறிப்பாகத் திரு. டி. என். இராமச் சந்திரனின் கட்டுரையொன்றைக் குறிப்பிடுகிறார். அக்கட்டுரை இவ்வாசிரியர்களுக்குப் பெருமுயற்சிக்குப் பிறகும் கிடைக்காமல் போனதால் ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லை.
T. N. Ramachandran, The Royal Artist Mahendravarman I, J. O. R. VII,pp. 235-37.
46. திரு. மயிலை சீனி. வேங்கடசாமி தட்சிண சித்திரமென்னும் பெயருள்ள தென்னிந்திய ஓவிய நூலுக்கு உரையெழுதியதாகக் குறிப்பிடுகிறார். மகேந்திரவர்மன், பக். 71-72.
47. மணிமேகலை, சாமிநாதையர் உரை, 1931, காதை 2, வரி 30-31, பக். 22.
48. சிலப்பதிகாரம், சாமிநாதையர் உரை, தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1985, அடியார்க்கு நல்லார் உரைவிளக்கப்பகுதி, பக். 230.
49. T. V. Mahalingam, Kanchipuram in Early South Indian History, p. 72.
50. Ibid., p. 74.
51. Ibid., p. 75. திரு. மயிலை சீனி. வேங்கடசாமி பகவதஜ் ஜுகத்தை எழுதியவர் மகேந்திரவர்மரல்லர் என்னும் கருத் துடையவர். மகேந்திரவர்மன், பக். 132. அடிக்குறிப்பு காண்க.
52. மேற்படி., பக். 133.
53. இ. ஜாண் ஆசீர்வாதம், மத்தவிலாச அங்கதம், கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடு, சென்னை, 1981.
54. K. R. Srinivasan, Cave - Temples of the Pallavas, p. 71.
55. T. V. Mahalingam, Kanchipuram in Early South Indian History, p. 71.
56. SII Vol. 4, ins. 138.
57. பதிப்பிக்கப்பட்டுள்ள கல்வெட்டுப் பாடத்தில் நாட்டடியன் என்று பிழையாகத் தரப்பட்டுள்ளது. Ibid., ins. 138.

58. Ibid., ins. 137.

59. தீயங்குடையான் என்றுதான் கல்வெட்டில் உள்ளது. இது தீபங்குடையான் என்றிருக்க வேண்டும். குறில், நெடில் மாற்றமும் புள்ளி வைப்பதும் இடமறிந்து நாம் செய்ய வேண்டியவை. பகரம் மட்டுமே விட்டுப் போயுள்ளது. தீய்பங்குடையான் என்றால் தீபங்குடியைச் சேர்ந்தவன் என்று பொருள். நரசமங்கலம் மலைமேல் சிவன் கோயிலில் இருந்து இக்கட்டுரையாசிரியர்களால் படியெடுக்கப்பட்ட சுந்தர பாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில் இரண்டு முறை இவ்வூர்ப் பெயர் எடுத்தாளப்பட்டுள்ளது. i) தீய்பங்குடையான் ii) தீய்பங்குடையான் பெரிய பெருமாள் அழகிய வரதன். இவற்றை இவ்விதழின் விட்டுப்போன தொடர்ச்சிகள் பகுதியில் காண்க.

60. நரசமங்கலத்து ஊர்ப் பெரியவர்கள் பலரிடம் நேர்முகம் கண்டும் இக்கோயிலின் பெயர் கிடைக்கவில்லை. அனைவருமே இதைச் சிவன் கோயிலென்றுதான் அழைக்கிறார்கள். கோயில் பூசாரி திரு. எம். கிருஷ்ணன், ஊர்ப் பெரியவர் திரு. அருச்சுனன் இருவருமே தங்கள் நினைவறிந்து இக்கோயில் சிவன் கோயிலென்றுதான் அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இக்கோயிலில் இருந்து இக்கட்டுரையாசிரியர்கள் படியெடுத்த கல்வெட்டுகளிலும் இக்கோயிலின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

61. SII vol. 22, Part 1, ins. 260.

62. ARE 171 a of 1939-40.

63. இவ்விரண்டு கல்வெட்டுகளுள் ஊர் விற்பனை பற்றிப் பேசும் கல்வெட்டு நிலப்பகுதிகஷளக் குறிக்கும்போது அவற்றிற்கு உரியனவாகச் சில கோயில்களின் பெயர்களைப் பட்டியலிடுகிறது.

1. உருத்திரவாலீசுவரம்
2. தென் திருவேங்கடம்
3. திருத்தவக்குன்றம்

இம்மூன்றனுள் உருத்திரவாலீசுவரம் மாமண்டூர்ப் பகுதிக்குள் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாம் குடைவரையாகும். இதை அக்குடைவரையில் உள்ள பரகேசரிவர்மரின் கல்வெட்டும் முதலாம் இராசராசரின் கல்வெட்டும் நிறுவுகின்றன.

தென்திருவேங்கடம் பெருமாள் கோயிலைக் குறிக்கிறது. இங்குள்ள குடைவரைகளுள் முதலாம் குடைவரையில்தான் ஒரே

ஒரு கருவறை உள்ளது. கருவறையிலுள்ள திருமேனி பெறும் பள்ளம் சுவரையொட்டியிருப்பதும், இங்குள்ள மகேந்திரர் கல்வெட்டின் இறுதி வரிகள் மறைமுகமாகப் பெருமாளைக் குறிப்பதாகத் திரு. கூ. ரா. சீனிவாசன் கூறியிருப்பதும் நோக்க இக்குடைவரையே தென் திருவேங்கடமென்று அழைக்கப்பட்ட தாகக் கருதலாம்.

திருத்தவக்குன்றம் சைவ, வைணவச் சார்பின்றி அமைந்திருக் கும் பெயராகும். முதலிரண்டு குடைவரைகளும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருப்பதால் இப்பெயர் மூன்றாம் குடைவரையையோ அல்லது மலை மேலுள்ள சிவன் கோயி லையோ குறிப்பதாகலாம்.

கோயில்கள் தவிர சில தெய்வங்களின் பெயர்களையும் இக்கல் வெட்டு சுட்டுகிறது.

1. துர்க்கை
2. படாரி
3. கெத்தவாலப் பிள்ளையார்

இம்மூன்று தெய்வங்களும் குடைவரைகளிலேயே இடம் பெற் றிருந்தனவா அல்லது ஊருக்குள் தனித் திருமுன்களைக் கொண் டிருந்தனவா என்பதை அறியக்கூடவில்லை.

64. திரு. கூ.ரா சீனிவாசன் கோயிலின் பெயரைத் தவறாகக் குறிப் பிட்டிருப்பதுடன் இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளாக இரண்டைக் குறிப்பிடுகிறார். ARE 420 of 1923 and ARE 260 of 1906. அவற்றுள்ARE 420 of 1923 திருமனந்தீசுவரர் கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்டது. இக் கோயில் காஞ்சிபுரம் வந்தவாசிப் பெருவழியில் மாமண்டூருக்குள் நுழைந்ததும் சாலையின் வலப்புறத்தே உள்ளது. ARE 260 of 1906, நரசமங்கலம் மலைமேல் கோயிலின் தெற்குச் சுவரிலி ருந்து படியெடுக்கப்பட்டது. இவ்விரண்டு கல்வெட்டுகளுமே இரு வேறு கோயில்களிலிருந்து இரு வேறுபட்ட காலங்களில் படி யெடுக்கப்பட்டிருந்தும், அந்தத் தகவல்கள் கல்வெட்டறிக்கை களில் தெளிவாகத் தரப்பட்டிருந்தும், திரு. கூ. ரா. சீனிவாசன் இரண்டையுமே திருமனந்தீசுவரர் கோயிற் கல்வெட்டுகளாய்க் கொண்டமை வியப்பளிக்கிறது. Cave-Temples of the Pallavas, p. 120.

65. இக்கல்வெட்டு 29.5.94 அன்று படித்துப் படியெடுக்கப்பட்டது. கல்வெட்டில் இறைவன் திருமாந்தீசுரமுடைய நாயனார் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் இக்கல்வெட்டின் சுருக்கத்தை வெளியிட்டிருக்கும் கல்வெட்டறிக்கை (420 of 1923) இறைவன்

பெயரைத் திருமனந்தீசுரமுடைய நாயனார் என்று பிழையாகக் குறிப்பிட்டுள்ளது.

66. கோ, தங்கவேலு, இல. தியாகராசன், சம்புவரையர் வரலாறு, கோபால் நாராயணன் நினைவு கல்வி அறக்கட்டளை வெளியீடு, சென்னை-600 080, பக். 188, 409-410.

67. மேற்படி., பக். 188.

68. 29.5.94, 10.7.94, 7.8.94 ஆகிய மூன்று நாட்களும் இக் கோயிலில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இக்கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. முதலிரண்டும் துணுக்குக் கல்வெட்டுகள். இவை திருப்பணியின்போது இழக்கப்பட்ட காலத்தாற் முற்பட்ட கல்வெட்டுகளின் சிதறல்களாகலாம்.

புதிய கல்வெட்டுகள்

1. இடம்: மையக் கோயில் மகாமண்டப நுழைவாயிலின் மேல் நிலை. கல்வெட்டு தலைகீழாக உள்ளது.

காலம்: கி. பி பதினோராம் நூற்றாண்டு.

1 செவ்வை பள்ளிகள் பட்டிக்கு கிழக்கு

2. இடம்: மையக் கோயில் உள் மண்டபத் தெற்குக் குமுதம்.

காலம்: கி பி. பதினோராம் நூற்றாண்டு.

1 மும் இவூர் த
2 தடி நாலும்
3 தந் . வைத்

3. இடம்: மேலது, வடக்குக் குமுதம்.

காலம்: கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 ப[ர*]ல வாக்கத்து
2 க் கவராவி திறவாமல
3 ந் . . . .
4 ஸத₃ா
5 ஸேவை

4. இடம்: அம்மன் கோயில் கருவறை, மேற்குக் குமுதம். தொடர்ச்சி விடுபட்டும் எழுத்துக்கள் பொரிந்தும் முற்றுப் பெறாமலும் உள்ளது.

காலம்: பதினேழாம் நூற்றாண்டு.

1 [ஸ்வ*]ஸ்தி[ஸ்ரீ*] சார்வரி வருஷம் புரட்டாதி மீ 3 உ ஹஸ்த நக்ஷத்ரமும் — — — லைய புண்ணிய காலத்திலே தலயாரி மல்லராகுத்தர் காவல்ப் பெற்று . . . .

2 . . . . பற்றி மாகேசுர மடம் நயினார் திருவருள் — — — ள்பட ஆசந்ராக்கமாக நடக்கவும் இதுக்கு அஹிதம் பண்ணிந [வர்*] கெங்கக் கரயிலே[ய் ப்ரஹ]

இக்கள ஆய்வுகளின்போது உடனிருந்து உதவிய சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேரா. கோ. வேணிதேவி, அதே துறை சார்ந்த தேர்வுநிலை விரிவுரையாளர் பேரா. சீ. கீதா, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை யின் தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் திரு. அ. அப்துல் மஜீது, கோயில் சிவாச்சாரியார் திரு. வை. சுப்ரமணிய குருக் கள் மற்றும் அவர் புதல்வர்கள் திரு. பரமேசுவரன், திரு. ராஜேஷ் ஆகியோரின் அன்பான உதவிகட்கு இக்கட்டுரை யாசிரியர்களின் நன்றி உரியது.

69. K. R. Srinivasan, Cave-Temples of the Pallavas, p. 54.
70. SII vol. 17, ins. 664.
71. ARE 612 of 1904.
72. ARE 1905, Letter from Mr. V. Venkayya to the Chief Secretary to Government, p. 6.
73. ARE 1903, Letter from E. Hultzsch to the Chief Secretary to Government, p. 6. ARE 1904, Letter from Mr. V. Venkayya to the Chief Secretary to Government, p. 16.
74. ARE 1905, Letter from Mr. V. Venkayya to the Chief Secretary to Government, p. 4, para 6 and p. 6, para 9.
75. இப்போது இக்கல்வெட்டு மாமண்டூர் தென்பாதியிலுள்ள மண்டூக நாதரென்னும் பிச்சீசுவரர் திருக்கோயிலில் காணுமாறு இல்லை. கல்வெட்டு படியெடுத்த காலத்திற்குப் பின்னர் இருமுறை திருப் பணிக்கு ஆளான இக்கோயிலில் அடி முதல் முடி வரை கட்டடம் பிரித்து வேலை செய்யப்பட்டதாக ஊர்ப் பெரியவர்கள் திரு. சிவஞானம் (81) திரு. சிவசாமி (84) ஆகியோரும் கோயில் சிவாச்சாரியார் மற்றும் அறங்காவலரும் கூறுகின்றனர். திருப் பணியின்போது கல்வெட்டுள்ள கல் மாற்றப்பட்டிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. இதுபோல் பல கோயில்களில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகளைத் திருப்பணியாளர்களிடம் இந்த நாடு பறிகொடுத்திருக்கிறது. 4·8·94 அன்று இவ்வூரில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது மண்டூகநாதர் கோயில் தூண்களிலிருந்து சில புதிய கல்வெட்டுகளும், அருகாமையி லுள்ள மாரியம்மன் கோயில் கற்பலகையிலிருந்து ஒரு புதிய கல்வெட்டும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை இவ்விதழின் புதிய கல்வெட்டுகள் பகுதியில் பார்க்கலாம்.

5. ஆய்வுத் தொடர்கள்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு

அர. அகிலா, ஸ்தபதி வே. இராமன், இரா. கலைக்கோவன்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு குறித்த முழுமையான நூல் எதுவும் தமிழில் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியிட்டுள்ள தமிழகக் கோயிற் கலைகள் நூலில் கட்டடக்கலைச் செய்திகள் சிறு சிறு கட்டுரைகளாக ஐந்து தலைப்புகளின் கீழ் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் ஆர். வெங்கட்ராமனின் இந்தியக் கோவில் கட்டிடக் கலை வரலாறு தமிழகத்துக் குடைவரைக் கோயில்கள், தமிழகத்துக் கட்டுமானக் கோயில்கள், கோயில் இலக்கணம், கோயில் நிர்மாண நியதிகளும் அளவைகளும் என்னும் நான்கு தலைப்புகளின் கீழ்க் கலைச் செய்திகள் சிலவற்றைப் பகிர்ந்துகொள்கின்றன. திரு. பி. ஆர். சீனிவாசனின் கோயிற்கலையும் சிற்பங்களும் என்னும் நூல் இந்திய அளவிலான கோயிற் கட்டடக்கலை பற்றிப் பேசுகிறது. இவை தவிர கோயில்களைப் பற்றிப் பல தொகுப்பு நூல்கள் தமிழில் வெளியாகியிருப்பினும் அவற்றுள் கட்டடக்கலைச் செய்திகளை அதிகமாகக் காண முடியவில்லை. தனிப்பட்ட கோயில்களைப் பற்றி விரிவாக எழுதியுள்ளவர்களுள் சிலர் அந்தந்தக் கோயில்களின் கட்டடக்கலை நுணுக்கங்களை ஆராய முயன்றுள்ளனர்.

ஆங்கிலத்தில் இந்தியக் கோயிற் கட்டடக்கலை, தென்னிந்தியக் கோயிற் கட்டடக்கலை, தமிழகக் கோயிற் கட்டடக்கலை பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன சில.

1. A History of Indian and Eastern Architecture - James Fergusson
2. Pallava Architecture — A.H. Longhurst
3. Early Chola Architecture and Sculpture — Douglas Barret
4. Essays in Early Indian Architecture — Ananda K. Coomaraswamy
5. Art and Architecture of Indian Temples — S. K. Ramachandra Rao
6. Introduction to the Study of Temple Art — Suresh B. Pillai
7. Encyclopaedia of Indian Temple Architecture — Various Scholars

8. Indian Architecture — Percy Brown
9. Cave - Temples of the Pallavas — K. R. Srinivasan
10. South Indian Temples — ,,
11. Four Chola Temples — S. R. Balasubramanyam
12. Early Chola Art — ,,
13. Early Chola Temples — ,,
14. Middle Chola Temples — ,,
15. Later Chola Temples — ,,

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ள மய மதம், காசியபம் போன்ற நூல்கள் கோயிலமைப்பு பற்றிய இலக்கணங் களைப் பகிர்ந்து கொள்கின்றன.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை பற்றியும் அதன் வரலாறு குறித்தும் தெரிந்துகொள்ள விரும்புவோர்க்கு விளங்குமாறு எளிமை யாகவும் முழுமையாகவும் தகுதி சான்றதாகவும் கால நிரலொட்டியும் தமிழில் ஒரு நூல் வெளிவருதல் இன்றைய இன்றியமையாத் தேவை யாகும். அப்பணியை நிறைவாகச் செய்ய வரலாற்றின் நிர்வாகக் குழு முடிவெடுத்ததன் பலனே இத்தொடர்.

தமிழர்தம் வரலாறு சிந்துவெளியிலிருந்து தொடங்குவதாக இன்றைய வரலாற்றறிஞர்கள் உறுதியாகக் கருதுகிறார்கள். அந்த நோக்கையொட்டித் தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாற்றுத் தொடரும் சிந்துவெளியிலிருந்து தொடங்குகிறது.

சிந்துவெளிக் காலம்

சிந்துவெளி நாகரிகச் சிதைவுகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு முத்திரைகள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயம் குறித்த செய்திகளைத் தருவதாகப் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். லிங்க வணக்கம், பசுபதி வணக்கம், மர வழிபாடு போன்றவை சிந்து வெளிப் பழமையன என்ற கருத்து வேரூன்றி வருகிறது. இறைவடி வங்களாகக் கொள்ளத்தக்க உருவங்கள் பொறித்த முத்திரைகள் கிடைத் திருக்கும் சிந்துவெளியில் உறுதியாகச் சுட்டக்கூடிய அளவிலான கோயிற் கட்டடச் சிதைவுகள் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. வழிபாடு இருந்துள்ள நிலையில், அந்த வழிபாட்டிற்கான இடங்களும் இருந்திருக்கவேண்டும். தரமான வீடுகளையும் களஞ்சியங்களையும் செய்குளங்களையும் கட்டி வாழ்ந்த சிந்துவெளி நாகரிகத்தினர் தாம் வழிபட்ட தெய்வங்களை இருத்தி வணங்கத் தனிக் கட்டுமானங்களை எழுப்பாமலா இருந்திருப்பார்கள்? கோயிற் கட்டுமானங்கள் என்று

உறுதியாகச் சொல்லக்கூடிய சிதைவுகள் கிடைக்கவில்லையென்றா லும் கிடைத்துள்ள கட்டட எச்சங்களில் சில, வழிபாட்டில்லங்களான கோயில்களின் எஞ்சிய பகுதிகளாக இருக்கக்கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இங்குக் கிடைத்துள்ள கட்டடச் சிதைவுகளின் சுவர்கள் சுட்ட செங்கல்லால் கட்டப்பட்டிருப்பதாக மா. இராசமாணிக்கனார் குறிப்பிடு கிறார். சுவர்களின் மேற்பூச்சாக உமி கலந்த களிமண் சாந்து பயன்படுத்தப்பட்டது. சுவர்களின் மேல்நிலைகளில் அமைக்கப்பட்ட துளைகளில் மர உத்திரங்களை நுழைத்து, அவற்றின் மீது குறுக்கும் நெடுக்குமாய்ச் சட்டங்களிட்டனர். இச்சட்டப் பந்தலின் மீது நாணற் பாய் பரப்பி அதன்மீது களிமண் சாந்தைக் கனமாய்ப் பூசிக் கூரை யமைத்தனர். வெளிச் சுவர்களின் கனம் மூன்றரை அடி முதல் ஆறு அடிவரை இருந்ததாக அளவுப் பட்டியல்கள் காட்டுகின்றன. ஒருதள இருதளக் கட்டுமானங்கள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் சில அகன்ற முற்றங்களைக் கொண்டிருந்ததாகவும் குறிப்பு கிடைக்கிறது.

இத்தகவல்கள் அனைத்தையும் ஒருசேர இணைத்துப் பார்க்கையில் சில உண்மைகள் தெளிவாகின்றன.

1. சிந்துவெளிக் காலத்தில் கோயில்கள் இருந்தன.
2. அக்கட்டுமானங்கள் சுட்ட செங்கல்லால் கட்டப்பட்டுக் களிமண் பூச்சிடப் பெற்றன.
3. மேல்நிலையில் மர உத்திரமும் சட்டங்களும் பெற்றுக் கூரை யாக நாணற்புல் பரப்பும் அதையிருத்தக் களிமண் சாந்தும் கொண்டன.

தொல்காப்பியக் காலம்

சிந்துவெளியை அடுத்த வரலாற்றுத் தொடராகத் தொல் காப்பியமே கிடைக்கிறது. இடையில் மிக நீண்ட இடைவெளி.

நிலத் தெய்வங்களாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நான்கு இறைப் பெயர்களைத் தரும் தொல்காப்பியப் பொரு ளதிகாரம் கடவுள், தெய்வம் என்னும் சொற்களைச் சில நூற்பாக் களில் கொண்டுள்ளது.

> 'ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்'
> 'கிழவற் சுட்டிய தெய்வக் கடத்தினும்'
> 'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய'

போன்ற நூற்பாக்களும் கொற்றவை நிலையும் தமிழகத்தில் தொல் காப்பியக் காலத்தே கோயில்கள் இருந்தமையைச் சுட்டப் போதுமான சான்றுகளாகும்.

'வழிபடு தெய்வம் நின்புறம் காப்ப'

என்ற நூற்பா தெய்வ வழிபாட்டின் சிறப்பையும் அதில் மக்களுக்கிருந்த நம்பிக்கையையும் தெளிவாகச் சுட்டுகிறது. கந்தழி, கொடிநிலை என்பன பின்னால் சங்க இலக்கியங்கள் பேசப்போகும் செய்திகளுக்கு முன்னுரையாகின்றன.

கோயிற் கட்டடங்களின் அமைப்பு பற்றித் தொல்காப்பியம் யாண்டும் குறிப்பிடவில்லையாயினும், நடுகல் தொடர்பான நிகழ்வு களைச் சுட்டும் நூற்பா பெரும்படையைக் காட்டுவதும் உழிஞை, அரண்களின் வலிமை விரிப்பதும் அக்காலக் கட்டடக்கலைக் கூறுகள் பற்றி நாம் அறியக் காரணமாகின்றன. பின்னால் வரும் சங்க இலக்கியப் பாடல்கள் தரும் சான்றுகள் தொல்காப்பியர் காலத்துக் கட்டடங்களைப் பற்றிய ஊகத்திற்கு இடமளிக்கின்றன.

சங்க காலம்

தமிழக வரலாற்றின் தொடக்கக் காலச் செய்திகளை எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் அள்ளித் தருகின்றன. இந்த இலக்கியங் களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் பல நேரங்களில் நம்மை வியக்க வைக்கின்றன. அறிவியலும் தொழில் நுட்பமும் மிக முன்னேறி யிருக்கும் இந்தக் காலத்தில் வாழும் நம்மைவிடப் பல்லாற்றானும் சிறக்க வாழ்ந்த அப்பெருமக்கள் பல நேரங்களில் நமக்கு வழிகாட்டி களாகவே அமைந்துவிடுகின்றனர்.

கி.மு. 300இல் இருந்து கி.பி. 250 வரையிலான காலகட்டத்தைச் சங்ககாலம் என்று பெரும்பான்மையான தமிழ் மற்றும் வரலாற்ற றிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இந்த 550 ஆண்டுகளில் வாழ்ந்த தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் பற்றிப் பல நூல்கள் வந்துள்ளன. அவற்றினும் இடம் பெறாத பல அரிய தகவல்களை இலக்கியங்கள் இன்னமும் தம் வரிகளுக்குள் புதைத்து வைத்திருக்கின்றன. ஒவ்வொரு சொல்லையும் நுட்பமாக நோக்கித் தரவு கொள்ளுமளவு சங்க வரிகள் செறிவானவை; ஆழமானவை.

பத்துப்பாட்டுத் தரவுகள்

ஆற்றுப்படைகள் ஐந்தும் நிலஞ்சார்ந்தன மூன்றும் மற்றன இரண்டு மெனப் பத்துப்பாட்டு நூல்கள் பத்தாகும். இவற்றுள் பெரும்பாணாற்றுப்

படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நூல்கள் அரிய பல கட்டடக்கலைத் தகவல்களைக் கொண்டுள்ளன. இத்தகவல்களுள் சில முன்பே அறிஞர் பெருமக்களால் பல்வேறு நூல்களில் எடுத்தெழுதப்பட்டவை.

நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றம், முப்பது வரிகளுக்கு மேல் வண்ணிக்கப்படும் அரண்மனைக் கட்டடம், வானுற உயர்ந்த மேல்நிலை மருங்கில் இளவேனிற் காலத்தில் இனிதுறங்கத் தென்றல் தரும் நேர்வாய்ச் சாளரம், மகரம் போன்று வடிவமைக்கப்பட்ட நீர்ப்பத்தல், வெள்ளியன்ன சுதை பூசப்பட்ட சுவர்கள், திண்ணிய தூண்கள் எனக் கட்டடச் சிறப்புகள் பேசும் நெடுநல்வாடை, அக்காலக் கட்டுமானப் பொறியியல் அறிஞர்களை நூலறி புலவர்களாய்ப் போற்றுகிறது. அவர்கள் நுண்ணிதின் கயிறிட்டுக் கணித அறிவு பிசகாமல் திசைகள் கண்டு, தெய்வம் தொழுது, கொள்வார்க்கேற்ப கட்டடம் கட்டிய திறன் பாராட்டற்குரியது.

செம்பால் செய்தது போன்ற உறுதியுடன் செவ்வண்ணம் பூசப்பெற்று ஓவியம் தீட்டப்பெற்ற தூண்களையும் பருந்துகள், பறத்தல் களைப்பு நீங்க இருந்து மகிழுமாறு குன்றென உயர்ந்த தொழில் மாண்புடைய நல்ல பல இல்லங்களையும் விண்ணுற ஓங்கிய பல்படை கொண்ட நெடிய மதில்களையும் நிறை நிலை மாடத்து அரமியங்களையும் மலைபுரை மாடங்களையும் மதுரைக்காஞ்சி சுட்டுகிறது,

பல்வேறு செயல்கள் சுட்டும் ஓவியங்கள் வரையப்பெற்ற வெள்ளிய சுவர்களையும் முனிவர்கள் பலராய் வாழ்ந்து வேள்விகள் இயற்றிய தவப்பள்ளிகளையும் ஒளி நிறைந்த சுவர்கள் சூழ்ந்த நல்ல இல்லத்தின் உயர்ந்த திண்ணைகளையும் கொடுங்கால், நெடுங்கால் மாடங்களையும் சிறியதும் பெரியதுமான வாயில்கள், பல கட்டுகள், நீண்ட இடைகழிகள் முகில் தவழும் மேன்மாடங்கள், காற்று நுழையும் சாளரங்கள் என அமைக்கப்பெற்ற வீடுகளையும் பட்டினப்பாலை படம்பிடிக்கிறது.

பெரும்பாணாற்றுப்படை குரம்பைகளையும் ஊகம்புல் வேய்ந்த மதில்களையும் பல்வேறு மரங்களாலான திரள்கால் பந்தல்களையும் வண்டி உருளைகள், கலப்பைகள் சாத்தப் பெற்ற நெடுஞ்சுவர்களையும் பைஞ்சேறு மெழுகிய வேதவிற்பன்னர் வீடுகளையும் தட்டோடு இட்டுச் சாந்து பூசிய மாடங்களையும் சுடுமண் ஓங்கிய நெடுநகர் மதில்களையும் சுட்டிக் காட்டி எளிய, பெரிய இல்லங்களின் கட்டுமானம் பேசுகிறது. எளியவர் குடில்கள் பற்றிய பெரும்பாணாற்றுப்படைத் தரவுகள் தனிக் கட்டுரையாக்கத்தக்கன.

பத்துப்பாட்டிலக்கியங்கள் காடுறைக் கடவுள்கள், மாயோன், சேயோன், மழுவாள் நெடியோன், நவிரமலை இருக்கும் காரியுண்டிக் கடவுள், நான்முகன், இந்திரன், உமை, வள்ளி, மாமோட்டுத் துணங் கையம் செல்வி ஆகியோர் பற்றியும் கடவுள் கணங்கள் பற்றியும் கடவு ளர்க்குச் செலுத்தவேண்டிய கடன்கள், வழிபடு முறைகள் பற்றியும் தெளிவான பல தகவல்களைத் தருகின்றன. திருமுருகாற்றுப்படை முருகன் விளையாடுமிடங்களாகக் குன்றுகளையும் உறையுமிடங்களா கப் பழமுதிர்சோலை, ஆவினன்குடி, திருச்சீரலைவாய், திருவேரகம் ஆகியவற்றையும் மதுரைக்கு மேற்கிலுள்ள குன்றாய்ப் பெயர் சுட்டாது பரங்குன்றத்தையும் பட்டியலிடுகிறது. முருகன் திருமேனி விளக்கம், முருகன் பிறப்பு, அவர் உறவுகள், முருகன் வழிபடப்படும் முறை, வழி படுவோர் யார் யார் என்பன போன்ற பல செய்திகள் கூறும் இவ்விலக் கியம் முருகன் இருந்தகோயில் கட்டுமானங்களைப்பற்றி ஏதும் கூற வில்லை.

'நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி', என்னும் வரியால் மலைக்கோயிலொன்றையும் 'முருகாற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்' என்ற வரியால் முருகன் வரவழைக்கப்பட்ட இடம் கோயிலான தையும் சுட்டிக் காட்டும் முருகாற்றுப்படை, முருகிருக்கும் இடங்களாக வெறிக்களம், காடு, சோலை, ஆற்றிடைக் குறை (துருத்தி), ஆறு, குளம், ஊர்கள், சதுக்கம், சந்தி, பூத்த கடம்பு, மன்றம், பொதியில், கந்து என்பனவற்றை வரிசைப்படுத்துகிறது. இன்று பிள்ளையார் இருப்பது போலச் சங்ககாலத்தில் பார்வைபடும் இடமெல்லாம் முருகன் இடம் பெற்றிருந்தார் போலும். 'நாற்பெருந் தெய்வத்து நன்னகர்' என்ற வரி சிவன், திருமால், நான்முகன், இந்திரனுக்கிருந்த கோயில் களைச் சுட்டுகிறது.

முப்புரம் எரித்தது, ஆல் கீழ் அமர்ந்தது, நஞ்சுண்டது, ஐம்பூதங் களால் ஆனது, வெள்ளேறு ஊர்வது, உமையைத் தோளில் கொண் டது போன்ற சிவன் தொடர்பான புராணச் செய்திகளும் சங்கு, சக்கரம், மற்றும் பறவைக் கொடியுடன் விளங்குதல், உந்தித் தாமரையில் நான்முகனைப் பயந்தது, நிலமளந்தது, பாம்பணையில் பள்ளி கொண் டது, அரக்கர்களைக் கொன்றது, திருவோணத்தில் பிறந்தது போன்ற திருமால் தொடர்பான தரவுகளும் கிரௌஞ்ச வதம், சூரபத்மனைக் கொன்றமை, வள்ளியை மணந்தமை, சிவபெருமானுக்கும் உமைக்கும் மகனானமை போன்ற செவ்வேள் பற்றிய தகவல்களும் நூறு வேள்வி முடித்து, ஆயிரம் கண்கள் பெற்று, நான்கு கொம்புகள் கொண்ட யானையை ஊர்தியாகப் பெற்ற இந்திரன் பற்றிய குறிப்புகளும் பத்துப் பாட்டிலக்கியங்களிலிருந்து கிடைக்கின்றன. திருமுருகாற்றுப்படை காலத்தில் ஐம்பெருந் தெய்வங்களாக முருகன், சிவன், திருமால், நான்முகன், இந்திரன் கொள்ளப்பட்டதை உணரமுடிகின்றது.

தெய்வங்கள், அவை சார்ந்த தொன்மங்கள், இறை வாழும் இடங்கள், கோயில்கள், வழிபாட்டு முறைகள் எனப் பல பேசும் இவ்விலக்கியங்கள் கோயிற் கட்டுமானம் பற்றி மிகச் சில தரவுகளையே தருகின்றன.

சிறப்புக்குரிய கடவுள் இருத்தப்பட்ட திருக்கோயில் வாயில் மலர்த் தொங்கல்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தது. கோயில் கொடிமரத்தில் விழா நாளன்று ஏற்றப்பட்டிருந்த கொடி பலரால் தொழுது வணங்கப் பட்டது. அந்திப்போதில் திருக்கோயில்களில் நந்தா விளக்கேற்றும் திருப்பணி மேற்கொண்ட கொண்டி மகளிர் நன்னீர்த் தூய்மை பெற்றே அப்பணியைச் செய்யவேண்டியிருந்தமையின், குடிநீருக்கென்று ஒதுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட தூயநீர்க் குளத்தில் மூழ்கிப் பின்னரே கோயில்களில் விளக்கேற்றினர். மெழுகி, மலரிடப்பட்டுப் பலரும் வந்து தொழுமிடமாக விளங்கிய இக்கோயில்கள் பொதியில் என்றழைக்கப் பட்ட இடங்களில் இருந்தன. இப்பொதியில்கள் புதியவர்கள் வந்து தங்குமிடமாகவும் அமைந்தன. கோயில் வளாகத்தில் இருந்த இறைத் திருமேனி கந்து எனப்பட்டது. இதை நடப்பட்ட மரவுருவாய்க் கொள்ளலாம். நடுதறி என்பர் அறிஞர். இக்கோயில்களின் தூண்கள் பருத்த, நெடிய தூண்களாய் இருந்ததாகப் பாடல் வரிகள் பேசுகின்றன.

நன்னனின் நாடு செல்லும் திசையில், ஆற்று வழியொன்றில் உச்சியில் பூவேலைப்பாடமைந்த, காலத்தால் பழமையான, மதிலொன்றால் சூழப்பெற்ற திருக்கோயில் இருந்ததைப் பட்டினப்பாலை குறிக்கிறது. மதுரைக்காஞ்சி குன்றைக் குடைந்தது போன்ற திருமடத்தையும் பூவும் புகையும் கொண்டு பேரிளம் பெண்டிர் சேர்ந்த கடவுட் பள்ளியையும் காட்டுகிறது.

இத்தகவல்களை நுணுகி ஆராய்கையில் சங்க காலத்தில் இறைக் கோயில்கள் செங்கல், மரம் கொண்டு கட்டப்பெற்றிருந்ததையும், மேற்பூச்சாகச் சுதை கொண்டிருந்ததையும் உணர முடிகிறது. பத்துப்பாட்டிலக்கியங்கள் மன்னர் வாழ் இடங்களைக் கோயில்கள் என்றும் இறைத்திருமேனிகள் இருந்த வளாகங்களை நகர் என்றும் குறிக்கின்றன. இன்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்து இலால்குடி வட்டத்தில் நகர் என்ற பெயருடன் விளங்கும் திருக்கோயிலொன்று உள்ளது. இக்கோயிலின் பெயராலேயே ஊரும் நகர் என்றழைக்கப் படுகிறது.

கோயில் வளாகங்களில் தங்குமிடங்கள் இருந்தன. கூரைகளைத் தாங்கப் பருத்த, நெடிய தூண்கள் பயன்படுத்தப்பட்டன. அவை

வண்ணம் பூசப்பெற்றிருந்தன. மதில்கள் குறிக்கப்படுவதால் மையக் கோயிலைச் சுற்றிவர திருச்சுற்று அமைந்திருந்ததை ஊகிக்கலாம்.

ஊர்கள் உண்டாக்கப்பட்டபோது கோயில்கள் கட்டப்பட்டதை, 'கோயிலொடு குடி நிறீஇ' என்னும் பட்டினப்பாலை வரி உணர்த்தும். இக்கோயில் வளாகங்கள் யானைகள் மகிழ்ந்து இன்புற்றுத் தங்கு மாறு பெரியனவாகவும் உயரமானவையாகவும் இருந்ததை அறிய வியப்பேற்படுகிறது.

[வளரும்]

பரிந்துரை நூல்கள்

1. K. N. Dikshit, Pre Historic Civilization of the Indus valley, University of Madras, 1973.
2. மா. இராசமாணிக்கனார், மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், கழக வெளியீடு, சென்னை, 1972.
3. குமரிக்கண்டம் மற்றும் சிந்துவெளி மாநாட்டு மலர், பன்னாட்டு மொழி மையம், 2ஏ-சுப்புராய நகர் நான்காம் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.
4. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1956.
5. பத்துப்பாட்டு மூலமும் பொ.வே. சோமசுந்தரனார் உரையும், முதற்பகுதி, கழக வெளியீடு, சென்னை, 1956.
6. பத்துப்பாட்டு மூலமும் பொ.வே. சோமசுந்தரனார் உரையும், இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, சென்னை, 1968.
7. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1970.
8. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம் – வாழ்வியல், தமிழ்நாடு அரசு வெளியீடு, 1983.

6. பொதுப்பகுதி

1. பெருமைச்சுவடுகள்

தொல்லியல் மேதை கூ. ரா. சீனிவாசன்

கோ. வேணிதேவி

தொல்லியல் மேதை கூ. ரா. சீனிவாசன் வரலாற்றை அறிவியல் கண்ணோட்டத்தோடு அணுகிக் கள ஆய்வுகள் பல மேற்கொண்டு தம் அயராத உழைப்பால் தொல்லியல் துறையில் பல சாதனை களைப் புரிந்து தனிச் சிறப்புடன் விளங்கியவர். இந்தியக் கலை வரலாற்றின் சாதனைச் சான்றுகளாய்த் திகழும் கோயில்களின் கட்டட அமைப்பைப் பற்றியும் அங்குள்ள சிற்பங்கள், படிமங்கள் பற்றியும் நுணுகி ஆராய்ந்து, தெளிந்து, உலகிற்கு அவற்றின் சிறப்புகளை உணர்த்தி வரலாற்றைச் சிறப்பித்தவர். கல்வெட்டியலில் தேர்ச்சி பெற்ற அவர் தமிழ், வடமொழி இலக்கியங்களையும் நன்கு பயின்றிருந்தமையால் பல அரிய கல்வெட்டுச் சொற்களுக்குச் சரியான பொருளடைவுகளை எடுத்துச் சொல்ல முடிந்தது. அவரோடு சிறிது நேரம் உரையாடினால் போதும் ஒரு நூலகத்தில் தரமான பல ஆய்வு நூல்களை ஆழப் பயின்ற அனுபவம் ஏற்படும்.

இந்த மாமேதை 1910ஆம் ஆண்டு ஜுலை மூன்றாம் நாள் திருச்சிராப்பள்ளியில் பிறந்தார். இவரால் இந்த மண்ணுக்குச் சிறப்பு. பட்டப்படிப்பிற்காக தாவரவியலைத் தேர்ந்தெடுத்து சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்றார். 1932ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி புனித வளனார் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். இவரை வரலாற்றில் ஈடுபடுத்தித் தொல்லியல் துறையில் தன்னிகரற்று விளங்கச் செய்த பெருமை அவரது தமையனார் கூ. ரா. வெங்கட் ராமனையே சேரும். கூ. ரா. வெங்கட்ராமன் நன்கு கற்றுத் தெளிந்த அறிஞர். வளமான சிந்தனையாற்றல் கொண்டவர். தமையனாரிட மிருந்து கூ.ரா. சீனிவாசன் கற்றுக் கொண்டது ஏராளம். பயிற்றுவித்த தமையனாரை சீனிவாசன் தம் தந்தைக்கு நிகராக எண்ணி மதித்தார்.

வெங்கட்ராமன் புதுக்கோட்டையில் தொல்லியல் துறையில் பணியாற்றிய பொழுது ஓர் உதவியாளர் தேவையாக இருந்தது. அந்தப் பொறுப்பில் கூ. ரா. சீனிவாசன் அமர்த்தப்பட்டார். 1936 ஆம் ஆண்டு புதுக்கோட்டை அருங்காட்சியத்தின் காப்பாட்சியராகவும் தொல்லியல். கல்வெட்டுத் துறைகளின் ஆய்வாளாராகவும் பணி யமர்ந்த நிலையில் தொடங்கியது, அவரது முடிவற்ற வரலாற் றாய்வுப் பணி,

புதுக்கோட்டையில் பணியாற்றிய பதினோரு ஆண்டுகளில் தொல்லியல், இந்தியக் கலை வரலாறு போன்ற துறைகளில் சிறந்த பயிற்சியும் முதிர்ந்த அநுபவமும் பெற்று யாவரும் போற்றுதற்குரிய திறனாளராக உயர்ந்த இந்த இளம் அறிஞர் புதுக்கோட்டையிலும் அதைச் சுற்றியுள்ள பிற இடங்களிலும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சின்னங்களையும் சோழர்காலக் கோயில்களையும் ஆய்ந்து தெளிந்தார். புதுக்கோட்டை அரசு அதுபோழ்து கொணர்ந்த மாநில வரலாற்றுத் தொகுதிகளின் பல பக்கங்களுக்குச் செய்திகளை தந்தவர் கூ. ரா. சீனிவாசன். அவரது அரிய கட்டுரைகளைத் தொகுத்து வெங்கட்ராமன் வெளியிட்டார். இந்த அபூர்வ சகோதரர்கள் புதுக் கோட்டையில் களஆய்வு செய்து கண்டுபிடித்து வெளியுலகிற்கு அறிவித்த செய்திகள், பல வரலாற்று அறிஞர்களை இவர்கள் பால் ஈர்த்தன.

கூ. ரா. சீனிவாசன் சென்னை அருங்காட்சியகத்திலும் பணியாற்றினார். திரு. தீக்சித், திரு. மார்டிமர் வீலர், திரு. நீலகண்ட சாஸ்திரி போன்ற பல அறிஞர்களோடு பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. 1944ஆம் ஆண்டில் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் இயக்குநராகப் பணியாற்றிய திரு. தீக்சித்துடன் அகிச்சாத்ராவில் கள ஆய்வுகள் மேற்கொண்ட சீனிவாசன், அடுத்த வருடமே திரு. மார்டிமர் வீலரோடு புதுச்சேரியை அடுத்த அரிக்கமேட்டில் கள ஆய்வு செய்யும் வாய்ப்பு பெற்றார். அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சிக் கண்டு பிடிப்புகள் தமிழர்க்கும் ரோமானியர்க்குமிடையே இருந்த வணிகத் தொடர்பைத் தெளிவாக்கின. ரோமானியருடைய வணிகக் கிடங்கு ஒன்று அரிக்கமேட்டில் இருந்ததற்குரிய சான்றுகள் அகழாய்வில் கிடைக்கப்பெற்றன. எரித்தியக் கடலின் பெரிப்ளூஸ் என்ற நிலவியல் சார்ந்த பழம்பெரும் நூல் சொல்லும் தமிழக ரோமானிய வணிகத் தொடர்புகளை இக்கண்டுபிடிப்புகள் உறுதி செய்தன. அரிக்கமேட்டில் ஆய்வு செய்த அறிஞர்களில் கூ. ரா சீனிவாசன் மட்டுமே தமிழிலக்கியம் பயின்றவர். அதனால் சங்க நூல்கள், யவனர்கள் என்று ரோமானியர் களையும் கிரேக்கர்களையும் குறிப்பதைப் பிறர்க்கு எடுத்து விளக்கினார். சங்கப் பாடல்களைக் காட்டி பிறர்க்கு இவ்வணிகத் தொடர்பு பற்றிய பல செய்திகளைத் தொகுத்தளித்தார். அங்குத் தோண்டியெடுக்கப் பட்ட பானையோட்டில் காணப்பட்ட தமிழ் பிராமி எழுத்துக்களை அடையாளம் கண்டு ஆய்ந்தறிந்து விளக்கினார். இது இந்த மாமேதையின் வரலாற்றுப் பணிக்கு நல்ல உரைகல்லாக அமைந்தது.

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் உன்னத படைப்பான சோழர் வரலாறு குறித்து ஆய்வு செய்யும் பணியில் சீனிவாசன் பங்கேற்றார். கல்வெட்டுச் செய்திகளையும், கலை வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்து வழங்கி அந்நூல் சிறப்புற அமைய துணை நின்றார்.

இந்த அறிஞர் பெருந்தகையின் அயராத உழைப்பைப் பெருமைப் படுத்தும் முகத்தான் 1946ஆம் ஆண்டு அரசு அவரை இந்தியத் தொல்லியல் துறையின் முதல்நிலை அலுவலராக நியமித்தது. இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு தொல்லியலில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு அதற்கெனவே வாழத் தொடங்கினார் கூ. ரா. சீனிவாசன். இத்துறையில் இரண்டு ஆண்டுகள் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய பின் 1956ஆம் ஆண்டு சென்னையில் தென் வட்டாரக் கண்காணிப்புநிலைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளராகப் பொறுப் பேற்றார். தொடர்ந்து தென்கிழக்கு வட்டாரத்தின் சார்பாக விசாகப் பட்டினத்திலும் பிறகு மைய வட்டாரத்தின் சார்பாகப் பாட்னாவிலும் பணியாற்றினார். இத்துறையில் அவருடைய செயற்பாடுகளும் அவற்றின் பயனாய்க் கிடைத்த பெருமைகளும் அவரைச் சிறந்த வரலாற்று ஆய்வாளராக நிலை நிறுத்தின. இந்தியத் துணைக்கண்டத் திலுள்ள பல வரலாற்றுச் சின்னங்களைக் கண்டு ஆராய்ந்து தெளியும் அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கசடறக் கற்றவர், கற்றவற்றை மற்றவர்களுக்கும் தயங்காது எடுத்துரைத்தார். நூல்களாகவும், கட்டுரைகளாகவும் தம் ஆய்வு முடிவுகளை அவ்வப்போது வெளி யிட்டார். தொல்லியல் துறையில் நுழைந்த இரண்டு ஆண்டுகளிலேயே கலை வரலாற்று அறிஞர் சிவராமமூர்த்தியுடன் வரலாற்றுச் சின்னங் களைப் பராமரிக்கும் முறை குறித்து இந்தோனேசிய ஆய்வர்களுக்கு எடுத்துரைக்க அரசாங்கத்தின் சார்பில் ஆலோசகராகச் சென்றார். வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் முறை பற்றி கூ. ரா. சீனிவாசன் வெளியிட்ட அறிக்கை போரோபுதூர் சின்னங்களைப் பராமரிப்பதற்கு இந்தோனேசிய அரசாங்கத்திற்குப் பேருதவியாக அமைந்தது. இதன்வழி அவரது அறிவாற்றல் அயல் நாட்டவருக்கும் பயனுள்ளதாய் அமைந்து அங்குள்ள கலைச் சின்னங்களையும் பாது காக்க வழியமைத்தது. நமக்குப் பெருமை தருவதாகும். யுனஸ்கோ வின் வரலாற்றுச் சின்னங்களையும் பழஞ்சின்னங்களையும் பாதுகாக் கும் மையத்தைச் சேர்ந்த பெல்ஜிய நாட்டு அலுவலர் பால் கோரமான் போரோபுதூர் வந்தபோது சீனிவாசனின் திறமையையும் அவரது பராமரிப்பு முறைகளையும் பெரிதும் பாராட்டினார்.

1956ஆம் ஆண்டு கூ. ரா. சீனிவாசன் கோயில் ஆய்வுத் திட்டத் தின் தென்னிந்தியக் கிளையை அமைத்தார். இந்த அமைப்பின் அலுவலராக இருந்த ஏழாண்டுக் காலத்தில் விந்தியத்தின் தெற்கே யுள்ள கோயில்களின் கட்டடக்கலை, அங்குள்ள சிற்பங்கள், படிமங்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு 1963ஆம் ஆண்டு தொல்லியல் அளவீட்டுத் துறையின் துணை இயக்குநராகப் பொறுப்பேற்று ஐந்தாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஓய்வுக் குப் பிறகும் ஆந்திர மாநிலத்திலுள்ள நாகார்ச்சுனகொண்டாவில்

நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியின் வெளியீடுகளைத் தொகுக்கும் பணியில் ஓராண்டுக் காலம் சீனிவாசன் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஈடு பட்டார். பதவியிலிருந்து விலகினாலும், தொல்லியலைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர்க்கு ஓய்வு ஏது?

திரு. சீனிவாசன் நேரில் கண்டு பல்லாண்டுகள் முறையாகக் கள ஆய்வுகள் செய்து எழுதிய பல்லவர் குகைக்கோயில்கள், தர்மராஜ ரதமும் அதன் சிற்பங்களும், தென்னிந்தியக் கோயில்கள், புதுக் கோட்டைக் கல்வெட்டுகள் போன்ற அரிய படைப்புகள் இத்துறையில் ஈடுபட்டுப் பயில்வோருக்குக் கருவூலங்களாக அமைந்துள்ளன.

இந்திய வரலாற்றுக்குக் கூ. ரா. சீனிவாசன் ஆற்றிய அருந் தொண்டைப் பாராட்டி இந்திய அரசு 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் நாள் அவருக்கு பத்மபூஷண் விருது அளித்துத் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. இப்பெருமகனாரின் இணையற்ற சேவைகளையும் மனித நேயப் பண்புகளையும் பாராட்டி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் 1991ஆம் ஆண்டிற்குரிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் விருதை வழங்கிப் பெருமையுற்றது.

கூ. ரா. சீனிவாசன் தமிழ், வடமொழி இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவராகையால் தாம் எழுதிய 'Some Aspects of Religion as Revealed by Early Monuments and Literature', போன்ற கட்டுரைகள் வழி வரலாறு எழுதுவதற்கு இலக்கியம் எத்தனைத் தேவையானது என்பதைச் சரியான சான்றுகளுடன் மெய்ப்பித் துள்ளார். பழைய இந்தியா என்னும் இதழில் புறநானூறு, மணி மேகலை நூல்கள் தரும் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு அவர் எழுதிய 'The Megalithic Burials and Uru Fields of South India in the Light of Tamil Literature' இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. வரலாறு எழுதும்போது இலக்கியச் சான்றுகளை அவற்றிற்கு உரிய இடம் தந்து கொள்ள வேண்டும் என்பது அவரது முதலான கருத் தாகும்.

கோயில்கள் நம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் உணர்த்தும் கலைச் செல்வங்கள். அவற்றைப் பழுதுபடாமல் பாதுகாக்கும் முறை களையும் சீனிவாசன் விளக்கியுள்ளார். அதில் அவர் தேர்ந்த விற்பன்னராகவும் திகழ்ந்தார். அம்முறைகளைக் கையாண்டுதான் தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்தின் பகுதிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

பதவி ஓய்விற்குப் பிறகு திருவரங்கத்தில் அச்சகம் ஒன்றை நிறுவித் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் போன்ற கிடைக்கப்பெறாத

அரிய நூல்களை அச்சிட்டு உதவினார். இது அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படக்கூடிய நற்பணியாய் அமைந்தது. அவரது பணிகளைப் பாராட்டி ஸ்ரீநிதி என்ற பெயரில் வரலாற்றறிஞர் களின் ஆய்வுக் கட்டுரைகளடங்கிய தொகுப்பு நூலொன்று 1983இல் வெளியிடப்பட்டது.

இந்திய வரலாறு சார்ந்த பல துறைகளிலும் தேர்ச்சி பெற்று அறிவுச் சுடராகத் திகழ்ந்த மேதை கூ. ரா. சீனிவாசன் பார்ப்பதற்கு மிக எளிமையானவர். பழகுவதற்கு இனிமையானவர். தம்மை நாடி வந்த ஆய்வாளர்களுக்கும், மாணவ மாணவியர்க்கும் அறிவுச் செல்வத்தை வழங்குவதற்கு அவர் தயங்கியதேயில்லை. தொல்லியல், கோயிற் கட்டடக்கலை, கல்வெட்டியல், சிற்பக்கலை, படிமக்கலை தொடர்பாக எழக்கூடிய ஐயப்பாடுகளை தம்மிடம் கேட்டுத் தெளி வடைய வரும் ஆய்வாளர்களுக்கு விளக்கிச் சொல்வதில் அவர் சலிப் படைந்ததாகச் சரித்திரமில்லை. மிகவும் பொறுமையாகவும் தெளி வாகவும் கேட்பார் திறமறிந்து செய்திகளை விளக்கக் கூடியவர் இந்தக்கலை வல்லுநரிடம் உரையாடும் வாய்ப்பு கிடைத்த இளம் ஆய் வாளர்கள் அனைவருமே இன்று மிகச் சிறந்த அறிஞர்களாக வளர்ந்துள்ளனர்.

தொல்லியல் உலகின் மேருவாக விளங்கித் தாம் பிறந்த மண்ணுக்குத் தம்மால் இயன்ற அளவு உழைத்து பெயரீட்டித் தந்தது இப்பெருந்தகை 1993ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முப்பதாம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற பணிகளை அவரிடம் பயின்ற இளைய தலைமுறை தொடர்ந்து செய்து வருவதன் மூலம் அப்பெருமகனாரின் புகழை இந்நிலவுலகில் நிரந்தரமாக்கியுள்ளனர்.

•

2. நூல் மதிப்புரை

நூல் : சூரக்குடிக் கோயில்

ஆசிரியர் : மா. சந்திரமூர்த்தி

வெளியீடு : மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, சென்னை-600 118

பக்கங்கள்: 160 ; விலை : ரூ. 20·00.

திரு. மா. சந்திரமூர்த்தி எழுதியுள்ள சூரக்குடிக் கோயில் என்னும் நூல் நகரத்தார் கோயில்களுள் ஒன்றைப் பற்றிய அனைத்துத் தகவல் களையும் விரிவாகத் தரும் பாங்கில் அமைந்துள்ளது. நாடும் நகரமும் என்று தொடங்கிப் பதினோரு தலைப்புகளின் கீழ் இக்கோயிற் செய்தி களைப் பகிர்ந்துகொண்டிருக்கும் ஆசிரியர் பிற்சேர்க்கையில் பல பயனுள்ள இணைப்புகளைத் தந்துள்ளார். தொண்ணூற்றாறூர் ஆலயங்களின் பட்டியல் நகரத்தார் கோயில் ஆய்வுகளில் ஈடுபடு வோர்க்கு மிகப் பயனுள்ளதாக அமையக் கூடியது. சூரக்குடி நகரத்தா ரின் இசைபிடிமானம் வரலாற்றின் தொடர்ச்சியை விளக்குகிறது.

இந்த நூல் கோயிலைப் பற்றியதாக அமைந்துள்ளதால் நூலைப் படித்து முடித்ததும் சூரக்குடிக் கோயில் ஒரு முறை பார்த்து வரப் பட்டது. அக்கோயில் பற்றிய எந்த ஒரு சிறு செய்தியையும் விடாமல் எழுத முயன்றிருப்பதால்தான் நூற்றறுபது பக்கமுள்ள நூலை ஆசிரியரால் உருவாக்க முடிந்துள்ளது. நூலாசிரியரின் கவனிக்கும் திறனும் சொல் வளமும் ஒப்பீட்டு நோக்கும் நூலில் பரவலாகக் காணக் கிடக்கின்றன.

கோயிற் கட்டடக்கலை பற்றிய தெளிவான அறிவு கோயில்களைப் பற்றி எழுதும் பலருக்கு இருப்பதில்லை. ஆனால் இந்நூலாசிரியர் அரிதின் முயன்று கட்டடக்கலை பற்றிய செய்திகளை விரிவாகவே எழுதியுள்ளார். கட்டுமானத்தின் எந்தப் பகுதியையும் ஒதுக்கி விடாமல் விளக்கிச் செல்லும் பாங்கு பாராட்டத்தக்கது. பல நாட்கள் கோயிலில் தங்கியிருந்த நூலாசிரியரின் உழைப்பை நூலின் பக்கங்கள் பேசுகின்றன.

குறைகள் இல்லாமல் இல்லை. வேதிகை என்னும் உறுப்பு சுவர்ப் பகுதி சார்ந்தது. அதைத் தாங்குதளத்துடன் இணைத்துச் சொல்லி யிருப்பதும் கண்டப் பகுதிக்குச் சதுரப்படை என்று பெயர் சூட்டியிருப் பதும் பொருத்தமாக இல்லை. விமானம் என்ற கலைச்சொல்லுக்குப்

பொருள் விளக்கம் தருவதில் நூலாசிரியர் தமக்குத் தாமே முரண்படுகிறார். 'இக்கோயில் விமானம் ஆறு பெரும் பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது' என்று எழுதி, அடுத்த வரியில், 'இக்கோயில் விமானம் இரு தளங்களை உடையது' என்று சொல்லிப் பிறகு, 'கருவறைக்கு மேலுள்ள விமானம் இரு தள விமானமாக அமைந்துள்ளது' என்று கூறியிருப்பது படிப்பவரைப் பெரிதும் குழப்பும். விமானம் என்ற கலைச்சொல் கருவறை அமர்ந்திருக்கும் கட்டுமானத்தின் அடிமுதல் முடி வரையுள்ள கட்டடப் பகுதியைக் குறிப்பதாகும். நூலாசிரியர் குறிப்பிடும் விமானம் உண்மையில் முத்தள விமானமாகும்.

தாங்குதளத்தைப் பற்றி விரிவாகப் பேசும் நூலாசிரியர் அதிலுள்ள பல தாமரை வரிகளைக் குறிப்பிடவில்லை. தேவகோட்டங்களின் தாங்குதளக் கபோதத்தில் கொடுங்கையமைப்பும், மேல் மூலைகளில் யானை முகமும் காட்டப்பட்டிருப்பதாக நூலாசிரியர் எழுதியிருக்கிறார். கோயிலில் பார்த்தபோது இரண்டுமே இல்லை. கபோதத்தின் மேல் மூலைகளில் மகரமே காட்டப்பட்டுள்ளது. இந்த மகரமும் பல இடங்களில் சிதைந்துள்ளது.

ஏபரவர் திருமுன்னைப் பற்றி எழுதும்போது தடுமாற்றம் காணப்படுகிறது. 'இச்சன்னதி இரு தள விமானத்தை உடையது. இதன் கிரீவமும் சிகரமும் வட்ட வடிவுடையன. திராவிட வகையைச் சார்ந்த சிகரத்தின் மேல் வட்ட வடிவமான தூபியைக் காணலாம்' (பக். 41) என்று பைரவர் திருமுன் விமான மேலுறுப்புகளைப் பற்றி நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இவரது முதல் வரியில் வட்டமாக (வேசரம்) உள்ள சிகரம் அடுத்த வரியிலேயே திராவிடமாகியிருப்பது தவிர்க்கப் பட்டிருக்கலாம்.

சொற்றொடர்க் கையாளல்கள் பல இடங்களில் நேர்த்தியாக உள்ளன. ஆனால் சில இடங்களில் பொருத்தமற்ற சொற்களும் விழுந்துள்ளன. சுடர் விட்டெரியும் அக்க மாலையைச் (பக். 60) சான்றாகக் கூறலாம்.

'கோபுரத்தில், சிற்பத்தில், செப்புப் படிமத்தில் கலை நுட்பத்தை நுண்ணிதின் ஆராய்ந்து தெளிவாக விளக்கியுள்ளார்' என்று நூலாசிரியரை நூலின் பதிப்பாசிரியரே பாராட்டியிருக்கும்போது நாம் பாராட்டாதிருக்க முடியுமா ? இந்தக் கோயிலின் தூண் சிற்பங்களைக் கூடக் 'கலைத் திறன் கொண்டவை, நகரத்தார் கலையை வெளிப் படுத்துபவை' என்று நூலாசிரியர் எழுதியிருப்பதுதான் நம்மைத் தயங்க வைக்கிறது.

– **இரா. கலைக்கோவன்.**

3. யாவரும் கேளிர்

1. சே. கோபாலகிருஷ்ணன் : 29-12-1945. திரு. வி. சேஷன் திருமதி. சே. நாகலட்சுமி மகனார். துணைவியார் திருமதி. கோ. விமலா. எஸ். எஸ். எல். சி., கூட்டுறவியலில் பயிற்சி. செயலர் (பொறுப்பு), கூட்டுறவுக் கிளை வங்கி, 48, சன்னதி தெரு, திருவானைக்கோயில், திருச்சிராப்பள்ளி-620 005. இல்லம் : 99C, வடக்குத் தேர் வீதி, திருவானைக்கோயில், திருச்சிராப்பள்ளி-620 005. ஆர்வம் : புராண, இதிகாசங்கள் பயில்வது, வரலாறு.

2. கோ. நா. மோகனவேல் : 12-3-1941. திரு. கோ. அ. நாகப்பன் திருமதி. நா. பழநியம்மாள் மகனார். துணைவியார் திருமதி. மோ. அனுசூயா. எம். பி. பி. எஸ்., தோல் மருத்துவப் பட்டயம், எம். டி. தோல் மருத்துவம், எம். ஏ. எம். எஸ்., தோல் நோய் மருத்துவ வல்லுநர். மருத்துவ மனைகள் : 105, பெரமனூர் முதன்மைச் சாலை, சேலம்-636 007. தொ. 68277. ரேகா காம்ப்ளெக்ஸ், 207, இரண்டாவது அக்கிரகாரம், சேலம்-636 001. தொ. 66584. இல்லம் : சாய் குகா, 37, வீர சாவர்க்கர் தெரு, இராமகிருஷ்ணா ரோடு, சேலம்-636 007. தொ. 67124. பொறுப்புகள் : துணைத்தலைவர் – இந்திய மருத்துவ மன்றச் சேலம் கிளை, பாரத் விகாஸ் பரிசத் சேலம் கிளை. தலைவர், ராஜராஜேசுவரி முதியோர் இல்லம், சேலம். உறுப்பினர் : சத்திய சாயிபாபா மன்றம். ஆர்வம் : ஆன்மிகம், கலைகள், வரலாறு. வெளியீடுகள் : தமிழிலும் ஆங்கிலத்திலும் தோல் மருத்துவம் தொடர்பான பல கட்டுரைகள்.

3. த. சரஸ்வதி ராஜ் : 3-6-1924. திரு. ப. ராமசாமி திருமதி. காளி அம்மாள் மகளார். கணவர் திரு. தர்மராஜ். இல்லம் : 1/29, தென்கிழக்கு லேஅவுட், ஃபேர்லேண்ட்ஸ், சேலம்-636 016. தொ. 448197. பங்கேற்பு : அங்கயர்க்கண்ணி சங்கீத சபா அமைப்பாளர். ஆர்வம் : தோட்டக் கலை, மலையேற்றம், தொல்லியல், புதினங்கள்.

4. வா. சா. பானு நூர்மைதீன் : 24-3-1950. திரு. தா. அருணாசலம் திருமதி. அ. சக்குபாய் அம்மாள் மகளார். கணவர் பேரா. வா. மு. அ. நூர்மைதீன். தமிழில் முதுகலை, முனைவர். முனைவர் ஆய்வுத் தலைப்பு–பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும். தேர்வு நிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 002. இல்லம் : சிக்கந்தரா இருக்கை, இக்பால் குடியிருப்பு, திருச்சிராப்பள்ளி-620 020. தொ. 42561. பங்கேற்பு : பல கருத்தரங்குகள், கவியரங்குகள், வானொலி, தொலைக்காட்சி இலக்கிய நிகழ்ச்சிகள், மலேசிய உலகத் தமிழர்

மாநாடு. வெளியீடுகள்: பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும், மலேசிய மகளிர் மாண்பு, ஒளியே ஒளியின் நிழலே, மற்றும் இசுலாமிய, தமிழ் இலக்கிய நூல்கள். ஆர்வம்: இலக்கியம், வரலாறு.

5. எஸ். அ. சம்பத்குமார்: 16-3-1958. திரு. என். அகோரம் திருமதி. சிவகாமசுந்தரி மகனார். துணைவியார் திருமதி. ச. ஆண்டாள். தமிழிலும் சமூகவியலிலும் முதுகலை, பி. எல். ஐ. எஸ். நூலகவியல். கல்லூரி நூலகர் — முதுநிலை, எஸ். கே. எஸ். எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்-612 504, தஞ்சாவூர் மாவட்டம். இல்லம்: 30, வடக்குத் தேர் வீதி, திருப்பனந்தாள். பங்கேற்பு: மாநில மற்றும் நாட்டளவிலான நூலகக் கருத்தரங்குகள், பல்கலைக் கழகங்களில் இலக்கியக் கருத்தரங்குகள். வெளியீடுகள்: ஆய்வுக் கட்டுரைகள். ஆர்வம்: இலக்கியம், வரலாறு.

6. அ. கோபிநாத்: 9-9-1946. திரு. அப்பு கிருஷ்ணன் திருமதி. தேவியம்மாள் மகனார். துணைவியார் திருமதி. இந்திரா. கர்நாடக இசையில் பட்டயம்; இளநிலை விலங்கியல்; தமிழில், ஆங்கிலத்தில், சமுதாய இயலில் முதுகலை; இளநிலைக் கல்வியியல்; முனைவர். முனைவர் ஆய்வுத் தலைப்பு–தமிழ்க் காப்பியங்களில் அவலச் சுவை. உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பிஷப் ஈபர் கல்லூரி, திருச்சிராப் பள்ளி-620 017. இல்லம்: 80, கணபதி குடியிருப்பு, மாம்பழச்சாலை, திருச்சிராப்பள்ளி-620 005. பங்கேற்பு: இரண்டாயிரத்திற்கும் மேற் பட்ட பட்டிமன்ற, கருத்தரங்க நிகழ்வுகள். நடித்தும் இயக்கியும் பல நாடகங்கள, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். பொறுப்பு கள்: செயலர், தமிழியல் ஆய்வுப் பண்ணை, கோயமுத்தூர். பொரு ளாளர், நாடகக் கலைப்பள்ளி, கோயமுத்தூர். செயற்குழு உறுப்பினர், முருகன் முத்தமிழ் மன்றம், கோயமுத்தூர். சிறப்புகள்: முத்தமிழ் வித்தகர் விருது சென்னையில், முத்தமிழ்ச் செல்வர் பட்டம் திருப்பூரில், இசைத் தென்றல் விருது கரூரில். வெளியீடுகள்: நூற்றுக்கும் மேற் பட்ட ஆய்வுக் கட்டுரைகள். ஆர்வம்: இயல், இசை, நாடகத் துறைகள், கோயிற் கலை. எழுவர் நாட்டுப்புறக் கலைக்குழு கொண்டு தமிழகமெங்கும் தமிழிசை பரவச் செய்தல்.

7. பூ. அர. குப்புசாமி: 1-8-1933. திரு. கு. அரங்கசாமி, திருமதி. மீனாட்சி மகனார். பி.ஏ., பி. எல். வழக்குரைஞர், 19, மேற்கு மட வளாகம், கரூர்-639 001. தொ. 21114. சாதனைகள்: நொய்யல் திட்டம் நிறைவேற வைத்தது, சார்பு நீதி மன்றம் கொணர்ந்தது, காவிரி காப்புக் குழு கண்டது. பொறுப்பு: மாநிலத் துணைத் தலைவர், பகுத்தறிவாளர் கழகம். வெளியீடுகள்: மன்னரும் மநு தர்மமும், மண்ணுக்கேற்ற பொதுவுடமை, திராவிட இயக்கங்களும் தேசிய இனச் சிக்கலும், சட்டப்படி நாம் இன்னும் சூத்திரரே முதலிய

நூல்கள். ஆர்வம் : இலக்கியம், வரலாறு, நாணயவியல், தொல்லியல், சமூக இயல், சுற்றுச் சூழல்.

8. எஸ் பாலகிருஷ்ணன் : 1940. திரு. பொன்னுசாமி திருமதி. செல்லம்மாள் மகனார். இளம் அறிவியல், ஹெச். டி.சி., டி.சி.ஏ., முது நிலைக் கூட்டுறவுத் தணிக்கையாளர், கூட்டுறவு வங்கி, 48, சன்னதி தெரு, திருவானைக்கோயில், திருச்சிராப்பள்ளி-620 005. இல்லம் : நகர் அஞ்சல், மாந்துறை வழி, இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். ஆர்வம் : வரலாறு.

9. இராம. சிவப்பிரகாசம் : 22-12-1922. திரு. இராமசாமி திருமதி. சின்னம்மாள் மகனார். எஸ். எஸ். எல். சி. இல்லம் : 19, வடக்கு வீதி, இலால்குடி-621 601, திருச்சிராப்பள்ளி மாவட்டம். பொறுப்பு கள் : பொருளாளர், திருக்குறள் கழகம், திருத்தவத்துறை ; நாடு காண் குழு, திருத்தவத்துறை; மேனாள் மாணவர் மன்றம், இலால்குடி அரசினர் மேனிலைப் பள்ளி. செயலாளர், அன்பில் தர்மலிங்கம் அறக் கட்டளை. ஆர்வம் : இலக்கியம், திருக்கோயில் தொண்டு. சாதனைகள் : இலால்குடி திருக்கோயில் ராஜகோபுரத் திருப்பணியை அன்பர்கள் துணையுடன் முடித்தமை. பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ் நூல் முழுவதையும் கல்வெட்டாக்கி இலால்குடி திருக் கோயிலில் இடம்பெறச் செய்தமை.

10. சொ. சேதுராமன் : 5-8-1952 திரு. வ. சு. ப. சொக்கலிங்கம் திருமதி. சொ. மங்களம் மகனார். எம். பி. பி. எஸ்., எம். டி. பொது மருத்துவம். மருத்துவ மனை :24, ஜாபர்ஷா தெரு, திருச்சிராப் பள்ளி-620 208. தொ. 47272. இல்லம் : AA 21, முதன்மைச் சாலை, அண்ணாநகர், தென்னூர், திருச்சிராப்பள்ளி-620 017. தொ. 31810. பொறுப்புகள் : வாழ்நாள் உறுப்பினர், இந்திய மருத்துவ வல்லுநர்கள் அமைப்பு; உறுப்பினர், இந்திய மருத்துவ மன்றம்; செயற்குழு உறுப்பினர், இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப் பள்ளி கிளை. வெளியீடுகள் : மருத்துவக் கட்டுரைகள், வானொலி யில் மருத்துவப் பொழிவுகள். ஆர்வம் : இதய மருத்துவப் பிரிவு, வரலாறு.

4. அன்புள்ள உங்களுக்கு

லாசன்சு சாலைக் கல்வெட்டு பற்றிய கட்டுரை படித்தேன். பழங்காலக் கல்வெட்டுகள் பற்றித்தான் பலரும் ஆய்வு மேற்கொள் கிறார்கள். வெள்ளையர்கள் தமிழ்நாட்டில் கால் வைத்த காலம், ஆட்சியைக் கைப்பற்றிய காலம், கிறித்துவ மதக் கோயில்கள் கட்டப் பட்ட காலம் பற்றிய தெளிவான செய்திகளை அறிய அக்கால ஆவ ணங்களையும் நினைவுச் சின்னங்களையும் தொடர்ந்து ஆராய்ந்திட வேண்டுகிறேன்.

சு. ஆறுமுகம்
138 சி 9, திருவள்ளுவர் நகர்,
பாவநாசம் நெடுஞ்சாலை,
விக்கிரமசிங்கபுரம்-627 425.

செயற்கரிய பணி. பண்டாரத்தார், சாஸ்திரியார், இராசமாணிக்க னார் முதலியோர் மறைந்துவிட்டார்களே என்று வருந்தும் வருத்தம் வரலாறு இதழைப் பார்க்கும் பொழுதும் படிக்கும் பொழுதும் மறை கிறது. தொண்டுகள் தொடரட்டும்.

கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன்
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்-608 002.

சென்ற நூற்றாண்டில் தரங்கம்பாடியில் குப்பை வண்டியின் வரவை அறிவிப்பதற்குக் கிறிக்கட்டி அடித்துச் சென்றதாக டேனிஷ் தமிழ் ஆவணம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது (தமிழ்நாடு ஆவணக் காப்பக டேனிஷ் ஆவணம் 220/80-2). கொடுகொட்டி என்ற சொல்லே கிறிக் கட்டி என வழங்கியதாகவும் மிக வலுத்த ஓசை எழுப்பும் கொந்தளப் பறையே கொடுகொட்டி என்றும் தஞ்சை அரண்மனையில் வசிக்கும் திரு. கிருஷ்ணசாமி ராஜே மாடிக் கருதுகிறார்.

எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
10-A, ரகு பில்டிங், ஏரல்-628 801.

அப்பரும் அவிநயமும் என்ற ஆய்வுக் கட்டுரையைப் படித்தேன். திருமுறையில் ஆடல் குறிப்புகளை இவ்வளவு நுணுக்கமாக யாரும் ஆய்வு செய்திருக்க மாட்டார்கள் என்று துணியலாம். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்' என்ற சொற்றொடர்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, வரலாற்றுக்கும்

அடிப்படைகளாய் விளங்கவல்லவை என்ற வரிகள்தான் எத்தனை உண்மையானவை.

பம்மல் விசயரங்கனார் காலக் கல்விநிலை, அவரது பதிப்புகள் பற்றிய கட்டுரை திரு. மா. ரா. அரசுவுக்குப் பெருமை சேர்க்கிறது. பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்களை ஆய்வு செய்து வரும் என் பேராசிரிய நண்பருக்கு சில முக்கியக் குறிப்புகள் இதன் மூலம் கிடைக்கப் பெற்றன.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை, தமிழகக் கல்வெட்டுகள் பற்றிய தொடர்கள் இலக்கிய இளவல் மாணவர்களுக்கும் இப்பாடங்களைப் பயிற்றுவிப்போருக்கும் பயில்வோருக்கும் பெரிதும் பயன்படும்.

தொலைவில் நின்றாலும் கருத்தால் ஒருமித்து ஓர் இயக்கம் உருவாகப் பாடுபடுவேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. சம்பத்குமார்
நூலகர்,
எஸ். கே. எஸ். எஸ். கலைக் கல்லூரி,
திருப்பனந்தாள் - 612 504.

அப்பரும் அவிநயமும் படிக்கப் படிக்க இனித்தது. அழகுச் செய்திகள். முகவுரை சிறப்புடையது. ஊர் ஊராய் அலைந்து இறைக் காட்சி பெற்ற ஒரே மனிதர் அப்பர்தான் என்ற வரியைப் படித்த போதும் இப்போது எழுதும் போதும் கண்ணீர் மல்குவதைத் தடுக்கக் கூடவில்லை.

கட்டுரையில் உள்ள வட சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தந்து அடைப்புக் குறிக்குள் வட சொற்கள் தருக.

கந்திருவம் - அப்பர் கால இசை நூல் என்பது சிறப்பு. கடைப் பத்தி நன்குள்ளது. சுருக்கத்தில் பெருக்கம்.

முனைவர். வீ. ப. கா. சுந்தரம்
இசைத்தமிழ் ஆய்வுப் பேரறிஞர்
191/6 லிங்கன் தெரு, கலைஞர் கருணாநிதி நகர்,
திருச்சிராப்பள்ளி—620021.

வரலாறு இரண்டாம் இதழில் வெளியாகியுள்ள அப்பரும் அவிநயமும் அருமையான கட்டுரை. குன்றக்குடி குடைவரைகள் கட்டுரையில் பல புதிய செய்திகள் இடம் பெற்றுள்ளன, பயனுள்ள சிறப்பான கட்டுரை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்
குன்றக்குடி-623 206.

6. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
முனைவர் ஆய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

2. அ. அப்துல் மஜீது
தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
மூன்றாவது குறுக்குச் சாலை, தரமணி, சென்னை - 600 113.

3. க. அவ்வை
கண் மருத்துவர்
C. 87, பத்தாவது குறுக்குச் சாலை
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-620 018.

4. எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
10 A, ரகு பில்டிங், ஏரல்-628 801.

5. வே. இராமன்
ஸ்தபதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி-620 020.

6. இரா. கலைக்கோவன்
இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

7. சீ. கீதா
தேர்வுநிலை விரிவுரையாளர் – வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

8. கு. சதாசிவன்
தலைவர் – வரலாற்றுத்துறை
மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
4/1, கிம்பகரனா தெரு, பழைய மிலிட்டிரி லைன்,
பாளையங்கோட்டை-627 002.

9. பி. தமிழகன்
தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி,
சோமரசன்பேட்டை-620 102.

10. ஆ. பானுமதி
சங்கிலிக் கோனார் சந்து
ஆண்டார் தெரு, திருச்சிராப்பள்ளி-620 002.

11. மு. நளினி
மதிப்புறு கல்வெட்டாய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

12. இரா. லலிதாம்பாள்
இசை ஆசிரியை
கோயிலூர் பெரியநாயகி மகளிர் மேனிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை-614 704
நாகபட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

13. கோ. வேணிதேவி
தலைவர் – வரலாற்றுத் துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

வரவேற்பாளர்கள்

இன்றைக்குப் பெண் வரவேற்ப்பாளர்கள் இல்லாத இடமில்லை. பெரும் நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், அலுவலகங்கள், விமானங்கள், சுற்றுலா ஊர்திகள் என்று அனைத்து இடங்களிலும் வரவேற்பாளர்கள் பெரும்பாலும் பெண்கள்தான். இதுபோல் வரவேற்பாளர் சங்க காலத்தில் இருந்தனரா? ஆம் என்கிறது பொருநராற்றுப்படை.

கரிகால் பெருவளத்தானைக் காணச் சென்ற பொருநரை வரவேற்று அவர் வந்த களைப்பு தீரப் பொற்கலங்களில் தேறல் தந்து மன்னர் சார்பில் அவர்களைப் பேரன்போடு போற்றிய மகிழ்செய் மாடத்து இழையணி வனப்பின் இன்னகை மகளிரை முடத்தாமக் கண்ணியாரின் வரிகளில் பார்க்கும்போது, இன்றைய பெண் வரவேற்பாளர்கள் ஏன் இந்தப் புன்னகையையும் பேரன்பையும் இழந்து நிற்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது. — ராஜி

192777

நல்வாழ்த்துக்கள்

இன்றைய நாகரிகத்திற்கு ஏற்ற பல புதுப்புது மாடல்களில் கூலிங்கிளாஸ், போட்டோ கிரே, போட்டோ பிரவுன், பவர்கிளாஸ் அனைத்தையும் சரியான விலையில் வாங்கிடச்
சிறந்த கண் மருத்துவர்களால்
பரிந்துரைக்கப்படும்
இடம்



தொலைபேசி : 29090

டைமண்ட் ஆப்டிகல்ஸ்

நெ. 2–A, ஈ. வே. ரா. சாலை,

புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

கிளை : 120, ஏ. கே. எஸ். காம்ப்ளெக்ஸ்,
பாளையம் பஜார், உறையூர்,
திருச்சிராப்பள்ளி – 620 003.

தரமான, தெளிவான, நயமான

"சேம்பர்" செங்கல்

கிடைக்குமிடம்

ஸ்ரீ லெக்ஷ்மி
செங்கல் தொழிற்சாலை

சி-12, மூன்றாவது குறுக்குச்சாலை

வடகிழக்கு விரிவாக்கம்

தில்லைநகர், திருச்சிராப்பள்ளி 620 018.

★

தொலைபேசி எண்

அலுவலகம் : திருச்சிராப்பள்ளி – 31525

தொழிலகம் : அன்பில் – 897–301

நல்வாழ்த்துக்கள்

MR. N. G. RAJU

STOCKIST :

THARANI CEMENTS
NEIDHALUR SOUTH (P.O.)
KULITHALAI TALUK
TIRUCHIRAPALLI DISTRICT
PIN – 639 110

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி : வீடு - 33874
கடை - 29734

ஸ்ரீ ஜெயராம் பாத்திரக்கடை

METAL MERCHANT

176, பெரிய கம்மாளத் தெரு,

திருச்சிராப்பள்ளி - 620 008.

With Best Compliments from

Phone: 40978

Authorised Dealers for

AMTREX
VIDEOCON
SHRI RAM USHA

Window and split Model Air Conditioners

a c r
Enterprises

1, Birds Road, Cantonment,
TIRUCHIRAPALLI - 620 001.

With best compliments from :

SARATHY ENTERPRISES
(Wholesale Chemists)
47/2, Hospital Road,
WORAIYUR,
TIRUCHIRAPALLI
620 003

BENSON DRUGS
(Pharmaceutical manufacturer)
703, First Floor,
Poonamallee High Road,
Aminjikarai
MADRAS – 600 029.

தொலைபேசி : 31728

நல்வாழ்த்துக்களுடன்

22 காரட் தங்க நகைகள்

மற்றும்

வெள்ளி ஆபரணங்களுக்கு

தேவி ஜுவல்லர்ஸ் A/C,

மலைவாசல்

38, சின்னக்கடை வீதி,

திருச்சிராப்பள்ளி - 620 002.

Sri Maheswari Finance Corporation

Sri Nathan Finance

7/15, BISHOP HEBER COMPLEX,

CHINNAKKADAI ST., TIRUCHIRAPALLI 620 002

NATHAN CHITS

PHONE: 31642

HIGH RATE OF INTEREST FOR FIXED DEPOSITS

நிரந்தர வைப்பு நிதிகளுக்கு		FOR FIXED DEPOSITS	
காலம்	வட்டி விகிதம்	Period	Rate of Interest
கால் டெபாசிட்	12%	Call Deposits	12%
6 மாதங்கள்	15%	6 Months	15%
13 மாதங்கள்	18%	13 Months	18%
நான்கு வருடங்கள்	இரட்டிப்புத் தொகை	Four Years	Double the Amount

ஏலச்சீட்டு				AUCTION CHITS			
குரூப்	தவணை	மாதம்	சீட்டுத்தொகை	Group	Instalment	Months	Chit Amount
A	5000	20	100000	A	5000	20	100000
B	2500	20	50000	B	2500	20	50000
C	1250	20	25000	C	1250	20	25000
D	500	20	10000	D	500	20	10000
E	250	20	5000	E	250	20	5000

எங்கள் நிறுவனங்களின் சிறப்பு அம்சங்கள்

1 வைப்பு நிதிகளுக்கு வட்டித்தொகை மாதா மாதம் உங்கள் வீடு தேடி வரும்.

2 ஏலம் எடுத்த மறு நிமிடமே சீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

3 கடைசி மாதம் முழுத்தொகையும் எவ்விதப் பிடித்தமுமின்றிக் கொடுக்கப்படும்.

4 முதல் மாதமும் ஏலம் உண்டு. 2வது சீட்டைத்தான் கம்பெனி எடுத்துக்கொள்ளும்.

5 கம்பெனி கமிஷன் முதல் 15 மாதங்களுக்கு மட்டுமே 5% கமிஷன்
16வது மாதம் 4% கமிஷன்
17வது மாதம் 3% கமிஷன்
18வது மாதம் 2% கமிஷன்
19வது மாதம் 1% கமிஷன்
20வது மாதம் (கடைசி) கமிஷன் இல்லை.

6 ஏலத் தேதிக்குள் சீட்டுப் பணம் செலுத்துபவர்களுக்குத் தவணைத் தொகையில் 1% ஊக்க போனஸாக வழங்கப்படும்.

நல்வாழ்த்துக்கள் !

தொலைபேசி : 25521

முகூர்த்தப் பட்டு, மில் ஜவுளிகள்
வாங்க கைராசியான ஸ்தாபனம்

லக்ஷ்மி சில்க்ஸ் சென்டர்

மலைவாசல்

திருச்சிராப்பள்ளி - 620 002.

நல்வாழ்த்துக்கள்

மருத்துவர் **ஆர். சின்னதுரை**

M.B.,B.S.,

மணப்பாறை.

Quality copies at Economic Price

38 PS **DEEPAM XEROX**

(Binding Free)

SR College Branch

Sankaran Pillai Road,

TIRUCHIRAPALLI – 620 002.

Branches at:

25. Y.V.D. Complex
Chathram Bus Stand,
Tiruchirapalli - 620 002.

Madura Hotel Complex
Central Bus Stand,
Tiruchirapalli - 620 001.

வரலாற்றாய்வு வளர்க



மருத்துவர்

கார்த்திகேயன் தாயப்பன்

பல் மருத்துவ வல்லுநர்

கோயிற்பட்டி.

தொலைபேசி: 41626 நிறுவனத் தோற்றம்: 1892

நம்பிக்கை நாணயத்திற்குச் சிறந்த இடம்

தங்க மெடல் பரிசு பெற்ற

நூற்றாண்டு விழாக் கடை

T. K. வீராசாமி நாயுடு

ஆப்டிகல்ஸ்

25-A/2, மேலப்புதூர், திருச்சிராப்பள்ளி - 620 001.

எங்களிடம் எல்லாவிதமான கண் கண்ணாடிகளும், பிரேம் மற்றும் வெளிநாட்டுக் கண்ணாடிகளும் கண் மருத்துவர் சீட்டுக்கு ஏற்றபடி நல்ல முறையில் செய்து தரப்படும்.

With Best Compliments from:

CHENDUR DIAGNOSTIC LABORATORIES

II AGRAHARAM, SALEM - 636 001.

நல்வாழ்த்துக்கள் :

சிவசக்தி மெடிக்கல்ஸ்

3, பராசக்தி காம்ப்ளக்ஸ்
தில்லைநகர் மெயின் ரோடு.
திருச்சிராப்பள்ளி – 620 018.

கிளை : ஸ்ரீ சிவசக்தி மெடிக்கல்ஸ்
டி. ஆர். பி. பாலி கிளினிக்
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018.

எல்லா நாட்களிலும்
காலை 7 மணி முதல் இரவு 12 மணி வரை கடை உண்டு.

வரலாறு இதழுக்கு வாழ்த்துக்கள்

★

திருமுருகன் மருந்துக்கடை
&
மகாலட்சுமி நிதிநிறுவனம்

18/1, கீழச்சத்திரம் சாலை,
தென்னூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

With best compliments from :

ICON COMPUTERS

Soft ware developement and Training

SIVALAYA COMPLEX

(Upstairs Ramba, Urvasi, Theatres)

CHINTHAMANI, TIRUCHIRAPALLI-620 002.

Come with confidence

Return with untold Story of Innovation.

நல்வாழ்த்துக்கள்

செல்லம்மை சிட்பண்ட் (பி) லிட்.,

19–தென்னூர் நெடுஞ்சாலை, தென்னூர்,

திருச்சிராப்பள்ளி - 620 017.

கீழ்க்கண்ட சீட்டுகள் நடக்கின்றன

A) ரூ. 15,000 D) ரூ. 50,000

B) ரூ. 20,000 E) ரூ. 90,000

C) ரூ. 25,000

சானகி கிரடிட்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ்

டெபாசிட்	வட்டி விகிதம்
பிக்சட் டெபாசிட்	18%
ரெக்கரிங் டெபாசிட்	12%
டெய்லி சேவிங்ஸ்	6%

இங்ஙனம்

டாக்டர் வி. எஸ். அழகப்பன் எம்.ஒ.எல்., எம்.லிட்., பிஎச்.டி..

அழ. பத்திரி நாராயணன் பி.எஸ்ஸி.,

டைரக்டர்கள்.

With best compliments from :

SRI MINAKSHI AGENCY

7A/4B, Reynolds Road,

Cantonment, TIRUCHIRAPALLI - 620 001.

With best compliments from :



REVATHI ENTERPRISES

C-77, Tenth Cross (west),

Thillai Nagar, TIRUCHIRAPALLI - 620 018.

With best compliments from

COMPUTER CANON XEROX

மிகத் தெளிவாகச் சிறந்த முறையில் காப்பிகள்
எடுக்கவும், ஒவ்வொரு ஜெராக்ஸ் தயாரிப்பும்
ஒரிஜினலாகக் கிடைக்கவும் மற்றும் ஆங்கிலத்தில்
டைப்பிங் செய்யவும் அணுகுவீர்

GOOD LUCK XEROX

106, N. M. Building,
Main Road, Palakkarai,
TIRUCHIRAPALLI – 620 008.

With best wishes

Phone : OFF: 48935 PP
RESI: 60676

For quality Xeroxing
and good service

38 PS

SANTHAM XEROX

65/3, K. K. R. Building,
(Near S. R. College),
SRC Road, TIRUCHIRAPALLI – 620 002.

Binding Facility Available.

192797

With Best Compliments From:

GEM LABORATORY
&
GENERAL LABS

STOCKIST

M/s. SASTHA PHARMA

1, ELEVENTH CROSS,
WESTERN EXTENSION,
THILLAI NAGAR,
TIRUCHIRAPALLI - 620 018.

39-13
16-46

With Best Compliments from :

Phone : 40592
Grams : 'PAL'

THE POPULAR AUTOMOBILES (P) LTD.,

4, BHARATHIAR SALAI,
TIRUCHIRAPALLI - 620 001.

Dealers For :

Ambassador Cars
Ambassador 1800 ISZ Cars
Contessa Classic Cars
Hindustan Trekkers
Isuzu 2000 c. c. Diesel Engines

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2. போன்: 25416.